# நூல் நிலையம்



அ. திருமலை முத்துசாமி

பண்புப் புத்தகம்

3

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# நூல் நிலையம்

அ. திருமலை முத்துசுவாமி

பண்புப் புத்தகம்



கலைவள்ளல் உயர் திரு

**கருமுத்து தியாகராச செட்டியார்**

அவர்கட்கு

ஆசிரியனது அன்புக் காணிக்கை

பண்புப் புத்தகம் 3
முதற் பதிப்பு ஜூன் 1955

விலை ரூ. 1—4—0
நூல்நிலையப் பதிப்பு ரூ. 1—12—0

STAR PUBLICATIONS

TRIPLICANE
MADRAS
★
WEST TOWER STREET
MADURAI

அச்சிட்டது : நேஷனல் ஆர்ட் பிரஸ், 91, மவுண்ட் ரோட், சென்னை-18

# முன்னுரை

நூல் நிலையம் இல்லாத ஊரின் அழகும் பாழ், அறிவும் பாழ் என்ற நிலை இன்று ஏற்பட்டு விட்டது. அச்சுப் பொறியின் வளர்ச்சியால் நூல்களின் தொகையும் பெருகியது; பயனும் பெருகியது; ஆகவே நூல் நிலையம் ஆங்காங்கே ஏற்பட்டு வளர்தல் ஓர் இயக்கமாகவே செழித்து விட்டது. பொது மக்களின் நல் வாழ்க்கைக்கு உரிய சமூகத் தொண்டுகளில் நூல் நிலையமும் சிறப்பிடம் பெற்றுள்ளது.

இவ்வாறு காலப்போக்கில் வளர்ந்துள்ள இப் புதுநலன் அனைவர்க்கும் உரியதாக வேண்டுமாயின், உலகில் முற்போக்கு அடைந்துள்ள நாடுகளில் நூல் நிலையம் எவ்வாறு அமைந்து பயன்படுகிறது என்பதை நன்கு அறிதல் வேண்டும். நம் நாட்டு மக்களின் வாழ்க்கை நிலைக்கும் மற்ற வாய்ப்புக்கட்கும் ஏற்றவாறு எவ்வெவ்வாறு இங்கு அமைத்தல் வேண்டும் என்றும் அறிதல் கடமையாகும். ஆகவே, நூல் நிலையத்தைப் பற்றிய ஆராய்ச்சியும் விளக்கமும் தேவையாகின்றன. ஆங்கிலம் முதலிய மொழிகளில் இத்துறையில் எழுந்துள்ள நூல்கள் பல உள்ளன. தமிழில் விளக்கமாகவும் தெளிவாகவும் நூல் இல்லாதிருந்த குறை இப்போது தீர்கின்றது திருவாளர் அ. திருமலை முத்துசாமி, பி.ஏ., ஆனர்ஸ் பி.டி. நூல் நிலையத் துறையில் கற்பன கற்று, மாவட்ட நூல் நிலைய அலுவலராகவும்

கல்லூரி நூல் நிலையப் பொறுப்பினராகவும் இருந்து நல்ல அனுபவமும் பெற்று, இந் நூலை இயற்றியிருப்பது போற்றத் தக்க தொண்டு ஆகும். நூல் நிலையத்தின் தொடக்கம் முதல் இன்றைய வளர்ச்சி வரையில் முறைப்படுத்தி எழுதியதோடு, அந்தந்த நாடுகளில் நூல் நிலைய அமைப்பில் உள்ள சிறப்பியல்புகளையும் விளக்கியுள்ளார். உலக நூல் நிலையங்களை அளந்து கூறும் பரப்பிற்கு இடையே தமிழ் நாட்டு நூல் நிலையங்களும் தக்க இடம்பெற்று ஆராயப்படுகின்றன. தேவைக்கு ஏற்ப நூல் நிலையங்களைப் போற்றும் முறைகளும் ஆங்காங்கே எடுத்துக் கூறப்படுகின்றன.

ஆசிரியரின் முயற்சி காலத்திற்கு ஏற்ற நல்ல தொண்டு என்பதில் ஐயம் இல்லை. தமிழகம் இதனை வரவேற்பதோடு, மேலும் இத்துறையில் பல பணிகளை எதிர்பார்க்கும் என நம்புகின்றேன்.

மு. வரதராசன்

# ஆசிரியர் முன்னுரை

"பேசுவதில் பயனில்லை, ஏதாவது எழுது"—இப் பொன் மொழியினைக் கூறிய பெரியார்கள் இருவர். ஒருவர் எனது பேராசிரியர் டாக்டர். **மு. வரதராசனர்.** மற்றொருவர் எனது நண்பரும், திருவனந்தபுரம் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியருமாகிய திரு. **வி. ஐ. சுப்பிரமணியம்** ஆகும். இவ்விரு பெரியார்களும் என்னைக் காணுந் தோறெல்லாம் "ஏதாவது எழுதினுயா அல்லது எழுதுகின்ருயா?" என்று கேட்கவே, எனக்கும் ஏதாவது ஒன்றினை எழுதியாக வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அந்த எண்ணத்தின் அடிப்படையில் உருவானதே இச் சிறு நூல்.

> *"பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
> *தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்"*

என்ற பாரதியின் கனவை நனவாக்க, இன்று எத்தனையோ தமிழ்ப்பெரு மக்கள் எண்ணிறந்த நூற்களை எழுதி வருகின்றனர். அத்தகைய வரிசையில் ஒன்ருக என்னுடைய படைப்பினைத் தமிழ் நாடு ஏற்றுக் கொள்ளும் என நம்புகின்றேன்,

இதனைச் சிறந்த முறையில் வெளியிட்டுதவிய ஸ்டார் பிரசுரத்தாருக்கும், உடன் உழைத்த நண்பர்கட்கும், முன்னுரை வழங்கியுள்ள எனது பேராசிரியர்க்கும் என் உளம் நிறைந்த நன்றி.

*மதுரை,*
*ஜுன், 1955*

**அ. திருமலை முத்துசுவாமி**

# பொருளடக்கம்


1. தோற்றுவாய் ... 1

2. பொது நூலக வளர்ச்சி: ... 9

   1. இங்கிலாந்தில் ... 9
   2. அமெரிக்காவில் ... 18
   3. பிற நாடுகளில் ... 25
   4. இந்தியாவில் ... 34
   5. இந்தியக் குடியரசில் ... 55
   6. மாவட்ட நூலக அமைப்பு முறை ... 64

3. உலகில் பெரிய நூலகங்கள் ... 75

   1. முதல் தேசிய நூலகம் ... 75
   2. இலெனின் நூலகம் ... 77
   3. காங்கிரசு நூலகம் ... 79
   4. இலண்டன் பொருட் காட்சி சாலை நூலகம் ... 83
   5. பெல்வடீர் நூலகம் ... 83

நூலகத்தார்க்கு ... 87

தமிழ் நூற்களை வகைப்படுத்தும் முறை ... 93

# நூல் நிலையம்

## 1. தோற்றுவாய்!

### அறிஞர் எமர்சன்

"நூலகத்தில் உனக்குக் கிடைப்பன எவையென்பதை எண்ணிப் பார்! பல்லாயிரம் ஆண்டுகளாக விளங்கும் இப் பாரில் வாழ்ந்தவருள் தலைசிறந்த அறிஞர், கவிஞர் தம் கல்வியின் பயனாக விழுமிய கருத்துக்களைச் சிறந்த முறையிலும் சீரிய ஒழுங்கிலும் தொகுத்த தொகுப்புக் களின் தொகுதி உன்னுடன் உறவாடக் காத்திருக் கின்றன. தம் உயிர்த் தோழர்களுக்குக்கூட அவர்கள் முற்றிலும் மனந்திறந்து சொல்லியிருக்க முடியாத உயரிய கருத்துக்கள் தெள்ளத் தெளிய வரையப்பட்டு ஏதோ ஓர் ஊழியில் வரும் என்னிடம் தரப்பட்டுள்ளன," என்ற அமெரிக்க அறிஞர் எமர்சனின் பொன்மொழிகள் நூலகங்களின் பெருமையினை நன்கு எடுத்துக் காட்டும்.

### "லைப்ரெரி" (Library)

நூலகத்திற்குரிய ஆங்கிலச் சொல் 'லைப்ரெரி' ஆகும்! "லிபர்" என்ற லத்தீன் சொல்லின் அடியாகப் பிறந்தது தான் 'லைப்ரெரி'. 'லிபர்' என்ற வார்த்தை நூற்களின்

தொகுதியைக் குறிக்கும். சீன மொழியில், "சாங்க் சுஆ" என்ற சொல் நூலகத்தினைக் குறிப்பதற்கு வழங்கப்படுகிறது. இச்சொல்லிற்குப் பொருள் "நூற்களைச் சேகரித்து வைக்கும் இடம்," என்பதாகும். பேராசிரியர் கில்ப்ரெக்ட் என்ற அமெரிக்க அறிஞர் பாபிலோன் நகரத்தின் மண்மேடு ஒன்றுக்கடியில் கண்டுபிடித்த களிமண் தகடுகளால் ஆகிய நூலகம் நூலகத்தின் பழமையினைப்பாரெங்கும் பரப்பி நிற்கின்றது. இந்நூலகத்தின் காலம் கி. மு. 5000 என்று அறிஞர்கள் அறைகின்றனர். இங்கு 2500 களி மண் தகடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

**கோயிலே முதல் நூலகம்!**

முதலில் மரத்திலோ அன்றி கல்லிலோ செதுக்கிய சில குறிகளே வரி வடிவமாகும். முதற் புத்தகம் களி மண் தகடுகளால் ஆகியது என்றும், முதல் நூலகம் கோயிலென்றும், நூலகக் காப்பாளர் கோயில் குருக்களே என்றும் சில சிந்தனையாளர்கள் கருதுகின்றனர். இவ்வுண்மையினை 'அசீரியா'விற் கண்டுபிடிக்கப்பட்ட மற்றொரு களி மண் நூலகம் நன்கு வலியுறுத்தும். இந் நூலகத்திலிருந்த களி மண் தகடுகள் இன்றும் லண்டன் பொருட்காட்சிசாலையில் உள்ளன.

**வரை கருவிகள்**

முதலில் மக்கள் எழுதுவதற்குக் கற்சுவர், மரக் கட்டை, களி மண் தகடு, செங்கல், இவைகளையே பயன் படுத்தினர். பின்னர் 'பேப்பிரசு' (Papyrus) என்ற செடியின் பட்டையும், கன்று, ஆடு இவைகளது பதம் செய்யப்பட்ட தோலும் முறையே பயன்படுத்தப்பட்டன எகிப்து எழுத்துக்களில் எழுதிய 'பேப்பிரசு ஏடு' ஒன்று பாரெல்லாம் புகழும் பாரிசு நகரிலுள்ள, "பிப்ளியோதெக்" என்னும் பிரெஞ்சு நாட்டுத் தேசிய நூலகத்தில் உள்ளது.

தற்கால நூலகங்கள் எல்லாம் சமூக, பொருளாதார, அரசியல் மாறுதல்களின் பயனாகத் தோன்றியவைகளாகும். தாள் (Paper), அச்சுப் பொறி (Printing machine) இவையிரண்டுமே இன்றைய நூலகக் கட்டிடத்தினைத் தாங்கி நிற்கும் இருபெருந் தூண்களாகும்.

### தண்டமிழ் நாட்டில்!

நமது பெட்டகமாகிய, தண்டமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் நூலகம் புதியதன்று. பண்டைத் தமிழகத்தில் பெரும் நூல்நிலையங்களும், தற்காலத்தைப் போன்று நூல் நிலைய முறையும் இருந்ததெனக் கூறலாம். முத்தமிழ் வளர்த்த முச்சங்கங்களைத் தமிழ்நாட்டுப் பெரு நூலகங்கள் என்றே இயம்பலாம். புலவர்களால் இயற்றப்பட்ட நூற்கள் அனைத்தும் இச்சங்கங்களிற்றான் அரங்கேறின. மேலும், அங்கேயே அவர்கள் எழுதிய ஓலைச் சுவடிகள் சேகரித்து வைக்கப்பட்டன. "நூற்களை சாலத் தொகுத்தும்" என்ற நாலடியாரிற் காணப்படும் வரி மேற்கூறிய உண்மையினை உறுதிப்படுத்தும். சிறந்த நூற்கள் "படி" (Copy) எடுக்கப்பட்டுக் கற்றறிந்த சிலரிடத்தும், கோவில்களுக்கும் கொடுக்கப்பட்டன. பெரிய கோவில்களின் திருச்சுற்று மாளிகை படிப்பகமாகப் பண்டைக் காலத்தில் விளங்கியது. கிடைத்தற்கரிய ஓலைச் சுவடிகள் இப்படிப்பகங்களில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. இச்சுவடிகளைப் பழுது பார்த்தும், படியெடுத்தும், பாதுகாத்தும் வந்தவர் 'விரகர்' என அழைக்கப்பட்டனர். சோழர் காலத்தில் இத்தகைய கோவில் நூலகம் 'சரசுவதிப் பண்டாரம்' என அழைக்கப்பட்டது.

### தஞ்சைச் சரசுவதி மகால் நூலகம்!

இன்றும் நின்று நிலவும் தமிழ்நாட்டுப் புராதன நூலகம் தஞ்சையில் உள்ள 'சரசுவதி மகால்' நூலக

மாகும். தஞ்சையை ஆண்ட மகாராட்டிர மன்னன் 'சரபோசியே' இந்நூலகத்தினைத் தோற்றிய தந்தையாகும். மேனாட்டுக் கலைகளிலும் நம் நாட்டுக் கலைகளிலும் சிறந்த பயிற்சி பெற்றிருந்த இம்மன்னன் தன்னைப் போன்று நாட்டு மக்களும் 'கல்வியால் கலை நலம் பெறுதல் வேண்டும்' என்றெண்ணி, சிறந்ததொரு நூலகத்தினைத் தொடங்குதற் பொருட்டுக் கி. பி. 1820-லிருந்து 1832 வரை லண்டன், பாரிசு, மியூனிச், லீப்சிக், ஆம்சர் டாம், கோபன் கேகன் முதலிய ஐரோப்பிய நகரங்களிலிருந்து ஏராளமான கலை நூற்களை வரவழைத்தார். இவைகளில், அறிவியல், நில நூல், வரலாறு, அரசியல், போர் முறை, இலக்கியம், இலக்கணம், இசை பற்றிய நூற்கள் ஏழாயிரமாகும். ஐநூறுக்கு மேற்பட்ட வைத்திய நூற்களும், நூற்றுக்கணக்கான நாட்டுப் படங்களும், ஆயிரக்கணக்கான உடற்கூற்றுப் படங்களும், வைத்திய மூலிகைகள், செடி, கொடி, பூ, பழம், மரங்கள் இவற்றின் படங்களும் ஐரோப்பிய இசை பற்றிய பல நூற்களும் மேனாட்டு, நம் நாட்டு ஓவியங்களும் இந்நூலகத்தில் உள்ளன. இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து இம்மன்னர் பத்தாயிரம் வட நாட்டுச் சுவடிகளைச் சேகரித்தார். இங்குள்ள சுவடிகளின் மொத்த எண்ணிக்கை நாற்பதாயிரம். சென்னை அரசியலார் கொடுக்கும் நன்கொடையினைக் கொண்டு அங்குள்ள சுவடிகளிற் சில நூற்களாக வெளியிடப்படுகின்றன. சென்ற நானூறு வருடங்களாக வளர்ந்து வரும் இந்நூலகம் உண்மையிலேயே தமிழ்நாட்டின் தலைசிறந்த நூற்களஞ்சியமாகும். இக்காலத்தைப் போன்றே மக்கள் இந்நூலகத்தினைத் தொடக்கத்திலிருந்தே பயன்படுத்தி வருகின்றனர். நூற்களை வீட்டிற்கு எடுத்துச் செல்ல விரும்புவோர் சுவடிகளைப் படி எடுக்கலாமே ஒழிய அவைகளை வீட்டிற்கு எடுத்துச் செல்ல இயலாது.

**காஞ்சியிற் கல்லூரி !**

'கல்வியிற் கரையிலாக் காஞ்சிமா நகர்' என்று அப்பராற் புகழ்ந்து பேசப்படும் காஞ்சியில் பண்டைக் காலத்திலே புகழ்பெற்ற கல்லூரி ஒன்றிருந்தது. கதம்ப அரச மரபைத் தோற்றுவித்த மயூரசன்மனும், பேராசிரியர் தர்ம பாலரும், இக்கல்லூரியிற் படித்தவர்கள் என்று வரலாறு கூறுகிறது. மேலும் திருப்பாதிரிப்புலியூர், பாகூர், சோழசிங்கபுரம் முதலிய இடங்களிலும் தமிழ்க் கல்லூரிகள் விளங்கின. இக்கல்லூரிகளிலெல்லாம் பல கலை நூற்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன.

**பழம்பெரும் நூலகங்கள் !**

மேற்காசியா, எகிப்து, இவ்விரண்டு இடங்களிலும் வாழும் மக்கள்தான் முதன் முதலில் எழுதக் கற்றுக் கொண்டவர்கள் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். முதன் முதலில் இவர்கள் தங்கள் நாட்டுச் சட்ட திட்டங்களையும், நன்கொடை நல்கியவர்களது பெயர்ப் பட்டியலையும், சமயப் பாடல்களையும், கருத்துக்களையுமே எழுதத் தொடங்கினர். இவைகளெல்லாம் மாட மாளிகைகளிலும் கோவில்களிலுமே இடம் பெற்றன. ஆறுயிரம் ஆண்டுகளுக்குமுன்னரே இவ்வாறு நூற்களை ஓரிடத்தில் சேகரித்து வைக்கக்கூடிய எண்ணம் மக்களுக்கு ஏற்பட்டது. இட்பு (Idfu) என்ற இடத்தில் சிறந்ததொரு நூலகக் கட்டிடம் செம்மையுடன் பல ஆண்டுகளுக்கு முன்னரே கட்டப் பட்டது. அந்நூலகத்திலிருந்த நூற்களின் பட்டியல் அந் நூலகக் சுற்சுவர்களில் பொறிக்கப்பட்டிருக்கிறது. சக்கர வர்த்தி ஒசி மாண்டயசினல் (Osymandyas) தொடங்கப் பட்ட நூலகத்தின்காலம் கி. மு. 1300 என்றும், அந்நூலகம் மன நோயினைத் தீர்க்கும் மருத்துவக்கூடமாக மக்களாற் கருதப்பட்டது என்றும் ஒரு கிரேக்க எழுத்தாளர் எழுதியுள்ளார்.

**மெசபடோமியாவில்...!**

மெசபடோமியாப் புராதன நூலகங்களில் மிகப் பெரிய நூலகம் நைந்வே (Nineveh) என்ற இடத்திற் பேரரசர் அசர்பானிபாலி (Assurbanipal)னல் கி. மு. 650ல் தொடங்கப்பட்ட நூலகமாகும். இந்நூலகத்தினைக் கண்டு பிடித்தவர் புதைபொருள் ஆராய்ச்சியாளர், சர். என்றி லாயர்டு ஆவர். இங்கு முப்பதாயிரம் களிமண் தகடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. உரிமையாளர்களின் குறியீடு களும், நூற்களை வகைப்படுத்திய குறிகளும் இக்களிமண் தகடுகளிற் காணப்படுவதால் இந்நூலகம் மக்களுக்காகவே அரசரால் திறக்கப்பட்டிருந்தது என்பதை அறிய முடி கின்றது.

**கிரேக்க நாட்டில்...!**

புராதன மக்களில், கல்வியிலும் கலையிலும் மிகச் சிறந்து விளங்கியவர்கள் கிரேக்கர்களாகும். அறிஞர் அரிச்டாடில் எண்ணிறந்த நூற்களைச் சேகரித்து, அவை களைத் தம் மாணவர்கள் பயன்படுத்தும்படிச் செய்தார். அவரது பள்ளியிற் பயின்ற மாணவர்களில் ஒருவன் ஏதென்சு (Athens) என்னும் நகரிலிருந்து வந்த அரசியற் கைதியாகும். எகிப்து நாட்டு மன்னன் முதல் தாலமி (Plolemy I) மிகத் தொன்மையான நூலகங்களில் ஒன்றான "அலெக்சாண்டிரியா (Alexandria) நூலகத் தினைத் தொடங்குவதற்குக் காரணமாக இருந்தவன் அவ் வேதன்சு நாட்டுக் கைதியே ஆம். இந்நூலகமானது கிரேக்கர்களால், உயிரினும் மேலாக ஓம்பப்பட்டதால், நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்வ தாயிற்று. இந்நூலகத்தில் ஒரு காலத்தில் ஏழு லட்சம் நூற்கள் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. கி. மு. 47ல் எகிப்து நாட்டின் மீது போர் தொடுத்த மாவீரன் ஜூலியசு சீசர் இந்நூலகத்தின் ஒரு பகுதியின் அழிவிற்குக் காரண

மாக இருந்தான். உரோமாபுரிப் பேரரசு (Roman Empire) சீர்குலைந்த காலத்தில், மன்னன் தியோடாசியசி (Theodosius)னால் எல்லா நூலகங்களும் மூடப்பட்டன

**சீன நூலகங்கள்!**

அடுத்துச் சில சீன நூலகங்களைப் பற்றிச் சிறிது சிந்திப்பாம். கி. மு. 1122—256ல் 'சூ' முடியரசின் (Shou Dynasty) காலத்தில் சிறந்ததொரு அரசாங்க நூலகம் உருவாக்கப்பட்டது. ஆனால் மாயம், மந்திரம், மருத்துவம், வேளாண்மை இவை பற்றிய நூற்கள் எரிக்கப்பட வேண்டுமென்று அரசன் ஆணை பிறப்பித்ததோடன்றி, அவனே அந்தப் பணியில் ஈடுபட்டுப் பல நூற்களை எரி தணலில் இட்டான். ஆனால் சீனத்துச் சிந்தனைச் செம்மல் எனச் சிறப்பித்துப் பேசப்பெறும் கன்பூசியசு போன்ற பெருமக்களால் எழுதப்பட்ட நூற்கள் இந்நூலகத்தில் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வந்தது குறிப்பிடத் தக்கதாகும். கடந்த நூற்றாண்டிற்கு முன்னர்தான் 'சீயோவு' (Hsiaowu) நூலகங்களை யெல்லாம் சீர்படுத்தியதோடு, சீன இலக்கியங்களையும் ஏடுகளையும் சேகரித்து நூலகங்களில் இடம்பெறச் செய்தான். 'சங்யூயான்', 'மிங்' முடியரசுகளின் (Sungyuan & Ming Dynasties) காலத்தில் மாணவர்கள் பொருட்டுப் பல அரசாங்க நூலகங்கள் திறக்கப்பட்டன. இந்நூலகங்களில் இலக்கிய தத்துவ சமயத் துறைகளைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறும் ஏட்டுச்சுவடிகள், எண்ணற்றன இடம் பெற்றிருந்தன.

**கிறித்தவ மடங்களில்!**

கி. பி. 4ம் நூற்றாண்டிற்குப் பின்னர், மேற்கு வல்லரசுகளில் சமயத்துறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் காரணமாய்க் கிறித்தவ மடங்களில் சமயச் சார்புடைய நூற்கள்

பல சேகரித்து வைக்கப்பட்டன. இவ்வாறு தோன்றிய நூலகங்களில் செயின்ட் பெனடிக்ட் (St. Benedict) நூலகம், குறிப்பிடத் தக்கதாகும். இந்நூலகத்தில் தற்கால முறைப்படி நூற்கள் கொடுத்து வாங்கப்பட்டன.

**மறுமலர்ச்சி!**

கி. பி. 15வது நூற்றுண்டில் உலகோர் வியக்கும் வண்ணம் பல மாறுதல்கள் நூலகத் துறையில் ஏற்பட்டன. இதற்குக் காரணம் அச்சடிக்கும் முறையினை மக்கள் அறிந்ததே. எண்ணிறந்த நூற்கள் வெளியிடப்பட்டன. இப்பெரு மாற்றத்தின் காரணமாய் எல்லா வசதிகளும் நிரம்பிய பெரும் பெரும் நூலகக் கட்டிடங்கள் எழுப்பப்பட்டன. அவ்வாறு எழுந்த நூலகங்களில் பாரிசு நாட்டுத் தேசிய நூலகமும் இங்கிலாந்து நாட்டுப் பிரிட்டன் பொருட் காட்சிச் சாலை நூலகமும், மாஸ்கோவில் இருக்கும் லெனின் நூலகமும் இன்று இத்தரணியில் தலை சிறந்து விளங்குகின்றன.

# 2. பொது நூலக வளர்ச்சி

## இங்கிலாந்தில்

**கி. பி. 15 வது நூற்றாண்டில்:**

எழில்மிகுந்து விளங்கும் இங்கிலாந்து நாட்டில் ஏறத்தாழக் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டிற்கு முன்னரே, பொது நூலகங்கள் நிறுவப்பட்டு விட்டன என எடுத்தியம்பலாம். எடுத்துக் காட்டாகக் கி. பி. 1421ல், "கில்டுஹால்" என்னும் இடத்தில் சர் ரிச்சர்டு விட்டிங்டன் (Sir Richard Whittington) என்னும் பெரியாரால் தொடங்கப் பெற்ற பொது நூல் நிலையத்தினைக் கூறலாம். மக்கள் பயன் பெறட்டும் என்ற பெரு நோக்கோடு தம்மிடமிருந்த கிடைத்தற்கரிய பல புத்தகங்களை ஜான் கார்ப்பெண்டர் என்பவர் இந்நூலகத்திற்குக் கொடுத்துதவினார். ஆனால் இந்நூலகம் 16வது நூற்றாண்டின் மத்தியில் சாமர்செட் கோமகனான எட்வர்ட் என்பவரால் வாங்கப்படவே, இந்நூலகத்தினைப் பொது மக்கள் பயன்படுத்த முடியாது போயிற்று.

**கி. பி. 17-வது நூற்றாண்டில்:**

நார்விச், பிரிச்டல், இப்சுவிச், லெச்டர் என்ற நான்கு இடங்களிலும் நகர நூலகங்களும் (Town Libraries) பக்கிங்காம்சயர் என்னுமிடத்தில் ஒரு கிராமிய இலவச நூலகமும் இந்நூற்றாண்டில் திறக்கப்பட்டன. ஆனால் மக்களிடையே ஆர்வம் இல்லாது போயினமையால், இந்நூலகங்கள் விரைவில் வளர்ச்சியுறாது போயின.

**கி. பி. 18-வது நூற்ருண்டில்:**

இங்கிலாந்து நாட்டில் இந் நூற்ருண்டில்தான், நூலகத் துறையில் ஒரு மறு மலர்ச்சி ஏற்பட்டதெனக் கூறலாம். இதற்குக் காரணமாக இருந்தவர்கள் டாக்டர் பிரேயும் (Bray) தாமசுகிர்க்வுட்டுமாகும். (Thomas Kirkwood) இவர்களது சலியாத உழைப்பின் காரண மாய் கிராமிய நூலகங்கள் பலதிறக்கப்பட்டன. வில்லியம் ஈவர்ட் (William Ewart) என்பவரது பெரு முயற்சியும் இங்கு பாராட்டுதற்குரியதாகும். இவர் 'டம்ப்ரய்சு' என்ற பகுதியில் வாழும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளு மன்ற உறுப்பினராவர். இவர் "பொது நூலகங்கள் மக்களுக்காக மக்களாலேயே நடத்தப் பெறவேண்டும்" என்ற கொள்கைக்காகப் பெரிதும் உழைத்து வெற்றியும் கண்டவராவார். மக்களுக்காக இந்நூற்ருண்டில் தொடங் கப்பெற்ற பொது நூலகங்களின் ஆட்சிப் பொறுப்பினை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிக் குழுவினரே (elected local council) மேற்கொண்டிருந்தனர். மக்க ளிடமிருந்து பெற்ற பொதுவரிப் பணத்தில் ஒரு பகுதி நூலகச் செலவிற்கு ஒதுக்கப்பட்டது. இதுபற்றிய வரவு செலவுத் திட்டம் ஊராட்சிக் குழுவினரது முடிவுகளைப் பொறுத்ததாகும். நூலகக் கட்டணம் ஏதுமின்றி மக்கள் இந்நூலகங்களைப் பயன் படுத்தும் பேற்றினைப் பெற்றுப் பேரின்பமடைந்தனர். இதற்குப் பின்னரே இவ்வடிப் படையில், நூலகத்துறையில் சிறந்ததொரு வளர்ச்சியினைக் காணுகின்ருேம்.

**கி. பி. 19-வது நூற்ருண்டில்:**

தேர்ந்தெடுக்கப்பட்ட நூலகக் குழுவினரால் (Select committee) பொது நூலகங்களைப் பற்றிய அறிக்கை ஒன்று கி. பி. 1849ல் வெளியிடப்பட்டது. வில்லியம்

ஈவர்ட்டே இக்குழுவின் தலைவராவார். இதற்கு நாலாண்டு களுக்கு முன் கொண்டுவரப்பட்ட பொருட்காட்சிச் சாலைச் சட்டத்திற்குக் (Museums Act) காரணமாக இருந்தவரும் இவரே. இச்சட்டத்தின்படி ஊராட்சிக் குழுவினர் மக்களுக்காக வேண்டி, அவர்களது வரிப்பணத் திலிருந்து செலவு செய்து பொருட்காட்சிச் சாலைகளைத் திறந்தனர். இச் சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன் உடனடியாக ஏழு நகரங்களில் பொருட்காட்சிச் சாலைகள் திறக்கப்பட்டன. இவ்வாறு திறக்கப்பட்ட பொருட் காட்சிச் சாலைகளில் ஒன்றுதான், இன்று உலகோர் உயர்த் திப் பேசும் பிரிட்டிசு பொருட்காட்சி சாலையாகும். (British Museum, London) இங்கு பணியாற்றிய எட்வர்ட் எட்வர்ட்சு (Edward Edwards) என்பவர் பிற நாட்டு நூலகத்துறை பற்றிய புள்ளி விவரங்களை எல்லாம் சேக ரித்து வெளியிடச் செய்தார். இவர் தந்த புள்ளி விவரங் களையெல்லாம் ஒன்று விடாது படித்த ஈவர்ட், பொது நூலக மசோதா ஒன்றினைத் தயாரித்துக் கி. பி. 1850-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் பாராளு மன்றத்தின் முன் கொண்டு வந்தார். ஜூலை மாதத்தில் இம் மசோதா, பல எதிர்ப்புக்களிடையே, நிறைவேறவே, ஆகஸ்ட் 14ல் இம் மசோதா நூலகச் சட்டமாக (Library Act) ஆகியது. 10,000க்கு மேற்பட்ட மக்கள் தொகை உடைய இங்கி லாந்து நாட்டு நகரங்களிலெல்லாம் இச் சட்டம் நடை முறைக்குக் கொண்டுவரப்பட்டது. இச் சட்டத்தின்படி சொத்து வரியுடன் அரைப்பென்னி நூலக வரியாக மக்க ளிடமிருந்து வாங்கப்பட்டது. நூலகக் கட்டிட வாடகைக் கும், நூலகத்தில் பணி புரிவோரது சம்பளத்திற்கும் தான் இப்பணம் போதுமானதாயிருந்தது. நூல்களை நன்கொடை யாக மக்களிடமிருந்து பெற்றனர். மக்களது அளவிடற் கரிய ஆர்வத்தினைக் கண்ட அரசியலார் 'அரைப் பென்னி' வரியினை ஒரு பென்னியாக உயர்த்தினர். 1853ல் அயர்

லாந்து, ஸ்காட்லாந்து இவ்விரண்டிடங்களிலும் கூட இச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

தொடக்கத்தில் நூலக வளர்ச்சி ஆமை வேகத்தில் தான் இருந்தது. முதல் பத்தாண்டுகளில் இருபத்து நான்கு இடங்களில்தான் இச் சட்டம் அமுலிலிருந்தது. நார்விச் நகரில்தான் முதன் முதலில் இச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் முதன் முதலில் நூலகங் களைத் தொடங்கிய பீடும் பெருமையும் வின்செஸ்டர், மான் செஸ்டர் நகரங்களைத்தான் சாரும். மான்செஸ்டர் நூல கத் தலைவராய் 'எட்வர்ட் எட்வர்ட்சு' நியமிக்கப்பட்டார். இந் நூலகத்தில்தான் பிரிட்டிசு நூலக நலப் பணிகள் உருவாதற்கான வழி முறைகள் வகுக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து, நார்விச், சால்போர்டு, பிரிக்டன், டால்டன், இப்சுவிச், ஆக்சுபோர்டு, லிவர்பூல், பிளாக்பர்ன், கேம் பிரிட்ஜ், செப்பீல்டு, கெர்ட் போர்டு, கிட்டர்மினிசுடர், விச்பீல்டு, மெயிட்சுடோன், பிர்கென்கெட், லியாமிங்டன் ச்பா, வெஸ்ட் மினிஸ்டர், ஏர்ட்ரய், கான்டர்பரி, சுண்டர் லண்டு, வால்சால், என்ற இருபத்திரண்டு இடங்களில் பொது நூலகங்கள் திறக்கப்பட்டன. காலமும் அறிவும் வளர்ந்து வருதல் போல நூலகத்தின் எண்ணிக்கையும் வளருவதாயிற்று. பத்தொன்பதாவது நூற்றுண்டின் இறுதியில் தொண்ணூற்றிரண்டு நூலகங்கள் விளங்க லாயின.

1897-ஆம் ஆண்டில் நூலகச் சங்கம் (Library Association) ஒன்று தொடங்கப்பட்டது. பொது நூலகத் தலைவர்களும், பிற நூலக அலுவலர்களும், நூலக வளர்ச்சி யில் ஆர்வமும் அக்கறையும் காட்டியவர்களும், இச் சங்க உறுப்பினர்களாயினர். இச்சங்க உறுப்பினர்களில் செப் பீல்டு நகரப் பொது நூலகத்தில் பணியாற்றிய தாமசுகிரீன் (Thomas Green) குறிப்பிடத் தக்கவராவர். மேடைகள்

தோறும் பேசியும், ஏடுகள் தோறும் எழுதியும், இல்லந் தோறும் மக்கள் உள்ளந்தோறும் நூலகங்களின் சிறப்பினைப் பதிய வைத்தவர் இவரே. இலவசப் பொது நூலகங்கள் என்ற 463 பக்கங்கள் கொண்ட, நூலகத் துறை நூல்களுள் தலை சிறந்த நூலாகக் கருதப்படும் நூலொன்றை எழுதி வெளியிட்டார். நூலகங்களைப் பற்றிய செய்திகளையும் அவை புரியும் சேவைகளையும் விளக்கிப் புதிய முறையில் வெளியிடப்பட்ட இந்நூல் பல்வேறு தலைப்புக்களில் பல பதிப்புக்களாக உலகெங்கும் பரவின. கி. பி. 1910 லிருந்து 1937-ஆம் ஆண்டு வரை இப்புத்தகத்தின் பல பதிப்புக்களை வெளியிட்டவர் பிலிப்சு என்பவராவர். 1948ல் இறுதியாக வெளிவந்த பதிப்பின் பதிப்பாசிரியர் ஜேம்சு கிளார்க்காவர். எண்ணிறந்த மக்களுக்கு நூலகத்தைப் பற்றிய அரிய செய்திகளை விளக்கி ஆயிரம் ஆயிரம் மக்களை அந்த அறப்பணியில் ஈடுபடுத்திய அருமையும் பெருமையும் அந்நூலுக்கு உரியன. நூலகத் துறையைப் பற்றிய புள்ளி விபரங்களையும் செயல் முறைகளையும் விளக்கமாக இந்நூல் எடுத்துரைக்கின்றது. மேலும் இத் துறையில் ஈடுபடுவோர்க்குரிய தொழில் நுணுக்கங்களையும் தெளிவுபட இந்நூல் தெரிவிக்கின்றது. 1890ஆம் ஆண்டில் வெளிவந்த மூன்றாவது பதிப்பில், நூலாசிரியர் "நான்கு ஆண்டுகட்கு முன்னர் 133 இடங்களில்தான் நூலகச் சட்டம் நிறைவேறியிருந்தது; இன்று 208 இடங்களில் இந்நூலகச்சட்டம் அமுலிலிருக்கின்றது," என்று எழுதி உள்ளார். இத்தகைய வளர்ச்சிக்கும் அறிவு மலர்ச்சிக்கும் காரணமாக இருந்தவர் அவரே. அத்தகைய பெரியாருக்கு நூலக உலகம் என்றென்றும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையது. வளர்ந்து வரும் நூலகத்துறையில் 1892-ஆம் ஆண்டில் மற்றொரு மறு மலர்ச்சி ஏற்பட்டது. இந்த மறுமலர்ச்சிக்கு ஜேம்சு டப் பிரவுன் என்பார் தந்தையாவர். இவரால் எழுதப்பட்ட நூலகத் துறை

பற்றிய அளவிறந்த, அநாமதேயக் கட்டுரைகள் மக்களிடையே அறிவாற்றலையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தின. நூலகத்திற்கு வரும் மக்கள் பிறர் உதவியின்றி, உளம் விரும்பிய நூல்களோடு உறவாட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தால் 'விரும்பினபடிக்கும் நூலக முறையினை' (open access system) உருவாக்கியவர் இவரே. கிளார்க்கென்வெல் (பின்சுபரி) நூலகத்தில் முதன்முதலில் இம் முறையினை நடைமுறைக்குக் கொண்டுவந்து வெற்றி பெற்றவரும் இவரே. இம்முறையினால் நூலகத்திற்கு வரும்மக்கள் எவர் உதவியுமின்றித் தாங்கள் விரும்புகின்ற நூல்களை எளிதாக எடுத்துக்கொள்ளலாம். இன்று இம் முறைதான் உலகில் பெரும்பான்மையான நூலகங்களில் நடைமுறையில் உள்ளது.

**கி. பி. 20-வது நூற்றுண்டில்:**

எல்லாத் துறைகளிலும் எழில் மிக்க முன்னேற்றமும் மாற்றமும் ஏற்பட்ட இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்தே நூலக இயக்கம் சிறந்து விளங்குவதாயிற்று. சுருங்கக் கூறின் நூலகப் பாதையில் இருபதாம் நூற்றுண்டினைப் 'பொற்காலம்' என்று குறிப்பிடலாம். நானூறு நகரங்களில் பொதுநூலகங்கள் பொலிவுடனும் புகழுடனும் விளங்கலாயின. லண்டன், கார்ன்வால் இவ்விரண்டு பகுதிகளிலும் பல பொது நூலகங்கள் சிறந்து வளரலாயின. நாளிதழ் ஒன்றின் அதிபரான பாசுமோர் எட்வர்ட்டு என்பார், நூலகத் துறையினருக்கு இலவசமாக வழங்கிய கவினுறு கட்டிடங்களில்தான் அந்த நூல் நிலையங்கள் திறக்கப்பட்டன. இங்கிலாந்து நாட்டு நூலக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிய பெரியார் ஆண்ட்ரூகார்னீகி (Andrew Carnegie) என்பவராவர். இவர் கொடுத்துதவிய 2 மில்லியன் பவுன்களைக் கொண்டு, கிரேட் பிரிட்டனிலும் (Great Britton) அயர்லாந்திலும் கி. பி. 1897-

ஆம் ஆண்டு முதல் 1913–ஆம் ஆண்டு வரை பல பொது நூலகங்கள் திறக்கப்பட்டன. இதனால் முந்நூற்று எண்பது நூலகங்கள் பயனடைந்தன. இத்தொண்டு தொடர்ந்து நடைபெறுவதற்காக இவரால் 1913-ஆம் ஆண்டில் அவரது பெயரால் நிதிஒன்று (Carnegie United Kingdom Trust) நிறுவப்பட்டது. இந்நிதி குறித்து பேராசிரியர் ஆதம்சு என்பவரால் தயாரித்து வெளியிடப்பட்ட நூலக அறிக்கையானது, கிராமிய ஊராட்சிக் குழுவினரிடை ஒரு பரபரப்பை உண்டாக்கியது. எல்லா ஊராட்சிக் குழுவினரும் நூலக ஆணைக் குழுவினராக மாறி, நிதிபெற்றுத் தங்கள் ஊர்களில், பொது நூலகங்களை நிறுவவேண்டும் என்று முனைந்து நின்றனர். அவர்களது எண்ணம் வீண் போகவில்லை; கார்னிக்நிதி அவர்களுக்குக் கைகொடுத்துதவியது. மேலும் கி. பி. 1919-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நூலகச்சட்டத்தின்படி, பென்னி வரிமுறை நீக்கப்பட்டது. கார்னிக் நிதியின் உதவியால் எண்ணிறந்த நூலகங்கள் எங்கும் திறக்கப்பட்டன. இன்று ஒரு சில மாவட்டங்களுக்குத்தான் நூலகவசதி இல்லையெனக் கூறலாம். அம்மாவட்டங்கள் அனைத்திலும் வாழும் மக்கள் தொகை 60,000 என்றும், இங்கிலாந்து நாட்டிலே அச் சிறுபான்மையோர் தவிர மற்ற எல்லா மக்கட்கும் பொதுநூலக வசதி இருக்கின்றதென்றும் அறிக்கை ஒன்று அறைகின்றது. மேலும் நூலகக்கூட்டுறவு முறையில் (Library co-operation) எல்லாப் பொது நூலகங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாய் பார்வியக்கும் வண்ணம் பணியாற்றுகின்றன. இன்று உலக நாடுகளில் இங்கிலாந்து நாட்டில்தான் நூலகக் கூட்டுறவு முறை சீரிய முறையில் நடைபெறுகின்றது எனக் கூறலாம். தேசிய மத்திய நூலகத்துடன் எல்லாப் பிராந்திய மத்திய நூலகங்களும், எல்லாப்பிராந்திய மத்திய நூலகங்களுடன் அந்தந்தப்பகுதியில் இருக்கும் அனைத்துப் பொதுநூலகங்களும் இணைக்கப்

பட்டன. இம்முறை வெற்றி பெறுதற்குக் கார்னிக் நிதியி லிருந்து பெருந்தொகை செலவழிக்கப்பட்டது. இதற் கிடையில் நூலகச் சங்கத்திற்கு, பேரரசி விக்டோரியா கி. பி. 1898–ல் அரசியல் அங்கீகாரம் அளிக்கவே நூலகச் சங்கத்தார் இதன் பின்னர் நூலகங்களில் திறமையுடன் பணிபுரிதற்குத் தகுதிவாய்ந்த வல்லுநர்களை உருவாக்கு வதில் முனைந்தனர். கி. பி. 1885-ல் முதன் முதலில் இச் சங்கத்தார் நூலகத்தார் தேர்வு ஒன்று நடத்தி வெற்றி பெற்றவர்கட்குச் சான்றிதழ்கள் நல்கினர். நாளடைவில் படிப்பின் தரம் உயர்த்தப்பட்டது. நூலகக் கல்வித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. 1928–ல் பதிவுசெய்து கொண்ட நூலகத் துறை வல்லுநர்களுக்கு அவர்கள் தகுதிக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப அறிஞர் (Fellows) துணையறிஞர் (associates) என்ற பட்டங்கள் முறையே கொடுக்கப்பட்டன. இன்று திறமையும் அனுபவமும் வாய்ந்தவர்கள் தான் இச்சங்கத்தாரால் நடத்தப்படும் தேர்வினை எழுதுதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் எனக் கருதப்படுகின்றனர். நூலகத் துறையில் பணிபுரிய விரும்பும் எவரும் முதலில் தங்களைப் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

இங்கிலாந்து நாட்டில் பொது நூலகத் துறையில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இன்று பணிபுரி கின்றனர். இவர்களில் 2500–க்கு மேற்பட்டவர்கள் நூலகச் சங்கத்தாரால் நடத்தப்படும் இறுதித் தேர்வில் வெற்றிபெற்றுப் பதிவுசெய்யப்பட்ட நூலகத்தார்களாகும். இவ்வாறு நூலகச் சங்கம் திறமையும் பயிற்சியும் பெற்றுப் பல நூலகத்தார்களை நாட்டிற்கு நல்கியதோடமையாது நூலக மாநாடுகள் கூட்டியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தி யும் நூலகங்களைப் பற்றிய செய்திகளை அவ்வப்பொழுது மக்களுக்கு வெளியிட்டும், பாடப் புத்தகங்களை அச்சேற்றி

யும், இன்ன பிற பணிகளைச் செய்தும், மக்களை நூலக மனப்பான்மை உள்ளவர்களாய் மாற்றியமைத்து, பொது மக்கள் வாழ்விலே—பொது நூலகத் துறையிலே—ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது என்பது எவரும் மறுக்க முடியாத-மறக்கமுடியாத மாபெரும் உண்மையாகும். இங்கிலாந்து நாட்டு மக்களில் மொத்த மக்கள் தொகையில் கால் பாகத்திற்கு மேற்பட்டவர்கள் இன்று பொது நூலகங்களை ஒழுங்காகப் பயன்படுத்துகின்றனர். அண்மையில் தரப்பட்டுள்ள புள்ளி விவரங்களின்படி 30 கோடி மக்கள் இப்பொது நூலகங்களால் பயன்பெறுகின்றனர். 23,000 இடங்களில் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு நூலகத்திலும் பல பகுதிகள் பாங்குடன் விளங்குகின்றன. உடன் உதவும் நூற்பகுதி (Reference section) ஒன்றுதான் அனைவராலும் விரும்பப்படும் தலை சிறந்த பகுதியாகும். மழலைமொழி பேசும் குழந்தைகட்கும், படிக்கச் செல்லும் பள்ளிச்சிறுர்க்கும், மருத்துவக் கூடத்தில் உள்ளவர்கட்கும், சிறைக் கூடத்திற் சிக்கியவர்கட்கும், ஆண்டில் முதிர்ந்தவர்கட்கும் இப் பொது நூலகங்கள் புத்தகங்களை அனுப்பி அவர்கட்குப் புத்துயிர் அளிக்கின்றன. மேலும் நூலகங்களில் அடிக்கடி சொற்பொழிவுகளும், சொற்போர்களும் நடத்தப்படுகின்றன. இசையின் இனிமையினைப் பருக விரும்புவோர் நூலகங்களில் இன்னிசை கேட்டு மகிழலாம். புத்தகங்களைப் போன்று நூலகங்களில் வாங்கி வைக்கப்பட்டிருக்கும் இசைத் தட்டுக்களை எடுத்துச் சென்று வரலாம். இடையிடையே செய்திப் படங்கள் சிந்தை களிக்கக் காட்டப்பெறும். மேலும் அடிக்கடி பொருட்காட்சிகள் பல நூலகத் துறையினரால் நடத்தப்படும்.

# அமெரிக்காவில்

## நூலகம் ஒரு உயிருள்ள பொருள்

அவனி புகழ் அமெரிக்க நாடுதான் இன்று நூலகத் துறையில் உலகிலேயே உயர்ந்து விளங்குகின்றது. நாட்டின் கலைச் செல்வங்கள் அனைத்தையும் கொண்டிலங்கும் கருவூலங்களாகிய நூலகங்களை அமெரிக்க நாட்டு மக்கள் தங்கள் கண்கள் போன்று கருதுகின்றனர். தங்கள் நாட்டில் தோன்றிய அறிஞர், கலைஞராகிய பெருமக்களுடன், அவர்களது நூற்களின் வாயிலாக நூலகங்களில் உறவாட முடிவதால் நூலகத்தினையும் அவர்கள் உயிருள்ள—உயர்ந்த ஒரு பொருளாகவே கருதுகின்றனர். கருதுவதோடமையாது அவைகளைப் பற்றி எண்ணுகின்றனர்; அவைகளின் உயர்வினைப்பற்றி உண்மையாகவே உள்ளுகின்றனர்; அவைகளின் வளர்ச்சிக்காக, வாழ்விற்காகப் போராடவும் செய்கின்றனர்.

அமெரிக்கக் குடியரசின் சிறப்பியல்புகளை—பண்பு நலன்களை இப்பாரிலுள்ளார்க்குப் பளிங்குபோலப் பளிச்சென எடுத்துக் காட்டும் கண்ணாடிகளே நூலகங்கள் என்பது அந் நுண்ணறிவாளர்களது கருத்து. கற்கண்டினுமினிய கதைகள் படித்துக் களிப்படைய விரும்பும் கள்ளமில்லா உள்ளமுடைய இளஞ்சிறுர், சிறுமியர், சொற்போரில் வெற்றிபெற விழையும் மாண்பு மிக்க மாணவர்கள், படித்துப் பட்டம் பெற்ற பின்னர் வாழ்க்கைக் கடலில் நீந்திக் கரையேற விரும்பும் கட்டிளமையுடையவர்கள், வைத்தியத் துறையில் வையம் போற்ற வாழ எண்ணும் வைத்தியர்கள், தொழில் நுணுக்கங்களை எல்லாம் துல்லியமாக அறிந்து தொழில் நடத்தத் துடிக்கும் தொழில் அதிபர்கள்—இவர்களனைவருக்கும் வேண்டியதை வேண்டி யாங்கு நல்கி நலம்பெறச் செய்யும் நூலகங்களைத்

தங்கள் உயிரினும் மேலாக அமெரிக்கர் ஓம்புவதில் வியப்பொன்றுமில்லை. மேலும் கட்டிய மனைவி பெற்றெடுத்த மக்கள், சுற்றம் துறந்து நாட்டின் நலனையே தங்கள் நலனாகக் கருதி வாழும் போர் வீரர்கள், ஆகியோர் தங்கள் ஓய்வு நேரத்தில் நூலகங்களுக்குச் சென்று நுண்ணறிவு பெறவே அவாவுகின்றனர். விஞ்ஞானத் துறையில் வீறுபெற்று விளங்க விரும்புவோர்க்கு அவர்கள் நாடும் அறிவுச் செல்வத்தினை அள்ளி அள்ளிக் கொடுப்பன நூலகங்களே. மேற்கூறிய உண்மைகளை அமெரிக்கர் அனைவரும் உணர்ந்துஒழுகுவதால்தான் இன்று நூலகத்துறையில் அவர்களது நாடு ஆழிசூழ் இப்பூமி புகழப் பொலிவுடன் விளங்குகின்றது.

## 17-ம் நூற்றாண்டில்:

இனி அமெரிக்கநாட்டு நூலக ஏடுகளைப் புரட்டுவோம். பதினேழாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் அமெரிக்காவில் செல்வச் சீமான்கள் சிலரும், அறிஞர்களில் சிலரும், நூற்களைச் சேகரித்தனர் என்று கூறலாம். பிளிமவுத் பகுதியைச் சேர்ந்த எல்டர் வில்லியம் ப்ரௌசுடர்,(Elder William Brewster) மாசாசுசெட்சு பகுதியைச் சேர்ந்த டாக்டர் காட்டன் மாதர், ரெவரண்ட் சான் ஹார்வர்டு, கனெட்டிகட் பகுதியைச் சேர்ந்த வின்த்ராப், வர்சீனியாவைச் சேர்ந்த ரால்ப் வுர்ம் சுலி முதலிய பெரியவர்கள் எண்ணிறந்த நூற்களைச் சேகரித்துத் தங்கள் தங்கள் இல்லங்களிலே வைத்துப் 'பூதம் காத்த புதையல்' போன்று பாதுகாத்து வந்தனர்.

## முதல் அமெரிக்க நூலகம்

முதன் முதலில் வர்சீனியாவில் (Virginia) ஹென்றிக்கோ (Henrico) என்னுமிடத்தில் தொடங்கப்பட்ட கல்லூரி நூலகம்தான் முதல் அமெரிக்க நூலகமாகும்

இக்கல்லூரி கி. பி. 1622-ல் தொடங்கப்பட்டது. ஆனால் அதே ஆண்டில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலகத்தின் காரணமாக இந்நூலகம் நீர்மேற் குமிழியாயிற்று.

அமெரிக்க நாட்டு, முதற் சர்வகலாசாலை நூலகம் (University Library) ஹார்வார்டு (Harward) நூலகமாகும். கி. பி. 1638–ல், ரெவரண்ட் சான் ஹார்வார்டு என்ற பெரியாரது பெயரால் ஆரம்பிக்கப்பட்ட இச்சர்வகலாசாலை நூலகத்திற்கு, அப்பெரியார் தம்மிடமிருந்த கிடைத்தற்கரிய 400 புத்தங்களை நன்கொடையாகக் கொடுத்துதவினார்.

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில்தான் அமெரிக்க நாட்டுப் பொது நூலக வரலாறு தொடங்குகின்றது. ரெவரண்ட் தாமசு ப்ரே (Rev. Thomas Bray) என்பவரது பெரு முயற்சியால் கிராமிய நூலகங்கள் பல பாமர மக்களுக்காகத் திறக்கப்பட்டன.

## 18-வது நூற்றாண்டில்:

நாளடைவில் பொது வரிப் பணத்திலிருந்து, நகர் மன்றத்தினரால், நூற்கள் மக்களின் உபயோகத்திற்காக வாங்கப்பட்டன. டாக்டர் கிப் என்பவர், கி. பி. 1675-ல் பாஸ்டன் நகரில் பொது நூலகம் திறக்கப்பட்டது என எழுதி உள்ளார். சிலர், நூற்களைச் சேகரித்து வைத்துக் கொண்டு, ஒரு குறிப்பிட்ட சந்தாவினை மக்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, நூற்களைப் படிக்கக் கொடுத்துதவினர். இதுபோன்ற சந்தா நூலகங்களில் (Subscription Library) 18-வது நூற்றாண்டின் மத்தியில், பிலடெல்பியாவில் (Philadelphia), பென்சமின் பிரான்க்லின் என்ற அச்சகத் தொழிலாளியால் நடத்தப்பட்ட நூலகம் குறிப்பிடத் தக்கதாகும். இவ்விளைஞரால் நடத்தப்பட்ட நூலகத்தின் சந்தாதாரர்கள், வருடத்திற்கு 40 சில்லிங்குகளைச் செலுத்தி, இந்நூலகத்திலிருந்து நூற்களைப்

பெற்றுப் பயன்படுத்தி வந்தனர். 50—க்கு மேற்பட்ட வியாபாரிகள் இந்நூலக உறுப்பினர்களாய் இருந்து வந்தனர். இங்கிலாந்திலிருந்து பல புத்தகங்கள் வரவழைக்கப்பட்டன. வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் நூற்கள் கொடுக்கப்பட்டன. புத்தகங்களை ஒழுங்காகத் திருப்பித் தரவேண்டுமென்பதற்காக, புத்தகங்களை எடுத்துச் செல்வோரிடம், அவர்கள் எடுத்துச் செல்லும் புத்தகங்களின் விலையின் இரண்டு மடங்கிற்கு 'உறுதி மொழிச் சீட்டு' (promissary note) எழுதி வாங்கப் பட்டது. இதனைத் தொடர்ந்து, நியூபோர்டில் ரெட்வுட் நூலகமும், சார்ல்சு டவுனில் நூலகக் கூட்டுறவுச் சங்க நூலகமும், நியூயார்க்கில் ஒரு நூலகமும் திறக்கப்பட்டன. கி. பி. 1770-ல் நியூ ஹாம்ப்ஷயரிலும், கி. பி. 1796-ல் நியூ செர்சியிலும் நூலகங்கள் தொடங்கப்பட்டன. நியூ ஹாம்ப்ஷயர் நூலகம் அமெரிக்கப் புரட்சிக்குப் பின்னர் அரசாங்க நூலகமாக மாறியது.

## 19-வது நூற்றாண்டில்:

பத்தொன்பதாவது நூற்றுண்டின் தொடக்கத்தில் பல நூலகங்கள் திறக்கப்பட்டன. கிட்டத்தட்ட 50,000 புத்தகங்கள் மக்களுக்காகச் சேகரிக்கப்பட்டிருந்தன.

கி. பி. 1800-ல் வாஷிங்டன் நகரில் தேசிய நூலகம் திறக்கப்பட்டது. 1812-ல் நடந்த போரில் வாஷிங்டன் நகர் எரியூட்டப்பட்டபொழுது இந்நூலகம் அழிந்தது. அடுத்து தாமசு செபர்சன் என்பவர் சேகரித்து வைத்திருந்த நூற்கள் யாவும் அரசியலாரால் வாங்கப்பட்டன. இப்புத்தகங்கள்தான் இன்றைய காங்கிரசு நூலகத்தின் வித்துக்களாகக் கருதப்படுகின்றன. இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் அமெரிக்கநாட்டுக் கல்வித் துறையிலே ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டதெனக் கூறலாம். இத்துடன், பொதுமக்களுக்காக அவர்களது வரிப் பணத்திலிருந்து

பொது நூலகங்கள் திறக்கப்படவேண்டும் என்ற எண்ணமும் ஏற்பட்டது. இந்த அடிப்படையில் திறக்கப் பட்ட முதல் பொது நூலகம் பாஸ்டன் நகர் நூலகமாகும். பின்னர் மாசாசு செட்சு (Massachusetts) மாநிலத்தார் கி. பி. 1851-ல் கொண்டுவந்த நூலகச் சட்டத்தினால் அம் மாநிலத்திலிருந்த நகர்களிலெல்லாம் பொது நூலகங்கள் திறக்கப்பட்டன. தொடர்ந்து 19 மாநிலங்களில் நூலகச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

### 20-வது நூற்றாண்டில்:

இருபதாவது நூற்றாண்டின் தொடக்கத்தினை என்றும் எவரும் மறக்கவே முடியாது. இங்கிலாந்து நூலகவளர்ச்சிக் காகப் பெருநிதி வழங்கிய 'ஆண்ரூ கார்நிக்' அமெரிக்க நாட் டிற்கும் $4\frac{1}{2}$ மிலியன் டாலர்களைக்கொடுத்துதவினார். இவர் கொடுத்த நிதியால், 1,681 நூலகக் கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டன. மேலும் பல செல்வச் சீமான்கள் வரையாது வழங்கினதால், பொது நூலகங்கள் பல திறக்கப்பட்டன. பிறர் மெச்சவேண்டும் என்பதற்காக நூற்கள் பல சேகரித்து வைத்திருந்த சிலர் அந்நூற்களைப் பொது நூலகங்களுக்கு நன்கொடையாகக் கொடுத்துதவினர். கி. பி. 1930-ல் 500,000 டாலர்கள் சூலிய சுரோசன் வால்டு நிதியிலிருந்து (Julius Rosenwald Fund) கொடுக்கப் பட்டது. கி. பி. 1935-ல் அமெரிக்காவில் 6235 பொது நூலகங்கள் விளங்கலாயின. இந்நூலகங்களிலிருந்த நூற்களின் மொத்த எண்ணிக்கை 100,470,215 ஆகும். அம்மக்கள் வீட்டிற்கு எடுத்துச் சென்று படித்த புத்தகங் களின் எண்ணிக்கை 449,998,845.

### சமுதாய நல-நூலகத்-திட்டங்கள் (Work Project Administration Libray)

இந்நூற்றாண்டில் எண்ணிறந்த மக்கள் நூலக வளர்ச்சியின் பொருட்டு, நூலகத் துறையில் ஈடுபட

லாயினர். மாநிலங்கள் யாவும் ஒன்றுபட்டுக் கூட்டுறவு முறையில் பணியாற்றத் தொடங்கின. சமுதாய நலத் திட்டங்களின் கீழ் நூலகத் திட்டமொன்று தீட்டப் பெற்றது. இத்திட்டம் வெற்றி பெறுதற்கு 46,000-க்கு மேற்பட்ட மக்கள் பல வழிகளிலும் பணிபுரியலாயினர். ஆறு ஆண்டுகளில் ஆற்றிய அரும்பணியினுல், இத்துறையில் அற்புதங்கள் பல நிகழலாயின. மக்களாலேயே 130 நூலகக் கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டன. 832 நூலகங்கள் மக்களாலேயே புதுப்பிக்கப்பட்டன. சில மக்கள் நூலகங்களுக்குச் சென்று நூற்களைப் பழுது பார்ப்பதிலும், நூற்களை மக்களுக்குக் கொடுத்துதவுதலி லும், நூற் பட்டியல் தயாரிப்பதிலும், கையெழுத்துச் சுவடிகள்-அரசியல் பத்திரங்கள் இவைகளைப் பாதுகாப்ப திலும், உதவி புரியலாயினர். குழந்தைகளுக்கென ஒதுக் கப்படும் நேரங்களில், மக்களே, குழந்தைகளுக்குக் கதை சொல்வாராயினர். பள்ளிகளுக்கும் சென்று நூலகப்பணி புரிந்தனர். இப்பணிகள் யாவும் பயிற்சிபெற்ற நூலகத் தார் பலரது மேற்பார்வையில் நடந்தன.

கி. பி. 1947–ல் எண்ணிறந்த மாநிலங்களுக்குத் திட்டங்கள் தீட்டப்பெற்றன. மின்னி சோடா (Minne-sota) பகுதியில் லட்சக்கணக்கான மக்கள் நூலக வசதி பெற வாய்ப்பில்லாமலிருந்தனர். மின்னிசோடா பகுதி நூலகக் குழுவினரின் பெரு முயற்சியால், ஆறு பகுதிகளில் கிராமிய நூலகங்கள் திறக்கத் திட்டமொன்று தயாரிக்கப் பட்டது. இத்திட்டத்திற்காக உழைத்த மக்கள், நூலகக் கட்டிடங்களில்லாத கிராமங்களில், கடைகளிலும், முடி வெட்டும் இல்லங்களிலும் சிறு நூலகங்களைத் தோற்று வித்ததோடமையாது, பொன்னும் பொருளும், நூற்களும் நன்கொடையாகக் கொடுத்துதவினர். நூலக ஊர்திகள் (Book Mobile) சில வாங்கப்பட்டன. இவ்வூர்திகளில்

நூற்களைப் பல இடங்களுக்கும் எடுத்துச் சென்று மக்களைப் பயன்பெறச் செய்தனர்.

நாட்டின் நலனே தங்கள் நலன் எனக் கொண்டிருந்த இராணுவத்தினருக்காகத் தொடங்கப்பட்ட நூலகங்களுக்கு நாட்டு மக்கள் பெரிதும் உதவினர். போர்ட்டிக்சு (Fort Dix) என்னும் இடத்தில் தொடங்கப்பட்ட இத்தகைய நூலகத்திற்கு 20,000 புத்தகங்களை மக்கள் நன்கொடையாகவே கொடுத்துதவினர். சமுதாய நூலகத் திட்டத்தின் கீழ் பணியாற்றிய மக்கள் இந்நூலகங்களுக்கும் சென்று உதவி புரிந்தனர். இராணுவ மருத்துவக் கூடங்களுக்கும், விமானப் படையினர் இருந்த பகுதிக்கும், ஊர்திகளில் புத்தகங்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

**அமெரிக்க நூலகச் சங்கம்: (American Library Association)**

அமெரிக்க நாடு நூலகத் துறையில், சிறந்ததொரு வளர்ச்சி பெறுதற்கு, அமெரிக்க நூலகச் சங்கமானது அரும்பாடுபட்டது. கி. பி. 1941-ல் இச்சங்கத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 16,000 ஆகும். வெளி நாடுகளிலிருந்து பலர் இச்சங்க உறுப்பினர்களாயினர். நகரங்கள் தோறும் நூலகக் குழுக்களை ஏற்படுத்தியும், இத்துறையில் சிறந்த முறையில் பணியாற்ற பல நூலகச் சிற்பிகளைத் தந்தும், கூட்டங்கள் கூட்டியும், மாநாடுகள் நடத்தியும், பலருக்கு நூலகப் பயிற்சி அளித்தும், நூலகத் துறையில் ஆராய்ச்சி செய்வோர்க்குப் பொருளுதவி செய்தும், நாடு முழுவதும் மக்கள் அறியச் செய்தும், மாநிலங்கள் தோறும் நூலகச் சட்டத்தினைக் கொண்டுவரச் செய்தும், நூற்களைத் தேர்ந்தெடுத்து நூற்பட்டியல் வெளியிட்டும், புத்தக விமர்சனம் எழுதியும், நூலகக் கட்டுரைகளையும், அவ்வப்பொழுது துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டும், இன்ன பிற இவ் அமெரிக்க நூலகச் சங்கத்தாரால் செய்யப்படுகின்றன. இச்சங்க

உறுப்பினர்களில் 600—க்கு மேற்பட்டவர்கள் பொருளுதவியும் செய்துள்ளனர்.

அமெரிக்க நூலகச் சங்கத்தாரால் 2000-க்கு மேற்பட்ட நூலக வெளியீடுகள் வெளியிடப்படுகின்றன. இவர்களால் வெளியிடப்படும் புத்தகப் பட்டியலும், கட்டுரை-செய்தித் தொகுதிகளும் (Bulletin) நூலகத்தார் யாவர்க்கும் வேதமாகும். ஒரு வாரத்திற்கு ஒரு முறை வெளியாகும் நூற்பட்டியலின் துணைகொண்டு, புதிய வெளியீடுகளை உடனுக்குடன் நூலகத்தார் அறிந்துகொள்ளலாம். "நல்ல நூற்கள் குறைந்தசெலவில் பெரும்பான்மையான மக்களுக்குக் கிடைக்க வேண்டும்" என்ற நல்லதொரு கொள்கைக்காக இச்சங்கம் உழைக்கின்றது. அமெரிக்க நாட்டிலுள்ள மாநில நூலகச் சங்கங்களும், தனிப்பட்ட நூலகச் சங்கங்களில் பலவும், இந்நூலகச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இந்நூலகச் சங்கங்கள் தவிர, அமெரிக்க வர்த்தகர்கள் நூலகச் சங்கங்கள், பள்ளி நூலகச் சங்கங்கள், கத்தோலிக் நூலகச் சங்கம் முதலிய சங்கங்கள் அமெரிக்காவில் செயலாற்றுகின்றன.

# பிற நாடுகளில்

## ஐரோப்பிய நாடுகளில் நூலக இயக்கம்

### பெல்சியம்

கி. பி. 1920ல் தரப்பட்டிருக்கும் புள்ளி விவரத்தின் படி பெல்சியத்தில் 1200 பொது நூலகங்கள் விளங்கலாயின. ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் 2100 நூலகங்கள் விளங்கலாயின. இந் நூலகங்களிலிருந்த நூற்களின் மொத்த எண்ணிக்கை 30 லட்சமாகும்.

**டேனிசு நூலகங்கள் :**

முதல் டேனிசு நூலகம், கி. பி. 1482ல் தொடங்கப்பட்ட டேனிசு பல்கலைக்கழக நூலகமாகும். கி. பி. 1661ல், கோபன்கேகனில் ஒரு அரசாங்க நூலகம் தொடங்கப்பட்டது. பொது நூலகங்களின் தொடக்கம் கி. பி. 1849ல் தான் என்று கூறவேண்டும். 1887-ஆம் ஆண்டிலிருந்து அரசியலார், ஒவ்வொரு கிராமத்திலும், மாவட்டத்திலும் பொது நூலகங்களைத் தொடங்கினர். 800 நூலகங்களுக்கு அரசியலார் நன்கொடை அளித்தனர். நூலகத் துறையிலுள்ளார்க்குப் பயிற்சி அளித்தற்காகப், பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. டேனிசு நூலகச் சங்கம் ஒன்று தொடங்கப்பட்டது. இச்சங்கம் இரண்டு நூலகச் செய்தி இதழ்களை வெளியிடலாயிற்று.

**பிரெஞ்சு நூலகங்கள் :**

இந்நாட்டில் முதன் முதலில் பொது மக்களுக்கெனப் பல நூலகங்களைத் தொடங்கிய பெருமை நகராட்சிக் குழுவினரைத்தான் சாரும். 42 நூலகங்கள் திறக்கப்பட்டன. தலைநகராகிய பாரிசில் 83 நூலகங்கள் பணி புரியலாயின. இந்நகரிலுள்ள "பிப்ளியோதெக் நேசனேல்" நூலகம், உலகிலுள்ள பெரு நூலகங்களிலொன்ருய்க் கருதப்படுகின்றது.

**ஜெர்மன் நூலகங்கள் :**

முதன் முதலில், சிறப்பாகவும், சீரிய ஒழுங்கிலும், பொது நூலகங்கள் பணிபுரியத் தொடங்கியது ஜெர்மனியில்தான். 1839ல், ஜெர்மனிய மக்களால் அவர்களது முதல் நகர நூலகம் திறக்கப்பட்டது. அதன் பின்னர் பல நகர் நூலகங்கள் திறக்கப்பட்டன. கி. பி. 1898ல் மாவட்டங்களிலெல்லாம் நூலகங்கள் திறக்கப்பட்டன. ஊர்திகளில் ஊர்கள் தோறும் நூற்கள் அனுப்பப்பட்டன.

பெர்லின் நகரில் தொடங்கப்பட்ட மத்திய நூலகம் தொண்ணூறு கிளைகளுடன் விளங்கின; எட்டு லட்சத்திற்கு மேற்பட்ட நூற்கள் இந் நூலகங்களிலிருந்தன. 32க்கு மேற்பட்ட கல்லூரி-பள்ளி நூலகங்கள் விளங்கலாயின. இந் நூலகங்களில் 65 லட்சத்திற்கு மேற்பட்ட நூற்கள் இருந்தன. இவைகள் தவிர, விஞ்ஞான ஆராய்ச்சிக்கூட நூலகங்களும், கிறித்தவக் கோயில் நூலகங்களும் வேறு சில சிறப்பு நூலகங்களும், நகர் மன்ற நூலகங்களும், ஜெர்மனியில் சிறந்து விளங்கலாயின. விரும்பிய வண்ணம் படிக்கும் முறை (open shelf system) எல்லா நூலகங்களிலும் நடைமுறையிலிருந்தன. ப்ரூசியன் மாநில நூலகம் மிகப் பெரியதொரு நூலகமாகும். இந் நூலகத்தில் 30 லட்ச நூற்களுக்குமேல் இருந்தன. ஒவ்வொரு ஆண்டிலும் 60,000 நூற்கள் சேர்க்கப்பட்டன என்று கூறப்படுகின்றது. இந் நூலகத்தில் 60 ஆயிரம் கையெழுத்துச் சுவடிகளும் சேகரித்து வைக்கப்பட்டன. இந்நூலகத்தில் 72 அதிகாரிகளும் 330 எழுத்தாளர்களும் பணி புரியலாயினர்.

பவாரியன் மாநில நூலகத்தில் 17 லட்ச நூற்களும், 50,000 கையெழுத்துச் சுவடிகளும்சேகரித்து வைக்கப் பட்டன.

கி. பி. 1900ல், ஜெர்மன் நாட்டு நூலகச் சங்கமானது தொடங்கப்பட்டது. நூலகத்தார்களுக்குச் சிறந்த பயிற்சி அளிக்கப்பட்டு கி. பி. 1909லிருந்து அரசினரால் நற்சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டன. பெர்லின் நகர் நூலகத்துடனும், லிப்சிக் நகரிலுள்ள ஜெர்மன் மத்திய போர்டாருடனும், பான் என்னும் இடத்திலுள்ள பரோமோஸ் சங்கத்தாருடனும், மூன்று நூலகப் பள்ளிகள் இணைக்கப்பட்டன. அச்சுத் தொழிலில் ஜெர்மனி தலைசிறந்து விளங்கியதால் ஏராளமான நூற்கள் வெளியிடப்பட்டன.

எனவே நூலகங்களில் ஏராளமான நூற்கள் இடம் பெற்றன. கி. பி. 1930ல் தரப்பட்டிருக்கும் புள்ளி விவரத்தின் படி, 160 பொது நூலகங்கள் ஜெர்மனியில் விளங்கலாயின. இந் நூலகங்களிலிருந்த நூற்களின் மொத்த எண்ணிக்கை மூன்று கோடியாகும்.

**டச்சு நூலகங்கள்:**

ஹாலந்து நாட்டு லெயிடன் பல்கலைக்கழக நூலகமே இந்நாட்டுப் புராதன நூலகமாகும். கி. பி. 1573ல் இந் நூலகம் தொடங்கப்பட்டது. இதன் பின்னர், அடுத் தடுத்து உட்ரெச்ட், குரோனிங்கென், ஆம்ச்டர்டாம் பல்கலைக் கழக நூலகங்கள் தோன்றின. இந் நாட்டு தேசீய நூலகம், 'காக்' (Hague) என்னுமிடத்திலுள்ள 'ராயல்' நூலகமாகும். இந்நூலகத்தில் பத்து லட்சத்திற்கு மேற்பட்ட நூற்களைச் சேகரித்து வைத்தனர். இங்கிருக்கும், 'அமைதிஅளிக்கும் அரண்மனை' என்று அனைவராலும் வழங்கப்பெறும் 'அகில உலக ஆய்வுக் கூடத்தில்' அறுபதினாயிரத்திற்கு மேற்பட்ட நூற்கள் சேகரித்து வைக்கப் பட்டன. நாளடைவில் 500க்கு மேற்பட்ட நூலகங்கள் இந்நாட்டில் திறக்கப்பட்டன. இதற்குக் காரணம், "மக்களுக்கு வேண்டப்படும் இன்றியமையாத பொருட்களில் நூலகமும் ஒன்று" என்று நாட்டு மக்களிடையே பரவியிருக்கும் எண்ணமே. படக்காட்சியும், கேளிக்கை மன்றங்களும், அந்நாட்டு மக்களுக்கு எவ்வளவு தூரம் தேவைப் படுகின்றனவோ, அதுபோல் நூலகமும் தேவைப்படுகின்றது. பிற நாடுகளைப்போல், இந் நாட்டிலும் ஊர்திகளில் நூற்கள் நாடெங்கும் அனுப்பப் பெறுகின்றன.

இந் நாட்டில் விளங்கும் நூலகச் சங்கங்களில், 'டச்சு நாட்டு நூலகத்தார் நூலகச் சங்கமும்', 'மத்திய பொது நூலகங்கள் சங்கமும்' நூலக வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபடுகின்றன.

**இத்தாலியில்:**

இந்நாட்டு நூலக வரலாறு கி. பி. 1876 லிருந்து தொடங்கப் பெறுகிறது எனக் கூறலாம். கி. பி. 1893ல் இந்நாட்டில் 32 அரசாங்க நூலகங்கள் விளங்கலாயின. இந்நூலகங்கள், இராணுவ நூலகங்கள், சமய நூலகங்கள், விஞ்ஞான நூலகங்கள், சட்ட நூலகங்கள், என்று பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் 2000க்கு மேற்பட்ட சுற்றும் நூலகங்கள் விளங்கலாயின. நூலகங்களது சங்கம் ஒன்று மிலான் நகரத்தில் நிறுவப்பெற்றது. நூலகச் செய்தி இதழ் ஒன்றும் வெளியிடலாயினர். 4500க்கு மேற்பட்ட பொது நூலகங்கள் இந்நாட்டில் விளங்கலாயின. ரோம் நகரில் இருக்கும் இந்நாட்டு தேசிய மத்திய நூலகம், இந்நாட்டுப் பெரு நூலகமாகும். அரசியலாரால், 'டைரக்டர் செனரல்' ஒருவர் அரசாங்க நூலகங்களை மேற்பார்வையிட நியமிக்கப்பட்டுள்ளார். பிளாரன்ஸ் நகரில் இருக்கும் லாரென்டியன் நூலகமும், மத்திய நூலகமும், வெனிசு நகரில் இருக்கும் செயிண்ட்மார்க் நூலகமும், மிலானிலிருக்கும் அம்பரோசியன் நூலகமும், நேப்பல்சு நகரிலிருக்கும் தேசிய நூலகமும், இந்நாட்டுத் தலைசிறந்த நூலகங்களாகும். இந்நாட்டைச் சேர்ந்த 'வேட்டிகன்' நூலகம், ஐரோப்பிய நாட்டு மிகப் புராதன நூலகங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இந்நூலகத்தில் 4 லட்சம் புத்தகங்களும், 53,000கையெழுத்துச் சுவடிகளும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

**நார்வேயில்:**

கடந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னரே, இந்நாட்டு நூலக வரலாறு தொடங்குகின்றது. கி. பி. 1767ல் இந்நாட்டில் முதல் நூலகத்திற்கு அடிப்படைக்கல் இடப்பட்டது. கி. பி. 1814 லிருந்து பொது நூலகங்கள் தொடங்கப்பட்டன. ஆசுலோ பல்கலைக்கழக நூலகம்

இந்நாட்டுச் சிறந்த நூலகமாகக் கருதப்படுகின்றது. கி. பி. 1919ல் நூலக வளர்ச்சியின் பொருட்டு ஒரு குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்நாட்டில், 100க்கு மேற்பட்ட விஞ்ஞான நூலகங்கள் விளங்குகின்றன.

**உருசிய நூலகங்கள்:**

"மக்களது அறியாமையினைப் போக்குவன நூலகங்களே" என்று ஆணித்தரமாக அறையும் உருசிய நாட்டு மக்கள், நூலகங்களைப் பெரிதும் போற்றுகின்றனர். இந்நாட்டுப் புராதன நூலகம், லெனின் கிராடில், 200 ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கப்பட்டது.

இன்று சிறந்து விளங்கும் நூலகங்கள் மாஸ்கோவிலிருக்கும் லெனின் நூலகமும் லெனின்கிராடிலிருக்கும் அரசாங்கப் பொது நூலகமும் ஆகும். அரசியலார் நூலகவளர்ச்சிக்காகப் பொருளை அள்ளி அள்ளி வழங்குவதால், இன்று இந்நாட்டில் 1500க்கு மேற்பட்ட பொது நூலகங்களும் 5500க்கு மேற்பட்ட சுற்றும் நூலகங்களும் உள்ளன. லெனின் கிராடில் நூலகப் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. இந்நாட்டு முக்கியமான நூலகச் சங்கத்தின் பெயர் "நூலகத் துறை ஆய்வுக்" கூடமாகும். இங்கு நூலகத் துறை பற்றிய ஆராய்ச்சிகளை மாணவர்கள் நடத்துகின்றனர். மேலும், இதனுடன், ஒரு நூலகப் பள்ளியும் இணைக்கப்பட்டுள்ளது. இப்பள்ளி பலருக்குச் சிறந்த பயிற்சி அளிக்கின்றது. அரசியலார் நூலகங்களையும், அரசியல் பிரச்சாரத்திற்குப் பெரிதும் பயன் படுத்துகின்றனர்.

**சுவீடன் நூலகங்கள்:**

இந்நாட்டு நூலக வரலாற்றின் தொடக்கம் பதினேழாவது நூற்றாண்டின் இறுதியிலாகும். இந்நாட்டில் 3000க்கு மேற்பட்ட பொது நூலகங்கள் திறக்கப்பட்டன.

"ஸ்டாக்ஹோம்" நகரிலிருக்கும் 'ராயல்' நூலகமும் உப்சாலா பல்கலைக்கழக நூலகமும் லண்ட் பல்கலைக்கழக நூலகமும் குறிப்பிடத் தகுந்தவைகளாகும்.

**சப்பானிய நூலகங்கள்:**

இந்நாட்டு முதல் நூலகத்தைத் தொடங்கியவர் கோனின் பேரரசனது அரசியல் அதிகாரிகளில் ஒருவராவர் இதன் காலம் கி. பி. 775 ஆகும்.

நூலக இயக்கமானது இந்நாட்டில் கி. பி. 1872ல் தொடங்கப்பட்டது. கல்வி இலாகாவினரால் 'இம்பீரியல்' நூலகமொன்று திறக்கப்பட்டது. எட்டு லட்சம் நூற்கள் இங்கு இடம் பெற்றன. 1881, 1899–ஆம் ஆண்டுகளில் பொது நூலகங்கள் திறத்தற் பொருட்டு நூலகச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இச்சட்டங்கள், ஊராட்சிக் குழுவினருக்கு, நூலகங்கள் திறத்தற்குரிய வாய்ப்பினை வழங்கின. தனிப்பட்டவர்களுக்கும் ஆதரவளித்தன. நாளடைவில் இச் சட்டங்கள் திருத்தி அமைக்கப்பட்டன. இந்நாட்டில் 4618 பொது நூலகங்கள் திறக்கப்பட்டன. அவைகளில் 1400 நூலகங்கள், தனிப்பட்டவர்களால், பொது மக்களுக்காக நடத்தப்படுகின்றன. மூன்று நூலகங்கள் தான் அரசினரால் நடத்தப்படுகின்றன. ஏனையன ஊராட்சிக் குழுவினரால் (Local bodies) நடத்தப்படுகின்றன. ஓசாக்காவில் இருக்கும் நூலகமே மாகாண நூலகங்களில் தலைமை வாய்ந்ததாகும். இந்நூலகத்தில் ஒன்றரை லட்சத்திற்கு மேற்பட்ட நூற்கள் சேகரிக்கப்பட்டன. மேலும் டோக்கியோ நகர்மன்ற கிபியா நூலகமும், நான்கி பன்கோ நூலகமும், டோக்கியோவிலிருக்கும், ஓரியண்டல் நூலகமும், ஓகாசி நூலகமும், ஓசாக்காவிலிருக்கும் ஓகாரா சமூக இயல் ஆய்வுக்கூட நூலகமும், நாகாஞேசிம்ம நூலகமும், ஓசாக்கா நூலகமும், சோகாடோ பன்கோ நூலகமும் பியூசியாமா தொழிற்சாலை நூலகமும், குறிப்பிடத் தகுந்

தவைகளாகும். இவைகள் தவிர, கியோடோ இம்பீரியல் நூலகமும், ஆசியச் சமூகத்தினரால் நடத்தப்பெறும் நூலகமும் முக்கியமான நூலகங்களாகும்; அடிக்கடி ஏற்படும் நில அதிர்ச்சியினால், சில நூலகங்கள் அழிந்தன. யாமுச்சி, நாகோயா, டைரன் முதலிய இடங்களிலுள்ள நூலகங்களும் சிறப்பு வாய்ந்தனவாகும். கி. பி. 1928ல் தரப்பட்டிருக்கும் புள்ளி விவரத்தின்படி, இந் நாட்டுக் கல்லூரி, உயர்நிலைப்பள்ளி நூலகங்களின் எண்ணிக்கை 267 ஆகும்.

கியோடோ இம்பீரியல் நூலகத்தில் எட்டு லட்சத்திற்கு மேற்பட்ட நூற்கள் சேகரிக்கப்பட்டன. நூலகத்தார்கள் யாவரும், ஒரு நூலகச் சங்கத்தினைத் தொடங்கி உள்ளனர். இச்சங்கம் மாநாடுகள் பல கூட்டியும், நூலக சம்பந்தமான நூற்களை வெளியிட்டும், நூலக வளர்ச்சிக்குப் பாடுபடுகின்றது. அரசினராலும், தனிப்பட்டவர்களாலும் நடத்தப்பெறும் சில பள்ளிகளில், நூலகப் பயிற்சியும் தரப்படுகின்றது.

**சீனாவில்:**

நூலக இயக்கமானது இந்நாட்டில் கி. பி. 1915ல் தொடங்கப் பெறுகின்றது. நாக்கிங்கில் தேசிய அரசாங்கம் செயலாற்ற முற்பட்டபொழுது, நூலக வளர்ச்சியின் பொருட்டு கி. பி. 1927ல், 15 விதிகளடங்கிய, நூலகச் சட்டம் கொண்டுவரப்பட்டது. 379 பொது நூலகங்கள் திறக்கப்பட்டன. பீப்பிங்கிலிருக்கும் சீன தேசிய நூலகமும், மெட்ரோபாலிடன் நூலகமும் தலைமை வாய்ந்த பொது நூலகங்களாகும். 15 பல்கலைக்கழக நூலகங்கள் நிறுவப்பட்டன. அவைகளில், நாகிங்கிலிருக்கும், தேசிய மத்திய பல்கலைக்கழக நூலகமும், பீப்பிங்கிலிருக்கும் ஐசிங்கூ பல்கலைக்கழக நூலகமும், டியென்ட்சின், நான்கை பல்கலைக்கழக நூலகமும் சீரும் சிறப்புமாகச் செயலாற்று

கின்றன. தனிப்பட்ட சங்கங்களினுலும் பின்வரும் நூலகங்கள் நடத்தப்படுகின்றன:

1. ராயல் ஆசியச் சங்க நூலகம், சாங்கைப்
2. விஞ்ஞானச் சங்க நூலகம், நான்கிங்.
3. தளபதி ஐசா சூங் பூ மெமோரியல் நூலகம், பீப்பிங்.
4. சீன சமூக, அரசியல், சங்கத்தார் நூலகம், பீப்பிங்.

**சிறப்பு நூலகங்கள்:**

சில குறிப்பிட்ட துறைகளில் மக்கள் சிறந்த அறிவைப் பெறவேண்டும் என்ற பெரு நோக்கத்தின் காரணமாய்ச் சில சிறப்பு நூலகங்கள் செயலாற்றுகின்றன. பீப்பிங் சாங்கைப், கேன்டன் என்ற நகர்களில் இத்தகைய நூலகங்கள் பல உள்ளன.

**பீப்பிங் நகரிலுள்ள சிறப்பு நூலகங்களாவன:**

1. தேசிய புதைபொருள் ஆராய்ச்சி நூலகம்
2. போக்குவரத்து அரசினர் நூலகம் (Ministry of Communication Library)
3. கல்வி இலாகா அரசினர் நூலகம்
4. வெளிநாட்டு இலாகா அரசினர் நூலகம்
5. உயர்நீதிமன்ற நூலகம்

இந்நூலகங்கள் அரசியல் அலுவலர்களுக்கு நடத்தப்படுவதால், பொதுமக்களுக்கு நூற்கள் கடனுகத் தரப்படுவதில்லை. சாங்கைப் நகரில் ‘கமர்சியல்’ அச்சகத்தினரால் நடத்தப்பெறும் ‘ஓரியண்டல்’ நூலகத்தில்,கிடைத்தற்கரிய பல நூற்களும், எண்ணிறந்த கையெழுத்துச் சுவடிகளும் உள்ளன.

வுசாங்கிலுள்ள பூன் பல்கலைக் கழகத்திலும், பீபிங் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும், காண்டனில் மாகாண கல்வி இலாகாவிலும் நூலகப் பயிற்சி தரப்படுகின்றது.

நூலகத்தார் சங்கம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. கி. பி. 1929-ல், நாக்கிங் நகரில், இச்சங்கத்தாரால் முதல் நூலக மாநாடு கூட்டப்பட்டது. சுருங்கக்கூறின், ஆசிய நாடுகளில் நூலகத் துறையில் சிறந்துவிளங்கும் நாடுகளது வரிசையில் சீனவும் இடம்பெறும்.

[குறிப்பு: இப்பகுதிகளில் தரப்பட்டிருக்கும்புள்ளி விவரங்கள் 1935-க்கு முற்பட்டவை.]

## இந்தியாவில்

**வேத காலம்:**

இந்திய வரலாறு வேத காலத்திலிருந்து தொடங்குவது நாமறிந்ததே. ஆனல் வேத காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் இந்திய நூலக வரலாறு குறித்து அறிதற்குத் தக்க சான்றுகளில்லை. மன்றங்களில் மக்கள்கூடித் தாங்கள் கற்றறிந்த கருத்துக்களை ஒருவருக்கொருவர் கூறிப் பரிமாறிக்கொண்ட முறைதான் பண்டு பயின்று வந்திருக்கின்றது. எனவே நூலகங்கள் அன்று தோன்றுவதற்குரிய வாய்ப்போ வசதியோ இல்லாது போயிற்று.

**புராதன பௌத்த நூலகங்கள்.**

கி. மு. நாலாவது நூற்ருண்டில், வடநாட்டில் தட்சசீலம் கல்வியிற் சிறந்த கவின்பெறு நகராய் விளங்கியது என்பதனைப் பௌத்தக் குறிப்புக்களிலிருந்து நம்மால் அறிய முடிகின்றது. மேலும் பெனரிஸ், பாடலிபுத்திரம் இவ்விரண்டிடங்களிலும் இரண்டு கல்லூரிகள் சிறந்து விளங்கின. மேற்கூறிய மூன்று கல்லூரிகளிலும் விலை

உயர்ந்ததும் அரியதுமான கையெழுத்துச் சுவடிகள் பல சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. இவைகளே இந்திய நாட்டுப் புராதன நூலகங்களாகும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

கி. பி. நாலாவது நூற்றாண்டில் சீன நாட்டு பௌத்த அருளாளர் பாஹியான் இந்தியாவிற்கு வந்தபொழுது, பாடலிபுத்திரம், தாம்ரலிப்தி (Tamluk) இவ்விரண்டிடங்களிலும் விளங்கிய பௌத்த மடங்களில் மூன்றாண்டுகளுக்கு மேல் தங்கி, இங்கிருந்த கையெழுத்துச் சுவடிகளையெல்லாம் கற்றறிந்து சென்றார் என்பதை வரலாறு கூறுகின்றது. இதே போன்று அடுத்த இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இந்திய நாட்டிற்கு வந்த இரண்டாவது சீன நாட்டு பௌத்த அருளாளர் 'யுவான் சுவாங்', அன்று சிறந்து விளங்கிய நாளந்தா பல்கலைக் கழகத்தில், வடமொழி பயின்றதோடன்றி, தாய்நாட்டிற்குத் திரும்பிய பொழுது, இச்சர்வகலாசாலை நூலகத்திலிருந்து 500 கட்டுகளுக்கு மேற்பட்ட கையெழுத்துச் சுவடிகளை எடுத்துச் சென்றார்.

### நாளந்தா சர்வகலாசாலை நூலகம்

கி. பி. ஏழாவது நூற்றாண்டின் இடைப் பகுதியில் எழில்பெறு இந்திய நாட்டிற்கு வந்த மூன்றாவது சீன நாட்டுப் பெரியாரின் குறிப்புக்களின் துணைகொண்டு, வட நாட்டில் புகழொளி வீசிய நாளந்தா பல்கலைக் கழகத்தைப் பற்றி நம்மால் நன்கு அறியமுடிகின்றது. மூன்றாவது சீனப் பெரியாராகிய ஐசிங் இப்பல்கலைக்கழகத்தில் பத்தாண்டுகள் பயின்றார்.

புராதன இந்தியாவின் புகழ்பெற்ற இந்தச் சர்வகலாசாலை, வெளிநாட்டினரெல்லாம் பார்த்துவியந்தது; தூரத்து மக்களெல்லாம் வந்து பயின்றது. நாளந்தா, பீஹார்

மாநிலத்தில் பார்கான் கிராமத்திற்கு அருகில் அமைந்திருக்கின்றது. பல பௌத்த மடங்களும் கட்டிடங்களும் சீர் குலைந்து கிடப்பதை இன்றும் இங்கு காணலாம். சமய போதகர்களாகிய மகாவீரர், புத்தர் இவர்களது காலத்திலேயே நாளந்தா புகழ்பெற்றுப் பொலிவுடன் விளங்கியது. ஜைன நூற்களிலிருந்து, நாளந்தா, ராஜக்கிருகம் என்னும் சிறப்பு வாய்ந்த பழம்பெரும் நகரத்தின் ஒரு புறத்தில் இருந்ததாகத் தெரிய வருகின்றது. மகாவீரர் பல ஆண்டுகள் இங்கே கழித்தார். புத்தர் பல தடவைகள் இங்கு வந்து சென்றிருக்கின்றார். பாலி மொழியில் எழுதப் பட்ட இலக்கியங்கள் நாளந்தாவின் எழிலினை நன்கு எடுத்தியம்புகின்றன. புத்தர் பிரானின் சீடரான சாரி புத்திரரின் சைத்தியக் கோயில் நாளந்தாவில்தான் இருக்கின்றது. பேரரசர் அசோகர் இக்கோயிலை வழி பட்டார். மேலும் அவர்தான் இங்கு முதன் முதலாகக் கோயிலைக் கட்டச் செய்தவர். கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் வாழ்ந்த பௌத்த தத்துவஞானியாகிய நாகார்ஜுனர் இங்குதான் தன் ஆராய்ச்சிகளைத் தொடங்கினார். இப் பல்கலைக் கழகப் பேராசிரியராகவும் பணியாற்றினார். இவர் காலத்தில் வாழ்ந்த சுவிஷ்ணு என்னும் பௌத்தப் பெரியார், பௌத்த மதத்தின் வளர்ச்சியின் பொருட்டு, நூறு கோயில்களுக்கு மேல் இங்கு கட்டச் செய்தார். நாகார்ஜுனர் காலத்திலிருந்து ஏழாவது நூற்றாண்டு, முடிய பௌத்தக் கொள்கைகள் பரவுதற்குத் துணையாகவும், ஆராய்ச்சிக்குச் சிறந்த உறைவிடமாகவும் நாளந்தா சிறந்து விளங்கியது. குப்தப் பேரரசர்கள் காலத்தில்தான் இப் பல்கலைக்கழகம் வளர்ச்சி பெற ஆரம்பித்தது என்பதை, இங்கு புதை பொருள் ஆராய்ச்சியாளர்களால் தோண்டியெடுக்கப்பட்ட குப்த நாணயங்களாலும் பிற பொருட்களாலும் நம்மால் அறிய முடிகின்றது. சகராதித்தியன் என்னும் அரசனால் இங்குள்ள பௌத்த மடங்கள்

கட்டப்பட்டன என்று யுவான் சுவாங் குறிப்பிடுகின்றார். இவ்வரசனை வரலாற்று ஆசிரியர்கள் முதலாவது குமார குப்தன் என்று கருதுகின்றனர்.

இந்திய நாட்டுத் தொன்மையான நூலகங்களில் முதன்மையான நூலகம் நளாந்தா பல்கலைக்கழக நூலகமே யாகும். இப்பல்கலைக் கழக நூலகம் 'ரத்னோததி' (Ratnodadhi) என்ற பெயருடன் நின்று நிலவியது. இதன் பொருள் முத்துக் கடல் (Sea of diamonds) அல்லது அறிவு மணி கொழிக்கும் அலைகடல் ஆகும். இந் நூலகம் ஒன்பது அடுக்கு மாளிகையில் அமைந்திருந்தது என்றும், இந்நூலகத்தில் 12′ × 8′ அளவுள்ள அறைகள் பல இருந்தன என்றும், இந்திய நாட்டுத் தொல்பொருள் ஆய்வுக் கழகக் குறிப்பொன்று கூறுகின்றது. எட்டாவது நூற்றாண்டில் இந்நூலகம் பௌத்த மத எதிரிகளால் எரியூட்டப்பட்டது.

**பொற்காலம்: (குப்தர்கள் காலம்)**

இந்திய வரலாற்றில் பொற்காலம் என்று புகழ்ந்து பேசப்படும் குப்தர்கள் ஆட்சியின் பொழுது ஆலயங்களில் அறிவு நூற்களும் ஏடுகளும் சேகரித்து வைக்கப்பட்டு, மக்கள் அவைகளைப் பயன்படுத்தச் செய்தனர். கி. பி. ஆறாவது நூற்றாண்டைச் சேர்ந்த வல்லபி சாசனத்தின் மூலம் அரசாங்கத்திலிருந்து நன்கொடையும் இந்த அறிவுத் திருப்பணிக்கு அளிக்கப்பட்டது என்பது தெரிய வருகின்றது. ஏழாவது நூற்றாண்டின் தொடக்கத்தி லிருந்து அதை அடுத்த மூன்று நூற்றாண்டுகள் வரை மக்கள் ஓலைச் சுவடிகளைச் சேகரிப்பதில் ஆர்வமும் அக்கரையும் காட்டினர். அவ்வாறு சேகரிப்பதை ஒரு சிலர் பொழுது போக்காகவும் பலர் சிறந்த செயல் என்றும் சிந்தையில் கொண்டு பணிபுரிந்தனர்.

அக்கினி புராணம் என்னும் வடமொழி நூலிலிருந்து அக்காலத்தில் ஓலைச் சுவடிகளைத் தேடித் திரட்டுவதில் மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர் என்றும் அவைகளைப் பாதுகாப்பதில் அவர்கள் அளவிறந்த அக்கரை காட்டினர் என்றும் தெளிவாகப் புலனாகின்றது. ஓலைச் சுவடியினைத் தேடித் திரட்டுவதன் சிறப்பை, "எவனொருவன் ஓர் ஓலைச் சுவடியினைத் தேடித் தந்து மக்களுக்குப் பயனாட்டு கிறானோ அவனுக்குப் பேரின்பப் பெரு வாழ்வு உண்டு" என்று அக்கினி புராணம் கூறுகின்றது. ஓலைச் சுவடியினை நன்கு பாதுகாத்தனர் என்பது "எவனொருவன் ஓலைச் சுவடியினைத் திருடுகின்றானோ அவன் தன் ஒரு விழியினை இழப்பதோடு தன் இனத்தோடு இருள் சேரும் இன்னா உலகம் சேர வழி வகுத்துக் கொள்கிறான்" என்றும் அதே நூல் குறிப்பிடுகின்றது.

**கி.பி. 8-வது நூற்றாண்டில்:**

எட்டாவது நூற்றாண்டிலே பீகார் மன்னர்களாகிய பால் பரம்பரையினர் காலத்தில் 'விக்கிரம சீலா' 'உதன் தபூர்' பல்கலைக் கழக நூலகங்கள் பொலிவுடன் விளங்கின. இவைகளது காலம் கி. பி. எட்டாவது நூற்றாண்டாகும். திபேத் நாட்டைச் சேர்ந்த அருளாளர்கள் இந் நூலகங்களைப் போற்றிப் புரந்தனர். இதுகாறும் நாம் குறிப்பிட்ட இரு பல்கலைக் கழகப் படிப்பகங்களையும் திபேத் பகுதி அருளாளர்கள் நன்கு பயன்படுத்தியதோடன்றி "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பரந்த உணர்வால் தாம் கற்றதையும் பாலிமொழி, வடமொழியில் சிறந்த காவியங்களையும் கருத்தோவியங்களையும் தங்கள் தாய்மொழியில் மொழிபெயர்த்துக் கொண்டனர்.

உதன்தபூர் ஒளிவிளக்கு எனப் போற்றிப்புகழப்பட்ட இந்நூலகம் துறவிகள் உறைவதற்காக அமைக்கப்பட்ட

அறிவாலயத்தில்தான் ஏற்றிவைக்கப்பட்டது. இந்நூலகத்தில் சேகரித்துவைக்கப்பட்டிருந்த நூற்றொகுதிகளாந்தா பல்கலைக் கழக நூலகத்தைக் காட்டிலும் அளவிலும் அமைப்பிலும் சிறந்திருந்தது என அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் இந்நூலகம் கி. பி. 1202–ல் பக்தியா கில்ஜி என்ற முகம்மதியத் தளபதியின் சீற்றத்திற்கு இரையாகிச் சிதைந்துவிட்டது. ஆத்திரக்காரனின் கோபத் தணலினால் அந்த அறிவாலயம் இடிந்து மண்மேடாயிற்று.

**புராதன சைன நூலகங்கள் :**

பண்டு தொட்டுப் பௌத்த நூலகங்கள் இருந்ததைப் போன்று சைன நூலகங்களும் நம் நாட்டில் சிறந்து விளங்கின. கத்தியவார், குஜரத், பட்டன், சூரத், ஜெசால்மிர், கேம்பே, பட்னர், அகமதாபாத் முதலிய இடங்களில் விளங்கிய சைன மடங்களில் எண்ணிறந்த ஏடுகள் ஒன்றாக வைக்கப்பட்டிருந்தன. பட்டன் நகரத்தில் விளங்கிய நூலகத்தில் 13 ஆயிரத்துக்கு மேற்பட்ட சைன சமய உண்மைகளை உரைக்கும் ஓலைச் சுவடிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

சைன பௌத்த நூலகங்களைப் போல, பெனாரிஸ், மைசூர், பப்னா, சிருங்கேரி, திருகட் முதலிய இடங்களில் உள்ள இந்து மடங்களில் சமயச் சார்பான நூல்கள் தொகுத்துவைக்கப்படலாயின.

11, 12-வது நூற்றாண்டுகளில் விளங்கிய நூலகங்களிலே முறையே உலகப் புகழ்பெற்ற தார்நாட்டுப் பேரரசர் போஜனது அரசவை நூலகமும், சாளுக்கிய வேந்தன் விசாலதேவனது அரசாங்க நூலகமும் குறிப்பிடத் தகுந்தவைகளாகும். இவைகளைப்போன்று ஆள்வார், ஜெய்பூர், ஜோத்பூர், பிகானிர், காஷ்மீர், மைசூர், நேபாளம் முதலிய இந்திய நாட்டுப் புராதனத் தனியரசுகளிலும் நூலகங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

**மொகலாயர் காலத்தில்:**

மொகலாயர் காலத்தில் நம் நாட்டில் நூலக இயக்கம் தொடங்கப் பெறுவிட்டாலும், ஒரு சில மொகலாய அரசவை நூலகங்கள் சிறந்துவிளங்கின என்பதை இந்திய வரலாற்றின் மூலம் நம்மால் அறிய முடிகிறது.

முகம்மதிய மன்னர்களில் முதன் முதலில் அரசாங்க நூலகமொன்றினைத் தொடங்கியவர் கில்ஜி வமிசத்தைச் சேர்ந்த ஜலாலுடீன் கில்ஜி என்ற அரசராவார். மேலும் அவர் அமீர் குஸ்ரூ என்பவரை அந்நூலகத் தலைவராய் நியமித்தார். அதே காலத்தில் வாழ்ந்த நைசாம் உடீன் என்பவரும், ஒரு முகமதிய நூலகத்தினைத் தோற்று வித்தார்.

மொகலாயப் பேரரசில், பல அரசவை நூலகங்கள் திறக்கப்பட்டன. இந்நூலகங்களை மேற்பார்வை இடுவதற்குப் பல அரசாங்க அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். பாபர் பேரரசர் காலத்தில் ஆப்கன் காஜிகானல் ஏற்படுத்தப்பட்ட நூலகம் மிகச் சிறந்து விளங்கியது. ஹுமாயூனும் காம்ரானும் சிறையிலிருந்தபோது, இந் நூலகத்திலிருந்து அவர்களுக்குப் படிப்பதற்காக நூல்கள் அனுப்பப்பட்டன என்று கூறப்படுகின்றது.

பாபரின் மகன் ஹுமாயூன் சிறந்த கலைப் பிரியராவார். இவர் இரண்டாவது தடவையாக ஆட்சியைப் பெற்ற பிறகு, தம்முடைய அழகு மிகு கேளிக்கை மாளிகை (Pleasure house) யாகிய 'ஷெர்மண்டாலே' சிறந்ததொரு நூலகமாக்கிக் கிடைத்தற்கரிய கையெழுத்துச் சுவடிகள் பலவற்றை அங்கு சேகரித்து வைத்திருந்தார். இதேபோன்று அறிவிற் சிறந்த அக்பர் பேரரசரும் சிறந்த சுவடிகளை எல்லாம் அரண்மனையில் சேகரித்து வைத்த தோடமையாது, அவைகளை எல்லாம் பொருள் (Subject)

வாரியாக வகைப்படுத்தச் (Classification) செய்தார். அரசாங்க அதிகாரிகளில் பலர் அக்பர் காலத்தில் நூலக அதிகாரிகளாகவும் பணியாற்றினர்.

கி. பி. பதினைந்தாவது நூற்றாண்டில் தென்னாட்டில் சிறந்து விளங்கிய வல்லரசுகளில் ஒன்றான பாமினி வல்லரசின் முதல் அமைச்சராய் விளங்கிய முகமது கவாம் என்பவர் தம் சொந்தச் செலவிலேயே பெரியதொரு நூலகத்தினைத் தொடங்கியதோடு நில்லாது, அந்நூலகத்தினை அன்று மிகச் சிறந்து விளங்கிய பீடார் கல்விக் கழகத்துடன் இணைத்து மக்கள் பயன்படுத்தும்படிச் செய்தார். இந்நூலகத்தில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட கையெழுத்துச் சுவடிகள் சேகரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வந்தமை சிறந்ததொரு செயலாகும். அகமத் நகர், பிஜப்பூர் இவ்விரண்டிடங்களிலும் இரண்டு மொகலாய நூலகங்கள் சீருடன் விளங்கின.

மொகலாய நூலகங்களைப் பற்றிப் பேசுகையில் ஹைதராபாத் நகரில் வாழ்ந்து வந்த, சையத் பெல் கிராமியால் தொடங்கப்பட்ட நூலகத்தினைப் பற்றி எண்ணுமலிருக்க முடியாது. ஏனெனில் விலையுயர்ந்ததும் பழமையானதுமான சில பொருட்களும், எண்ணிறந்த கையெழுத்துச் சுவடிகளும் இந்நூலகத்தில் இடம்பெற்றிருந்தன.

## ஆங்கிலேயர் காலம்

### இந்திய நூலக இயக்கம்:

[இப் பகுதியில் தரப்பட்டிருக்கும் புள்ளி விவரங்கள் கி. பி. 1935 க்கு முற்பட்டவை.]

இந்திய நாட்டில் நூலக இயக்கத்தின் தொடக்கம் கி. பி. 1910-ஆம் ஆண்டில்தான் என்று கூறவேண்டும்,

இந்த இயக்கத்தினைத் தொடங்கிய பெருமை பரோடா தனி அரசைச் சாரும். முதல் பொது மக்கள் அரசாங்க நூலகத்தினைத் தொடங்கிய பெருமையும் புகழும் இத்தனியரசிற்குத்தான் உரியது. நூலக வளர்ச்சிக்காக இந்நாட்டு மன்னன் புரிந்த பணியினையும் துணையினையும் நூலக வரலாற்றறிஞர்கள் என்றும் மறுத்தலாகாது. அம்மன்னர் புரிந்த பணி நூலக இயக்கத்திற்கே ஓர் ஆணியாகும். இவரது பேரார்வத்திற்குக் காரணம் இவர் செய்த அமெரிக்கச் சுற்றுலாவேயாகும். அமெரிக்கச் செலவை முடித்துத் தாயகம் திரும்பிய இம்மன்னர் தம்முடைய தனியரசிலும் மக்களுக்காக அமெரிக்க அரசைப்போல அளவிறந்த பொது நூலகங்களைத் திறக்கவேண்டுமென்று எண்ணினர். டபிள்யூ. ஏ. பார்டன் என்ற அமெரிக்க நூலக அறிஞரை கி. பி. 1910ல் தமது தனியரசிற்கு வரச் செய்து அவரை நூலகத்துறைத் தலைவராக (Director of Libraries) ஆக்கினர். மூன்ருண்டுகளாய்ப் பேச்சாலும் பேருழைப்பாலும் அவர் புரிந்த தூய தொண்டினுல் பரோடா தனியரசு நூலகத்துறையிலே சிறந்து விளங்கலாயிற்று. திட்டங்கள் பல தீட்டப்பெற்றன. ஊராட்சி மன்றங்கள், அரசாங்கம், மக்கள்-கூட்டுறவினுல் எண்ணிறந்த நூலகங்கள் எங்கும் பொங்கி எழுந்தன. கி. பி. 1929-30ல் தரப்பட்ட புள்ளி விவரப்படி நாற்பத்தைந்து நகர நூலகங்களும் அறுநூற்றுத் தொண்ணூற்றெட்டுச் சிற்றூர்ப் பொதுஇலவச நூலகங்களும், நூற்றுத் தொண்ணூற்ருறு படிப்பகங்களும் இத் தனியரசில் மலரலாயின. ஒரு லட்சத்திற்குமேல் இவ்வாண்டு நூலக வளர்ச்சிக்குச் செலவிடப்பட்டது. ஐந்து லட்ச நூற்கள் மக்களால் பயன் படுத்தப்பட்டன.

நூலகத்துறைப் பகுதியானது கல்வித் துறைக் குழுவினரின் மேற்பார்வையில் விடப்பட்டது. ஆனல் நூலகப் பகுதிக்கு அரசியலாரின் பேராதரவு இருந்தது. அரசிய

லார் அளிக்கும் நன்கொடை பதிவு செய்யப்பட்ட பல நூலகங்களுக்குப் பகுத்துக் கொடுக்கப்பட்டது. நூலகப் பகுதியில் இரண்டு தலைமை அலுவலர்களும், பத்து நூலகக் காப்பாளர்களும், பதினான்கு எழுத்தாளர்களும், பதினெட்டு ஊழியர்களும், நூற்களைப் பழுது பார்ப்போர் பலரும் பணி புரியலாயினர். பரோடா நகரத்திற்கு உரியனவற்றைக் கவனிப்பதற்கெனவும் சிற்றூர், மற்றும் ஏனைய நகர் நூலகங்களைக் கவனிப்பதற்கெனவும் முறையே தலைமை மேற்பார்வையாளரும் துணை மேற்பார்வையாளரும் நியமிக்கப்பட்டனர். இத்திட்டத்தின்படி, மத்திய நூலகமொன்று தலைநகரில் திறக்கப்பட்டது. ஈண்டு மக்கள் யாவரும் சென்று இலவசமாகப் படிக்கலாம். நூற்கள் பகுதி, செய்தி இதழ்கள் பகுதி, பெண்கள் பகுதி, என இந்நூலகம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. குழந்தைகள் விளையாடுவதற்கென ஓரறை ஒதுக்கப்பட்டது. எண்ணிறந்த மக்களால் பயன்படுத்தப்படும் தலை சிறந்த இந்திய நூலகங்களிலே இதுவும் ஒன்றாகக் கருதப்படுகின்றது. ஒவ்வோர் ஆண்டும் ஐயாயிரம் புதிய நூற்கள் வாங்கப்படுகின்றன. அடுத்து சிற்றூர் நூலகப் பகுதி மிகவும் முக்கியமான பகுதியாகும். இப்பகுதியின் பேருழைப்பால் தான் நாட்டின் பல இடங்களிலும் இருக்கும் மக்கள் நூற்களைப் பெற்றுப் படித்து மகிழ்கின்றனர். இப்பகுதியிலிருந்து மரப்பெட்டிகள் ஒவ்வொன்றிலும் இருபது நூற்கள் வரை வைத்து ஊர்திகளின் துணையால் நூற்கள் நாடெங்கும் அனுப்பப்படுகின்றன. மேலும் இந்நூலகத்தார் பல இடங்களுக்கும் சென்று படக் காட்சிகளின் மூலம் மக்களைக் களிப்புக் கடலில் ஆழ்த்துகின்றனர். கூட்டங்களைக் கூட்டியும், மாநாடுகள் நடத்தியும், மக்களை நூலகங்களைப் பற்றி அறியச் செய்தனர். எல்லா மாநில நூலகங்களும் ஒன்று சேர்ந்து ஒரு மத்திய நூலகக் கழகத்தினைத் தொடங்கின. இக்கழகத்தினர், நூலக நுணுக்கா

களை எல்லாம் மக்கள் அறியச் செய்ததோடமையாது தொடங்கப்பட்ட நூலகங்கள் செம்மையாக நடப்பதற்குரிய வழிகளையும் வகுத்தனர். கூட்டுறவு அடிப்படையில் புத்தகக் கடையொன்று இந்நூலகத்தாரால் தொடங்கப்பட்டது. ஈண்டிருந்துதான் எல்லா நூலகத்தார்களும் தங்களுக்கு வேண்டிய நூற்களையும் செய்தி இதழ்களையும் பெறலாயினர். குசராத்தி, மராட்டி, ஆங்கிலமொழிகளில் வெளியிடப்படும் நூற்களுக்கென ஒரு நூற்பட்டியலை இக்கழகத்தார் வெளியிடலாயினர். சுருங்கக் கூறின், பரோடாத் தனி அரசுதான் இந்திய நாட்டின் நூலக இயக்கத்திற்கு வித்திட்டது.

**இந்திய நூலகக் கழகங்கள்:**

இந்திய நாட்டில் நூலக இயக்கத்தின் பொருட்டு முதன் முதலில் தொடங்கப்பட்ட நூலகக் கழகங்கள், தெலுங்கு நாட்டு நூலகக்கழகமும், கன்னட நாட்டு நூலகக்கழகமும், மாராட்டிர நூலகக்கழகமும், குசராத்தி நூலகக் கழகமுமாகும். இந்நூலகக் கழகங்களின் குறிக்கோள் சிற்றூர்களிலும் பேரூர்களிலும் நூலகத்தை வளர்ப்பதே ஆகும். பூனு, பம்பாய், தானு என்னும் மூன்றிடங்களிலும் மாராட்டிர நூலகக் கழகத்தின் பெருமுயற்சியால் மாராட்டிர நூலகங்கள் திறக்கப்பட்டன. முதல் மாராட்டிர நூலகம் கி. பி. 1842ல் நாசிக்கில் திறக்கப்பட்டதாகும். இது போன்று, கூர்ஜரத்திலும் பல நூலகங்கள் திறக்கப்பட்டன.

**பீகார் - ஒரிசா (Bihar - Orissa.)**

இவ்விரண்டு மாகாணங்களிலும் பல நூலகங்கள் திறக்கப்பட்டன பாங்கிபூரிலிருக்கும் "குடா பாக்சா ஓரியண்டல்" (Khuda Baksha Oriental Library) நூலகம் குறிப்பிடத் தகுந்ததாகும்; மேலை நாட்டவருடைய

நாட்டத்தையெல்லாம் கவர்ந்ததாகும். அராபிய, பெர்சிய, கையெழுத்துச் சுவடிகள் எண்ணிறந்தனவும், அராபிய—பெர்சிய கலைஞர்கள் தீட்டிய படங்களும், புராதன நாணயங்களும், இந்நூலகத்தில் இருக்கின்றன.

**வங்காளம் :**

வங்காள நூலக இயக்கத்தின் தந்தை டாக்டர் இரவீந்திரநாத் தாகூராவர். வங்காள நூலகக் கழகமொன்று இப்பெரியாரால் தொடங்கப்பட்டது எல்லா மாவட்ட நூலகக் கழகங்களும் இக்கழகத்துடன் இணைக்கப்பட்டன. இவ்வங்காள நூலகச் சங்கமானது பல நூலக மாநாடுகளை நடத்தி, மக்களை நூலக உணர்வு உள்ளவர்களாக மாற்றியது. இம் மாநிலத்தில்தான் நம் நாட்டுத் தேசிய நூலகம் (கல்கத்தாவில்) சிறப்புடன் விளங்குகின்றது. கல்கத்தாவில் இருக்கும் "ராயல் ஏசியாடிக் சொசைட்டி நூலகமானது" இந்தியப் புராதன நூலகங்களில் ஒன்றாகும். இதன் வளர்ச்சிக்காக 1912 லிருந்து 1929 வரை, 40 லட்ச ரூபாய்க்குமேல், இங்கிலாந்து நாட்டு மக்கள் நல்கி உள்ளனர். கல்கத்தாவிலிருக்கும், இந்தியப் பொருட்காட்சி சாலையிலும், 'சித்ர-சிற்பக்' காட்சிசாலையிலும், கிடைத்தற்கரிய நூற்கள்பல சேகரித்து வைக்கப்பட்டன.

**பம்பாய் :**

இன்று இந்நகர் கல்வியிற் சிறந்த கவின்பெறு நகராய் விளங்கினாலும், தொடக்கத்தில், அரசியலார் நூலகவளர்ச்சிக்காக அவ்வளவு அக்கறை செலுத்தவில்லை. "அச்சகப் பதிவுச் சட்டத்தினால்," பம்பாய் மாநிலத்தில் வெளியிடப்படும் அத்தனை நூற்களும் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டன. ஆனால் அவைகள், கொடுப்பாரும் எடுப்பாருமின்றி, ஓரிடத்தில், பயனில்லாது உறங்கிக்கொண்

டிருந்தன. மாராட்டிர நூலகச் சங்கம், குசராத்தி நூலகச் சங்கம், கர்நாடக நூலகச் சங்கம்—இம்மூன்று சங்கங்களும் முனைந்து நின்று நூலக வளர்ச்சிக்காகப் பாடுபடலாயின. மாராட்டிர நூலகச் சங்கம், மராட்டி மக்கள் வாழும் பகுதிகளில், நூலக மாநாடுகள் பல கூட்டியும், நூலகப் புள்ளி விவரங்களைச் சேகரித்தும், மராட்டி மொழியில் எழுதப்பட்ட நூற்களை ஊர்கள் தோறும் அனுப்பி மக்களைப் படிக்கச் செய்தும், நூலகப் பணிபுரியலாயிற்று.

பம்பாய் நகரிலிருக்கும் "ராயல் ஏசியாடிக் சொசைட்டி நூலகம்" இந்தியப் பெரு நூலகங்களில் ஒன்றாகும். இலக்கிய, விஞ்ஞான, புதை பொருள், இன்னபிறவற்றைக் குறித்து ஆராய்ச்சி செய்தற் பொருட்டு, கி. பி. 1804-ல் இது தொடங்கப்பட்டது. இருபத்தாறு ஆண்டுகள் கழித்து, இது, லண்டன் "ராயல் ஏசியாடிக் சொசைட்டியின்" கிளையாக மாறி மாண்புடன் விளங்கலாயிற்று. தொடக்கத்தில் ஆண்டிற்கு 35,000 ரூ. வரை இதன் வளர்ச்சிக்குச் செலவழிக்கப்பட்டது. இதன் புதை பொருள்—சிறப்புப் பகுதியானது இன்று வேல்சு இளவரசர் பொருட்காட்சிசாலையோடு இணைக்கப்பட்டுள்ளது.

### பர்மா

ரங்கூன் பல்கலைக் கழக நூலகம்தான், பர்மா நாட்டுப் பெரிய நூலகமாகும். சட்சன் கல்லூரி நூலகமும், பெர்நார்டு நூலகமும் (ரங்கூன்) இந்நாட்டுச் சிறந்த நூலகங்களாகும். பெர்நார்டு நூலகத்தில் 5000-க்கு மேற்பட்ட நம் நாட்டுக் கையெழுத்துச் சுவடிகள் உள்ளன. பர்மாவிலிருக்கும் எல்லாப் பௌத்த மடங்களிலும், ஏராளமான சமயச் சார்புள்ள நூற்கள் சேகரித்து வைக்கப்பட்டன.

**மத்திய மாகாணம்—பிடார்**

கி. பி. 1928—29-ல் அரசியலார் ரூ. 16,000 மாவட்ட ஆட்சிக் குழுவினருக்கு, கிராமிய நூலகங்கள் தொடங்குவதற்கு வழங்கினர். மாவட்ட ஆட்சிக் குழுவினரால் 29 பொது நூலகங்களும், அரசினரால் 4 பொது நூலகமும் தொடங்கப்பட்டன.

**பஞ்சாப் :**

பஞ்சாப் அரசினர், மாவட்ட ஆணைக் குழுவினரையும் நகராட்சிக் குழுவினரையும், ஊராட்சிக் குழுவினரையும், பொருள் கொடுத்து ஆதரவு தந்து, சீரிய முறையில் நகரந்தோறும், கிராமந்தோறும் நூலகங்களைத் திறக்கச் செய்தனர். மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் பல, கிராமிய நூலகங்களைத் தங்கள் உறுப்பினர்களுக்குத் தொடங்கி நடத்தலாயின. முதன் முதலில் இம்மாகாணத்தில்தான் இத்தகைய நூலகங்கள் தொடங்கப்பட்டன. பஞ்சாப் பல்கலைக் கழகத்தின் அழைப்பின்பேரில் இந்தியாவிற்கு வந்த ஏ. டி. டிக்கின்சன் என்ற அமெரிக்க நூலக வல்லுநர் பஞ்சாப் பல்கலைக் கழக நூலகத்தினைச் செம்மைப்படுத்தியதோடமையாது, நூலக வகுப்புக்கள் நடத்தியும், நூலகச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், பஞ்சாபில் நூலகப் பணிபுரிந்தார். லாகூரில் இருக்கும் பஞ்சாப் மாநிலப் பொது நூலகம், இன்று இந்திய நாட்டின் இரண்டாவது பெரு நூலகமாக வைத்து எண்ணப்படுகின்றது.

**ஐக்கிய மாகாணம் :**

ஐக்கிய மாகாணத்தில் ஐந்து பல்கலைக் கழகங்கள் பார்வியக்கப் பணியாற்றுகின்றன. எனினும் நூலகத் துறையில், இம்மாகாண வளர்ச்சி ஆமை வேகத்தில் தான் காணப்படுகிறது எனலாம். கல்லூரி—பள்ளி நூலகங்கள் வளர்ச்சிக்கு, அரசியலார், நன்கொடைகள் நல்கினரே

ஒழிய ாதுமக்கள் நூலக வளர்ச்சிக்கு ஒன்றும் சிரத்தை காட்டவில்லை எனலாம்.

"நாகரி பிரச்சாரிணி சபையினர்" ஹிந்தி மொழியினைப் பரப்புவதற்காக வேண்டிப் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட நூற்களையும், எண்ணிறந்த ஏட்டுச் சுவடிகளையும் சேகரித்து, மக்களுக்குப் படிக்கக் கொடுத்துதவினர்.

**சென்னை மாகாணத்தில் :**

சென்னையில், நூலகத்துறையில், விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய பெருமை, சென்னை நூலகச் சங்கத்தாரைத் தான் சாரும். இந்நூலகச் சங்கம் கி. பி. 1928 சனவரி 31-ல், நீதிபதி வி. வி. சீனிவாச அய்யங்கார் தலைமையில் தொடங்கப்பட்டது. இச்சங்கத்தின் தலைவராய் திரு கே. வி. கிருஷ்ணசாமி அய்யர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்று டில்லி பல்கலைக் கழகத்தில் நூலகப் பேராசிரியராய் விளங்கும் டாக்டர் எஸ். ஆர். ரெங்கநாதன் இதனது செயலாளராய்ப் பணியாற்ற முன் வந்தார். மாவட்டங்கள் தோறும் சென்று, மக்களது உள்ளத்திலே கிளர்ச்சியையும் எழுச்சியையும் எழச் செய்து, வீடுகள் தோறும் ஏடுகள் விளக்கம் பெற்றிலங்க வேண்டுமென்று கூறி, இச்சங்கத்தார் நூலகப் பணிபுரியலாயினர். இவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாய், சென்னைப் பல்கலைக் கழகத்தினர், நூலகத்தார்க்கு, மூன்று மாதப் படிப்பும் பயிற்சியும் கொடுக்கலாயினர். இதற்குக் காரணமாக இருந்த பெரியார் திரு. எஸ். சத்தியமூர்த்தி ஆவர். மேலும், முதல் இந்திய நூலகச் செய்தி இதழினை வெளியிட்ட பெருமை நமது மாகாணத்தைத்தான் சாரும். பெசவாடாவிலிருந்து இச்செய்தி இதழ் வெளி வரலாயிற்று.

ஆந்திர தேச நூலகச் சங்கமும் அயராது பாடுபடலாயிற்று. இச்சங்கத்தின் ஆதரவில்தான், கி. பி. 1914-ல்,

பெசவாடாவில், முதல் ஆந்திர நூலக மாநாடு கூட்டப் பெற்றது. இதன் பின்னர், ஆந்திர நாட்டினர் நூலக வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டினர். எண்ணிறந்த நூலகங்கள் எங்கும் திறக்கப்பட்டன. இச்சங்கத்தின் பெரு முயற்சியினால்தான், கி. பி. 1919-ல் முதல் இந்திய நூலக மாநாடு, சென்னையில் கூட்டப் பெற்றது. இதன் பின்னரே "இந்திய நூலகச் சங்கமொன்று" நிறுவப்பட்டது. இச்சங்கத்தின் ஆண்டிறுதிக் கூட்டங்கள், இந்தியாவில் பல இடங்களிலும் நடத்தப் பெற்றன.

சென்னை மாகாணத்தில் எண்ணிறந்த, கல்லூரி, உயர்நிலைப் பள்ளி நூலகங்கள் தொடங்கப்பட்டன. இந்நூலகங்களுக்கு அரசியலார் பொருளுதவியும் அவ்வப்பொழுது செய்யலாயினர். பின்வரும் நூலகங்கள் இம்மாகாணத்துத் தலைசிறந்த நூலகங்களாகும்.

(1) அடையார் நூலகம், சென்னை
(2) அரசியலார் 'ஓரியண்டல்' நூலகம், சென்னை
(3) கன்னிமாரா பொது நூலகம், சென்னை
(4) தஞ்சைப் பொது நூலகம், தஞ்சாவூர்
(5) சென்னைப் பல்கலைக் கழக நூலகம்
(6) அண்ணாமலைப் பல்கலைக் கழக நூலகம்
(7) நீலகிரி நூலகம், உதகமண்டலம்
(8) சென்னை இலக்கிய—ஆசியச் சங்க நூலகம்

மேலும், ஊராட்சிக் குழுவினராலும், நகர் மன்றத்தினராலும் பல படிப்பகங்கள் திறக்கப்பட்டன. இதற்கு முனிசிபல் சட்டம் இடம் கொடுத்தது. அரசியலாரும் பொருளுதவி செய்யலாயினர்.

சென்னை நூலகச் சங்கத்தாருக்கு நாம் என்றும் கடமைப் பட்டுள்ளோம். மாட்டு வண்டிகளில் நூற்களை ஏற்றி, சிற்றூர்கள்தோறும் சென்று, அறிவுப் பணிபுரிந்

தனர். மருத்துவக் கூடங்களுக்குச் சென்று, நூற்களை மக்களுக்குப் படிக்கக் கொடுத்துதவினர். டாக்டர் அரங்கநாதன் எழுதிய நூலகத்துறை பற்றிய நூற்களை எல்லாம் அச்சேற்றி, நம்மனைவருக்கும் கிடைக்கச் செய்த பெருமை சென்னை நூலகச் சங்கத்தாரையே சாரும். நூற்களை வகைப்படுத்திக் குறியீடுகள் வழங்கும் முறைகளில், தலை சிறந்தது என்று உலகினராலும்கூட உயர்த்திப் பேசப் படும், "கோலன் முறையினைக்" கண்டுபிடித்த பெரியாரும் டாக்டர் அரங்கநாதனே யாவர். இப்பெரியாருடன் தோளோடு தோளாய் நின்று, நூலகப் பணிபுரியும் மற்றொரு பெரியார் கே. எம். சிவராமனுவார். இவர் இச் சங்கத்தின் துணைச்செயலாளர் ஆவர்.

**இந்திய கையெழுத்துச் சுவடி நூல்கள் :**

பத்தொன்பதாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசியலார், வடமொழிக் கல்லூரிகளையும், பள்ளிகளையும் திறப்பதற்குப் பெரு ஆதரவு தந்தனர். ஆனால் புராதன இந்திய நாட்டுக் கையெழுத்துச் சுவடிகளைச் சேகரிப்பதில் ஒரு அக்கறையும் காட்டவில்லை. மக்களும் அவ்வாறே வாளா இருந்தனர். ஆனல் கி. பி 1911ல், சிம்லாவில் நடந்த கீழைநாட்டுப் பேராசிரியர்கள் மாநாட்டில், பழைய வடமொழிக் கையெழுத்துச் சுவடிகளைச் சேகரிப்பதற்குக் கல்கத்தா நகரில் ஒரு மத்திய அலுவலகத்தை ஏற்படுத்துவ தென்று முடிவு செய்யப்பட்டது; இம்மாநாட்டினைக் கூட்டியது இந்திய அரசாங்கமாகும். இதன் பின்னர், கையெழுத்துச் சுவடிகளுக்கெனப் பத்து இடங்களில் அலுவலகங்கள் நிறுவப்படவே, மக்கள் கையெழுத்துச் சுவடிகளைச் சேகரிப்பதில் அக்கறையும் ஆர்வமும் காட்டினர். பம்பாய் அரசாங்கம் எண்ணிறந்த ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்ததோடு அமையாது, அவைகளை எல்லா மக்களும் பயன்படுத்த வேண்டும் என்ற பேரெண்ணத்தினுல், அச்

சுவடிகளை எல்லாம், பூனு பந்தர்கார் ஆய்வுக் கூடத்திற்கு அன்புடன் அளித்தது. மற்ற மாநிலங்களும் இது போன்று ஏட்டுச் சுவடிகளைச் சேகரிக்கலாயின.

பந்தர்கார் ஆய்வுக் கூடத்திலிருக்கும் வடமொழிக் கையெழுத்துச் சுவடிகளின் எண்ணிக்கை 20,000 ஆகும். சென்னை 'ஓரியண்டல்' கையெழுத்துச் சுவடிகள் நூலகத்திலிருக்கும் வடமொழிக் கையெழுத்துச் சுவடிகளின் எண்ணிக்கை 23,000 ஆகும். மேலும் 10,000க்கு மேற்பட்ட தமிழ் தெலுங்கு கையெழுத்துச் சுவடிகளும் இங்குள்ளன. சென்னை அடையாற்றில் இருக்கும் 'தியாசபிக்கல்' சங்கத்தின் கையெழுத்துச் சுவடிகள் நூலகம், உலகோரால் உயர்த்திப் பேசும் அளவிற்குச் சிறந்து விளங்குகின்றது. கல்கத்தாவிலிருக்கும் ஆசியச் சங்கத்தினர் நூலகத்தில் 14,000க்கு மேற்பட்ட, வடமொழிக் கையெழுத்துச் சுவடிகளும் 6000க்கு மேற்பட்ட அராபிக், பெர்சியன் கையெழுத்துச் சுவடிகளும் உள்ளன. பெனாரிசிலிருக்கும் வடமொழிக் கல்லூரியில், எண்ணிறந்த சுவடிகள் இடம் பெற்றுள்ளன. வங்காளத்திலிருக்கும் ஆசியச் சங்கத்தாரின் நூலகத்தில் 6000க்கு மேற்பட்ட பெர்சிய-அராபிய கையெழுத்துச் சுவடிகள் உள்ளன. இச் சுவடிகள் சீரங்க பட்டினத்திலிருந்த திப்புசுல்தான் நூலகத்திலிருந்து கொண்டு வரப்பட்டவைகளாகும். புராதன இந்தியப் பேரரசர்களது கையெழுத்துச் சுவடிகளெல்லாம் பாட்னாவில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

**மேலை நாடுகளில் நம் நாட்டுச் சுவடிகள்:**

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில், எண்ணிறந்த கையெழுத்துச் சுவடிகளை நம் தாயகத்திலிருந்து, மேலை நாட்டார் பலர் எடுத்துச் சென்றுள்ளதை வரலாறு காட்டுகின்றது. பெரும்பான்மையான சுவடிகள் செர்மானியரால் கொண்டு செல்லப்பட்டன. அவைகளெல்லாம் அவர்

களுடைய தேசீய நூலகத்தை இன்றும் அழகு செய்கின்றன. பெர்லின் நூலகத்தில் 40,000க்கு மேற்பட்ட வடமொழிக் கையெழுத்துச் சுவடிகள் உள்ளன. இங்கிலாந்திலிருக்கும் இந்திய அலுவலக நூலகத்தில் 35,000க்கு மேற்பட்ட, வடமொழி-பெர்சிய-அராபியச் சுவடிகள் உள்ளன. திப்புசுல்தான், தானே எழுதிய 'அவனது கனவுகளை'ப்பற்றிய சுவடிகளும், அவனது 'குர்ஆனும்' இங்குள்ளன. இங்கிருக்கும் சிறப்பான சுவடிகளில் நூறு தங்க ஓலைகளாலானதும், பாலி மொழியில், எழுதப்பட்டதுமான, ஒரு கையெழுத்துச்சுவடி குறிப்பிடத் தக்கதாகும். கத்தியினால் இவ்வெழுத்துக்கள் வெட்டப்பட்டிருக்கின்றன.

ஆக்சுபோர்டு நூலகத்தில் 16,000 வடமொழிக் கையெழுத்துச் சுவடிகளும், பாரிசு நூலகத்தில் 12,000 சுவடிகளும் உள்ளன.

இந்திய நாட்டு நூலகங்களில் ஏறத்தாழ $1\frac{1}{2}$ லட்சம் கையெழுத்துச் சுவடிகளிருக்கின்றன. சாந்தினிகேதன் விசுவபாரதி நூலகத்திலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்திலும் எண்ணிறந்த சுவடிகள் உள்ளன.

இந்திய நாட்டுத் தனியரசுகளில் பல, கையெழுத்துச் சுவடிகளைச் சேகரிப்பதில் முனைந்து நின்றன. அவைகளில் பரோடா, மைசூர், நேபால், பிகானிர், ஜெய்பூர், சோட்பூர், காசுமீர், திருவனந்தபுரம் தனியரசுகள் குறிப்பிடத் தகுந்தவைகளாகும்.

**லண்டன் மாநகரில் இந்திய நூலகம்:**

வணிகத்தின் பொருட்டு நம் வளநாடு வந்த ஆங்கிலேயர்கள், நம்மை அடிமைப்படுத்தியதோடமையாது, ஆட்சிப் பொறுப்பையும் மேற்கொண்டனர். இதன்

பின்னரே, அறிவும் திறனுமிக்க, பல ஆங்கிலேயர்கள் நம் நாட்டிற்கு வரலாயினர். வந்தவர்களில் சிலர் நம்நாடு சிறந்ததொரு அறிவுக் களஞ்சியமாய் விளங்குதல் கண்டு வியப்படைந்தனர். சில ஐரோப்பிய அறிஞர்கள் நம் தாயகம் வந்து, வடமொழி பயின்று, ஆராய்ச்சியிலும் ஈடு பட்டனர். இந்திய நாட்டுச் சட்ட திட்டங்களை ஒட்டியே ஆட்சி நடத்த விரும்பிய வாரன் ஏசுடிங்சு கி. பி. 1776ல், இந்துச் சட்டங்களை, வடமொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கச் செய்தார். சில ஆண்டுகளுக்குப் பின்னர், சர் வில்லியம் சோன்சு என்பவரால், நம் நாட்டுப் புராதன இலக்கியம், சிற்பம், வரலாறு, இவற்றை ஆராய்தற் பொருட்டு, கல்கத்தாவில், ஆசியச் சங்கத்தை (Asiatic Society) நிறுவினர். இப்பெரியாரது, தளராத உழைப்பினுல், பல ஏட்டுச் சுவடிகள் சேகரிக்கப்பட்டன. ஆனால் சேகரித்த ஆங்கிலேயர்கள், தங்கள் தாய்நாடு திரும்பிய பொழுது, அவைகளையும் உடன் கொண்டு சென்றனர்.

இதனை அறிந்த கம்பெனி டைரக்டர்கள், இந்தியாவின் கலைச் செல்வங்கள் எங்கு பலருக்கும் பயன்படாமல் போய்விடுமோ என அஞ்சி, 'இந்தியா இல்லம்' என்னும் கட்டிடத்தில், இத்தகைய கலைச்செல்வங்களைச் சேகரித்து வைக்க முற்பட்டனர். ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்துக் கொடுத்தவர்கள் போற்றப்பட்டனர். இதற்குப் பேராதரவு தந்தவர் ராபர்ட் ஆர்ம் என்பவராவார். இவரே "மொகல் பேரரசின் வரலாற்றுத் துணுக்குகள்" என்னும் ஆங்கில நூலினை எழுதியவர்.

கம்பெனியார் இட்ட வித்தானது, மரமாகிப் பூத்துக் குலுங்கி, காயாகிக் கனியாவதற்குக் காரணமாக இருந்தவர் சார்லசு வில்கின்சன் ஆவார். பகவத்கீதையை முதலில் மொழி பெயர்த்தவர் இவரே. பதினாறு ஆண்டுகள் இந்திய நாட்டில் அலுவலராகப் பணியாற்றிய இவர், தம் ஓய்வு

நேரத்திலெல்லாம், வடமொழி பயின்று, தம் தாய்நாடு திரும்புங்கால் சிறந்த வடமொழி அறிஞராய்ச் சென்றார்.

இதற்கிடையில், கம்பெனியார் லண்டனிலேயே இந்தியா நூலகம் ஒன்றினை ஏற்படுத்தினர். பழம் பொருள் நிலையமொன்றினையும் இதனோடு இணைத்தனர். இவ்விரண்டிற்கும் தலைவராய், சார்லசுவில்கின்சனை நியமித்தனர். இவருக்கு 200 பவுன்கள், ஆண்டுச் சம்பளமாகக் கொடுத்தனர். முதலில் இங்கு வந்து சேர்ந்த பொருள்கள் மூன்று யானை மண்டை ஓடுகள்தான். பாரசீகத்தில் எழுதப்பட்டதும், 'மொகல் சரிதம்' அடங்கியதுமாகிய கையெழுத்துச் சுவடி அடுத்து இங்கு அனுப்பப்பட்டது. ராபர்ட் ஆர்ம் பல அரிய நூற்களைத் திரட்டித் தந்தார். மேசர் பீட்சன் என்பவரால், திப்பு சுல்தானின் நாட் குறிப்பும், வெள்ளைக்காரனைக் கீழே தள்ளி அறைவதுபோல் அமைக்கப்பெற்ற ஒரு புலியின் பொம்மையும், அனுப்பப் பட்டன. மேலும் பல மண்டை ஓடுகளும், பழைய நாணயங்களும், சிலைகளும், திராவகத்தில் போட்டு வைத்த பறவைகளும், விலங்கினங்களும், ஏராளமாகச் சேகரிக்கப் பட்டன. இந்தியாவில் பணியாற்றிய பின்வரும் ஆங்கிலேயர்கள், சிறந்த அக்கறையுடன், நூற்களையும், ஏட்டுச் சுவடிகளையும் சேகரித்து அனுப்பினர்.

1. கர்னல் மெக்கென்சி, 2. வாரன் ஏசுடிங்சு, 3. ஹாஜ்சன், 4. பிலிப் பிரான்சிசு, 5. லீடன், 6. சர் வில்லியம் ஜோன்சு, 7. கோல்ப்ரூக், 8. கர்னல் பவர். இதற்கிடையில் கி. பி. 1867 ல், இந்திய நூற் பதிவுச் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. இதன்படி, இந்தியாவில் வெளியிடப்படும் ஒவ்வொரு புத்தகத்திலும் ஒரு படி இந்திய அலுவலக நூலகத்திற்கு அனுப்ப வேண்டியதாயிற்று. இதனால் எண்ணிறந்த நூற்கள் இந் நூலகத்தில் இடம் பெற்றன! எனவே ஒரு திருத்தம்

கொண்டுவரப்பட்டது. அதன்படி புத்தகப் பட்டியல் மாத்திரம் அனுப்பப்பட்டது. அப்பட்டியலிலிருந்து, வேண்டிய புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

கி. பி. 1836 ல் இதன் அதிகாரியாக ஹொரேசு ஏமன் என்பவர் பதவியேற்றார். பொருட்காட்சி சாலையும், நூல் நிலையமும் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டன. கி. பி. 1858 முதல் இதனது ஆட்சிப் பொறுப்பைக் கம்பெனியாரிட மிருந்து அரசியலாரே ஏற்றுக் கொண்டனர். இந் நூலகத்தில், 20 ஆண்டுகளுக்கு முன்னால் தரப்பட்டிருக்கும் கணக்கின்படி, இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட நூற்களும், 20,000 க்கு மேற்பட்ட கையெழுத்துச் சுவடிகளும் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. இந் நூலகத்தில் இருந்த தமிழ் நூற்கள், ஏட்டுச் சுவடிகளின் எண்ணிக்கை 15,000 ஆகும்.

மேற் கூறிய நூலகமும், பொருட்காட்சி நிலையமும், இன்று நம் அரசியலாரிடமே திருப்பித் தரப்பட்டுவிட்டன என்று அறிகையில் பெரு மகிழ்வு கொள்ளவேண்டியவர்களாயிருக்கின்றோம்.

## இந்தியக் குடியரசில்

### 1. சென்னை மாநில நூலகச் சட்டம் (Madras Public Libraries Act)

துள்ளித் திரியும் இளமைக் காலத்தில் பள்ளியில் நாம் பயிலும் கல்வி, பள்ளிப் படிப்பிற்குப் பின்னும் வாழ்நாள் முழுமையும் தொடர்ந்து கற்றாலொழியப் பயனற்றதாகி விடுகின்றது. பள்ளிப் படிப்பு முடிவு பெற்றதும் தொடர்ந்து படிக்கவேண்டும் என்ற ஆர்வம் அனைவரிட மும் இருக்கலாம். ஆனால் வாழ்க்கைப் போராட்டத்தில்

வெற்றி காணப் பாடுபடும் அவர்களுக்கு உலகில் வெளியாகும் நூல்களனைத்தையும் வாங்கிப் படிப்பதற்குரிய வழியோ வசதியோ இல்லை. பொருளாதாரத் துறையில் பின் தங்கிக்கிடக்கும் இச் சமூகம் நூற்களை விலை கொடுத்து வாங்கிப் பெறுதலும் இயலாது. இக் குறையினைப் போக்கவும் நாடெங்கும் அறிவு நீரோடையைப் பாய்ச்சவும் ஏற்பட்டதே பொது நூலகமாகும். இவ்வுண்மையை உணர்ந்த நம் அரசியலார் பொது மக்கள் நலனுக்காகப் பல பொது நூலகங்கள் திறக்க வேண்டுமென்பதற்காகக் கி. பி. 1948 ல் சென்னை நூலகச் சட்டத்தினைக் கொண்டு வந்தனர். நூலகங்களின் வளர்ச்சியின் பொருட்டு இந்திய மாநிலங்களில் முதன் முதலாக நூலகச் சட்டத்தினைக் கொண்டுவந்து வெற்றிபெற்றது சென்னை மாநிலமாகும். கி. பி. 1950 லிருந்து இச் சட்டம் நடைமுறையிலுள்ளது.

**மாநில நூலகக் குழு:** (Madras State Library Committee)

இச் சட்டத்தின்படி அரசியலாருக்கு ஆலோசனை கூறுதற்காக மாநில நூலகக்குழு ஒன்று செயலாற்றுகின்றது. பின் வருபவர்கள் இக்குழு உறுப்பினர்களாவர். 1. கல்வி அமைச்சர் 2. தல ஆட்சி அமைச்சர் 3. மாநிலக் கல்வித் துறைத் தலைவர் 4. நூலகத் தனி அலுவலர் (Special Officer for Publik Libraries) 5. சென்னைச் சட்ட சபையால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு சட்ட சபை உறுப்பினர் 6. ஒரு மேல்சபை உறுப்பினர் (M. L. C.) 7. அண்ணாமலை, சென்னைப் பல்கலைக் கழகச் செயற்குழு உறுப்பினர்களில் தனித் தனியாகத் தேர்ந்தெடுக்கப்படும் இருவர் 8. சென்னை, கேரள, கன்னட நூலகச் சங்கங்களின் செயற்குழுவினரில் ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒரு உறுப்பினராய்த் தேர்ந்தெடுக்கப்படும் மூவர் 9. கல்வி

அமைச்சரால் நியமிக்கப்படும் நூலகத்துறையில் சிறப்பாகப் பயிற்சி பெற்ற ஒருவர் (Librarian) 10. சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவினரில் ஒருவர் 11. ஏனைய மாவட்ட நூலக ஆணைக் குழுவினரில் இருவர்.

இக் குழுவின் தலைவர் கல்வி அமைச்சராவார். இக் குழுவினரால் தீட்டப்பெறும் திட்டங்களைச் செயற்படுத்துபவர் மாநில நூலகத் துறைத் தலைவராவார் (D. P. L.). மாநிலக் கல்வித் துறைத் தலைவரே இன்று நூலகத் துறைத் தலைவராய் விளங்குகின்றார். இதற்கென்று இப்பொழுது தனிப்பட்ட தலைவரில்லை. நூலகத் துறைத் தலைவருக்குத் துணையாகப் பணிபுரியும் நூலகத் தனி அலுவலரே இக் குழுவின் செயலாளராவார். இக்குழு உறுப்பினர்கள் மூன்றாண்டுகள் வரை தொடர்ந்து பதவியிலிருக்கலாம். கல்வி அமைச்சரால் அவ்வப்பொழுது அறிவிக்கப்படும் இடங்களில் நடக்கும் நூலகக் கூட்டத்திற்கு வரும் ஒவ்வொரு உறுப்பினரும் பயணச் செலவும், தங்கும் செலவும் சட்டசபை உறுப்பினர்களுக்குக் கிடைக்கும் அளவினதாய்ப் பெற்றுக்கொள்ளலாம். கூட்டம் நடப்பதற்குக் குறைந்தது ஐந்து உறுப்பினர்களாவது இருக்க வேண்டும். குழுவின் தலைவர் வராவிட்டால் உறுப்பினர்களில் ஒருவரைக் கூட்டம் நடத்துவதற்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மாநிலக்குழு. உட்குழுக்களை நியமித்துக் கொள்ளலாம் (Sub Committees). உறுப்பினர்களில் சிலரைத் தவிர நூலகத் துறையில் சிறந்து விளங்குகின்ற ஒரு சிலரையும் உட்குழு உறுப்பினர்களாய்ச் சேர்த்துக் கொள்ளலாம். நூலக நுணுக்கங்கள் சிலவற்றை ஆராய்ந்து முடிவுகட்டுவதற்குரிய உரிமையினை உட்குழுவினருக்கே மாநிலக் குழுவினர் விட்டுவிடலாம்.

மாநிலக் குழுவினர் அரசியலாருக்கு அவர்கள் நடைமுறை, செயல் வகைகள் பற்றி ஆலோசனை கூறுவதைப் பற்றிய விடயங்கள் பின் வருவனவாகும்.

1. மத்திய, கிளை நூலகங்கள் பற்றிய விதிகள்.
2. நூலகத் துறைக்குரிய பலதிறப்பட்ட அலுவலர்களது நியமனம்.
3. அ. அரசாங்க நூற் தொகுப்பு வெளியிடுதல் (Bibliogrophy)

   ஆ. நூலகங்களுக்குரிய புத்தகப்பட்டியல் தயாரித்தல். (List of Books)
4. நூலகக் கூட்டுறவு முறையில் மாநிலத்தில் உள்ள நூலகங்கள் பணிபுரிதல். (Library Co-operation)
5. நூலகங்களுக்குரிய கட்டிடங்கள் கட்டுதல்
6. நூலகங்களுக்குரிய உடனுதவும் நூற்கள் (Ref. Books) முதியோர்க்குரிய நூற்கள் (Adults Books), குழந்தைகள் புத்தகங்கள், குருடர்களுக்குரிய சுவடிகள் தயாரித்து வெளியிடல்.
7. மாவட்ட நூலகக் குழுவினரால் அனுப்பப் பெறும் திட்டங்களை ஆய்தல்.

**மாவட்ட நூலக ஆணைக் குழு** (Local Library Authority)

ஒவ்வொரு மாவட்டத்திலும் நூலக வளர்ச்சியின் பொருட்டு ஒரு நூலக ஆணைக் குழுவினர் பணியாற்றுவர். இது போன்றே சென்னை நகருக்கு மட்டும் ஒரு தனிக் குழு செயலாற்றும். சென்னை நகர நூலக ஆணைக் குழுவினர் பின்வருபவர்களாவர்

1. சென்னை நகராண்மைக் கழகத்தினரால் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று உறுப்பினர்கள்.
2. சென்னை அரசியலாரால் தேர்ந்தெடுக்கப்படும் பின்வரும் எட்டு உறுப்பினர்கள்.

அ. சென்னையில் இருக்கும் அரசாங்க அனுமதி பெற்ற நூலகங்களிலிருந்து மூன்று அலுவலர்கள் (Office Bearers)

ஆ. சென்னையிலிருக்கும் இரு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள். (Head Masters)

இ. கல்லூரித் தலைவர் ஒருவர்.

ஈ. வேறு இருவர்.

4, மாவட்டக் கல்வி அதிகாரி.

**மாவட்ட நூலக ஆணைக் குழுவினர்**

1. நூலகத் துறைத் தலைவரால் தேர்ந்தெடுக்கப்படும் 10 உறுப்பினர்கள்: அவர்களில்,

அ. மூவர் நூலக அலுவலர்களாகவும்,

ஆ. ஐவர் தலைமை ஆசிரியர்கள் அல்லது கல்லூரித் தலைவர்களாகவும் இருக்க வேண்டும்.

2. மாவட்டக் கழக உறுப்பினர்

3. பஞ்சாயத்துக் குழுத் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு தாலூகாவிற்கும் ஒவ்வொரு உறுப்பினர்.

4. ஒவ்வொரு நகர் மன்றத்திற்கும் ஒரு உறுப்பினர், ஆனால் ஒரு லட்சத்திற்கு மக்கள் தொகை மேற்பட்டால் இரு உறுப்பினரும் 2 லட்சத்திற்கு மேற்பட்டால் மூவரும் அனுப்பலாம்.

5 அ. **மாவட்டக் கல்வி அதிகாரியே செயலாளர்**

ஆ. உறுப்பினர்கள் ஒருவரைத் தலைவராய்த் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

இ. மூன்றாண்டுகள் பதவியிலிருக்கலாம்.

மாவட்ட நூலக ஆணைக் குழுவினர் சொத்து வரியில் (Property Tax or House Tax) ரூபாய்க்கு அரை அணு வீதம் மக்களிடமிருந்து நூலக வரியாகப் பெற்றுக் கொள்ளலாம். அதே அளவு பணத்தை அரசியலாரும் நூலக வளர்ச்சியின் பொருட்டு இக் குழுவினர்க்குக் கொடுப்பர்.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும், 50,000 மேற்பட்ட மக்கள் தொகை இருக்கும் ஒவ்வொரு இடத்திலும் தலைமை நூலகங்கள் (Central Library) இருக்கும். மாவட்டத் தலைநகரில் தாய் நூலகமான (Head-quarter's Library) பணியாற்றும். இந்நூலகத்தோடு எல்லா நூலகங்களும் இணைக்கப்பெறும். 5000 க்கு மேற் பட்ட மக்கள் தொகை உள்ள இடங்களில் கிளை நூலகங் களும் (Branch Library) 1000–க்கு மேற்பட்ட மக்கள் வாழும் சிற்றூர்களில் வழங்கு நூலகங்களும் (Delivery Stations) திறக்கப்படும். பதிவு செய்யப்பட்ட எல்லாப் படிப்பகங்களுக்கும், ஊராட்சிக் குழுவினர், (Panchayat Board) நகராட்சிக் குழுவினரால் (Municipality) நடத் தப்பெறும் நூலகங்களுக்கும், மாவட்ட நூலக ஆணைக் குழுவினரால் ஒரு குறிப்பிட்ட தொகை ஆண்டுதோறும் நன்கொடையாக (Library Grant) அளிக்கப்பெறும். ஊராட்சிக் குழுவினர், நகராட்சிக் குழுவினரால் நடத்தப் பெறும் நூலகங்களை, அவர்கள் விரும்பிக் கொடுத்தால், நூலக ஆணைக் குழுவினர் பொறுப்பேற்று நடத்த வேண்டும்.

இத்திட்டத்தின்படி, தாய் நூலகம், கிளை நூலகம், வழங்கு நூலகம் இவற்றை முதன் முதலில் தொடங்கிய பெருமை திருநெல்வேலி மாவட்டத்தைத்தான் சாரும். இம் மாவட்டத் தாய் நூலகம் பாளையங்கோட்டை நகரில் பணி யாற்றுகின்றது. இதனுடைய கிளைகள், நாங்குநேரி,

சுரண்டை, தூத்துக்குடி என்ற மூன்றிடங்களிலும் திறக்கப்பட்டுள்ளன. இவற்றில் தூத்துக்குடி நூலகம், அந்நகர் மன்றத்தினரால், நூலக ஆணைக் குழுவினர்க்கு, மனப்பூர்வமாய் அளிக்கப்பட்டதாகும். முந்நீர்ப் பள்ளம், சிவந்திப்பட்டி, ரெட்டியார்பட்டி, தச்சநல்லூர், திடியூர், சீவலப்பேரி, மேலப்பாட்டம், தாழையூத்து முதலிய இடங்களில் இம்மாவட்ட நூலக ஆணைக் குழுவினரால் வழங்கு நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவ்வழங்கு நூலகங்களுக்கு மாதமொருமுறை, மாவட்டத் தாய் நூலகத்திலிருந்து, சில புத்தகங்களும், செய்தி இதழ்களும், பெட்டிகளில் வைத்து, மிதி வண்டிகளின் மூலம் (Cycle) அனுப்பப்படுகின்றன. இவ்வழங்கு நூலகங்கள் பள்ளிகளில் திறக்கப்பட்டுள்ளன. பள்ளி முடிந்ததும் மாலை வேளையில் இவ்வழங்கு நூலகம் பொதுமக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கும். இதனைப் பொறுப்பேற்று நடத்துகின்ற ஆசிரியருக்கு, மாவட்ட நூலக ஆணைக் குழுவினர் மாதமொன்றிற்கு ரூ 15 நன்கொடையாக அளிக்கின்றனர். கிளை நூலகங்களுக்குரிய புத்தகங்களும், தாய் நூலகத்திலேயே வாங்கப்படுகின்றன. வகைப்படுத்தி, பட்டியல் தயாரித்த பின்னரே கிளை நூலகங்களுக்கு நூற்கள் அனுப்பப்படுகின்றன.

நெல்லை மாவட்டத்தைப் போன்று, பிற மாவட்ட நூலக ஆணைக் குழுவினரும் விறுவிறுப்பாகவும் சிறப்பாகவும்பணி ஆற்ற முற்பட்டுள்ளனர்.

**இராமநாதபுரம் :** இம்மாவட்ட நூலக ஆணைக் குழுவினர், இதுவரை சாத்தூர், வத்திராயிருப்பு, திருவாடானை, இராமேச்சுரம், கமுதி, பரமக்குடி முதலிய இடங்களில் கிளை நூலகங்களைத் திறந்துள்ளனர். இம்மாவட்டத் தாய் நூலகம் சிவகங்கையிலுள்ளது. ராசபாளையம், அருப்புக்கோட்டை நகர் மன்றத்தினர், தாங்கள் நடத்திய

நூலகத்தின் நிருவாகப் பொறுப்பினை, அண்மையில், மாவட்ட நூலக ஆணைக் குழுவினரிடம் விட்டுவிட்டனர்.

**மதுரை :** இம்மாவட்டத் தாய் நூலகம் மதுரை மாநகரிலுள்ளது. மற்றொரு கிளையும் மதுரை நகரில் திறக்கப்பட்டுள்ளது. கொடைக்கானல் நகர் மன்ற நூலக நிருவாகப் பொறுப்பினையும் இம்மாவட்ட நூலக ஆணைக் குழுவினர் ஏற்றுள்ளனர். அண்மையில்சின்னாளப் பட்டியில் சிறப்புடன் ஒரு கிளை திறக்கப்பட்டுள்ளது. இக்கிளையினை நடத்துதற்கு, சமுதாய நலத் திட்டத்தின் கீழ் ரூ. 10000 நன்கொடையாக அளிக்கப்பட்டுள்ளது. மதுரை மாநகரில் பெண்களுக்கென்று திறக்கப்பட்ட நூலகம், சரிவர நடைபெறாததால் திறந்த சிறிது காலத்திற்குப் பின் மூடப்பட்டது.

**திருச்சி :** திருச்சியிலிருக்கும் தாய் நூலகத்தின் கிளை ஒன்று புதுக்கோட்டையில் திறக்கப்பட்டுள்ளது.

**கோவை :** இம்மாவட்டத் தாய் நூலகமானது, கோவை நகர் மன்றத்தினர் $1\frac{1}{2}$ லட்ச ரூ. செலவில் கட்டிக் கொடுத்த கவினுறு கட்டிடத்தில் பணியாற்றுகின்றது. இதனது கிளையொன்று பொள்ளாச்சியில் உள்ளது. பின் வரும் இடங்களில் வழங்கு நூலகங்கள் திறக்கப் பட்டுள்ளன. ஜில்லிப்பட்டி, வெள்ளாளப்பாளையம், பரியூர், நாஞ்சக்கவுண்டன்பாளையம், கோலப்பலூர், கரத் தட்டாடிப்பாளையம், புதுவெள்ளியம்பாளையம், கோட்டுப் புள்ளம்பாளையம்.

**சேலம் :** இம்மாவட்டத்தின் தாய் நூலகம் சேலத்திலும், இதனது கிளை ஒன்று தருமபுரியிலும் இருக்கின்றன.

**செங்கல்பட்டு :** இம்மாவட்டக் குழுவினரால், உத்திர மேரூர், ஆலந்தூர், திருவள்ளூர் முதலிய இடங்களில் கிளைகள் தொடங்கப்பட்டுள்ளன.

**மலபார்:** மஞ்சேரி, ஆலத்தூர், பான்டலாயினி முதலிய இடங்களில் கிளைகள் செயலாற்றுகின்றன.

சென்னை நூலகக் குழுவினர், சில மாதங்களுக்கு முன்னர்தான், தாய் நூலகத்தை, "மவுண்ட்" சாலையில் திறந்துள்ளனர்.

சென்னை மாநில நூலகச் சட்டத்திலே சில குறைபாடுகள் உள்ளன. நூலகச் சட்டமானது, சிறிது திருத்தி அமைக்கப்பட்டு, பயிற்சிபெற்ற சில அலுவலர்களை, அரசியலார் நியமித்தால், நூலகத்துறையில் தமிழ்நாடு தலைசிறந்து விளங்கும் என்பதில் ஒரு சிறிதும் ஐயம் இல்லை.

[இப்பகுதியில் தரப்பட்டிருக்கும் புள்ளிவிவரங்கள், 1955, பிப்பிரவரி வரை, நாளிதழ்களில் வந்த செய்திகளை அடிப்படையாகக் கொண்டவைகளாகும்]

## 2. இந்திய நூலகச் சட்டம்:

கி. பி. 1954, ஏப்ரல் 25ல், இந்தியப் பாராளுமன்றத்தில், கொண்டுவரப்பட்டுள்ள, சட்டத்தின்படி, இந்தியாவில் வெளியிடப்படும் அத்தனை நூற்களையும், வெளியிடுவோர், கல்கத்தாவிலிருக்கும் நம் தேசிய நூலகத்திற்கு ஒவ்வொரு படி அனுப்புதல் வேண்டும். மேலும், இனி நம் தாயகத்தில், டில்லி, பம்பாய், சென்னை நகரங்களிலும், கல்கத்தா தேசிய நூலகத்தைப் போல், தேசிய நூலகங்கள் விளங்கப்பெறும். இந்நூலகங்களுக்கும், மேற்சொன்ன முறையில் நூற்களை அனுப்புதல் வேண்டும். சென்னையிலிருக்கும் 'கன்னிமாரா' நூலகமே, சென்னை மாநிலத் தாய் நூலகமாகும். டில்லியிலுள்ள, இந்தியச் செயலகத்தார் (Secretariate Library) நூலகமே, டில்லியில் தலைமை நூலகமாகும்.

மேற்சொன்ன மசோதாவைக் கொண்டு வந்தவர், இந்தியக் கல்வி அமைச்சரது பாராளு மன்றச் செயலாளர் டாக்டர் மன்மோகன்தாசு ஆகும். இம் மசோதாவினை ஆதரித்து, முடி சூடா மன்னர், பண்டித நேரு, பேசிய பின்னர், இம் மசோதாவானது, சட்டமாக்கப்பட்டது. நேரு பேசுகையில்: இனி நம் தாயகத்தில், கல்கத்தாவிலிருப்பதைப் போன்று, பம்பாய், சென்னை, டில்லி, என்ற மூன்றிடங்களிலும் தேசிய நூலகங்கள் இருக்குமென்றும், பதிப்பகத்தார், நான்கு படிகளை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டுமென்றும், இது பதிப்பகத்தாருக்குச் செலவில்லாத சிறந்தவொரு விளம்பரமாகுமென்றும் கூறியுள்ளார். அடுத்து மாவட்ட நூலக அமைப்பு முறை எவ்வாறு அமையப் பெறவேண்டும் என்பது பற்றி ஆராய்வோம்.

# மாவட்ட நூலக அமைப்பு முறை

## (DISTRICT LIBRARY SYSTEM)

பார் முழுவதும் அறிவுத் தெளிவும் கருத்து விளக்கமும் பரவ வழிவகுப்பன நூலகங்களாகும். பணக்காரர், ஏழை, கற்றோர், கல்லாதார், ஆண் பெண் என்ற வேறுபாடின்றி உலக மக்கள் அனைவருக்கும் நூலகங்கள் அறிவெனும் விருந்து அளிக்கின்றன. ஆராய்ச்சி வல்லுநர்களும் அறிஞர் பெருமக்களும் தாம் கண்டதையும் கேட்டதையும், கருத்தால் அறிந்ததையும் கொண்டு இறவாத உலக இலக்கியங்களை இயற்றுகின்றனர். அத்தகைய அருமை மிக்க புத்தகங்கள் என்ற புது மலர்கள் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலைதான் நூலகம். வண்டு வண்ண மலர்தனை நோக்கி ஓடுதல் போல, வையகமும் நூலகத்தை நோக்கி ஓடுகிறது.

அரசாங்கத்தாலும் மாவட்டத்தாலும் கண்காணிக்கப் பட்டு வருகின்ற மாவட்ட நூலகம் அம்மாவட்ட மக்களின் ஒவ்வொருவருக்கும் நலன் விளைக்கத் தோன்றியதாகும். பெருநகரங்களில் நூலகங்கள் பணியாற்றுதல் போலவே மாவட்ட நூலகமும் மாவட்டங்களிற் செயலாற்றுகின்றது; இந்த நூலகத்திற்குக் கிடைக்கின்ற வாய்ப்புக்களையும், வசதிகளையும், அரசாங்கத்தின் உதவிநிதித் தொகையினை யும் கொண்டுதான் தொண்டு புரிகின்றது.

மாவட்ட நூலகங்கள் திறம்படச் செயலாற்ற, போதிய தேர்ந்தெடுக்கப்பட்ட நூற்றொகுதியும், உள்ளூர்க் கிளைகள் ஒழுங்குபடப் பணிபுரிய வாய்ப்பளிக்கும் நல்ல அமைப்பு முறையும் இன்றியமையாது வேண்டப் படுவதாகும். தேர்ந்தெடுத்த புத்தகங்கள் இல்லாமல் கண்ட கண்ட நூற்களைக் கொண்டிருந்தால் நூலகம் காகி தப் பூஞ்சோலையாகும். சிறந்த அமைப்பு முறை யில்லா விட்டால் நூலகத்தில் கட்டுப்பாட்டையோ ஒழுங்கையோ காண முடியாது. மாவட்ட நூலக ஆணைக் குழுவினரின் ஆலோசனைப்படியே மாவட்ட நூலகத் திட்டங்கள் தீட் டப்படுகின்றன. உள்ளூர் ஆசிரியர்களின் உதவியைக் கொண்டு வெளியிடங்களில் நூலகத்திற்குரிய நூற்களைப் பெறுதலும், மக்களுக்குக் கொடுத்தலும் ஒரு முறையாகும். மாவட்ட நூலக ஆணைக் குழுவினருடன் கலந்த பிறகு மாவட்டத்தில் நூலகங்களைத் தோற்றுவித் தற்குரிய இடங்களை மாவட்ட மத்திய நூலக அதிகாரி (Dt. Librarian) தேர்ந்தெடுப்பார். தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களிலிருந்தும், தங்கள் ஊர்களில் நூலகங்களை ஏற் படுத்தவேண்டும் என்ற வேண்டுகோள் அறிக்கை ஒன்று அனுப்பப்படவேண்டும். அந்தந்த ஊர் மக்கள் தங்களுக் குள்ளே உள்ளூர்க் குழு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு அக் குழு ஒரு செயலாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். உள்ளூர்க் குழுவின் ஆட்சி முழுவதையும் கண்காணிக்கும்

பொறுப்பு செயலாளரையேதான் சேரும். மாவட்ட நூலகத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து நூற்கள் பின்னர் தனிப் பெட்டிகளில் நல்ல பாதுகாப்புடன் ஊர்ப்பகுதிகளுக்கு அனுப்பப்படும். பள்ளிக்கூடங்களிலிருந்தோ வேறு வசதியான இடங்களிலிருந்தோ நூற்கள் மக்கட்குத் தர வசதி செய்யப்படும். நூலகக் குழுவினர் ஊர் மக்களுக்குப் புரியும் அரும்பணியினை உணர்ந்து மக்கள் தங்கள் ஆதரவையும் ஆசிரியர்கள் தமது அரிய ஒத்துழைப்பினையும் தொண்டுள்ளம் கொண்டவர்கள் தங்கள் முயற்சியையும் அளித்தால் இம்முறையினால் நாம் பெரியதோர் வெற்றியை காண்போம் என்பது உறுதியாம். கிளைகளை நிறுவுவதில் வேறொரு முறையும் இருக்கிறது. ஆட்சித் துறையினை மேற்கொள்ள ஊர்ப் பகுதியில் ஒரு செயற் குழுவை ஏற்படுத்திய பிறகு நூலகங்களை ஏற்படுத்துதல் நலமாகும். தொடர்ச்சியான குறையாத ஊக்கமும், தனிப்பட்டவர்களின் தளராத உழைப்பும் இந்த முறையை அமுலுக்குக் கொண்டுவர இன்றியமையாது வேண்டப்படுவதாகும். இந்த முறையில் ஊர்ச் செயற்குழு ஓர் உறுதி வாய்ந்த அமைப்பாக மாறுகிறது. உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை விளக்கமாகவும் தெளிவாகவும் தெரிவிக்க நல்ல வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

### மாவட்ட நூலகத் தலைமை அலுவலகம்

நூலகத் துறையிற் பயிற்சியும் நல்ல அனுபவமும் மிக்கவர் நூலகத் துறைத் தலைவராக இருக்கவேண்டும். அவர் நூலகத் துறைப் பயிற்சிப் பட்டம் பெற்றவராக இருந்தால் இன்னும் நலமாகும். குறைந்தது நூலகத் துறையில் ஓராண்டு அனுபவமாவது அவர்க்கு இருத்தல் வேண்டும். பயிற்சி இல்லையென்றால் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்தல், புத்தகங்களைப் பிரிவு செய்து நிரல் படுத்தல், அலுவலகக் குறிப்பேடுகளைப் பாதுகாத்தல் முதலிய

பல பணிகளை நூலகத் தலைவரால் செய்ய முடியாதுபோம். மாவட்ட நூலக ஆட்சிக் குழுவிற்கும், அரசாங்கத்திற்கும் நூலகத் துறைத் தலைவர் பொறுப்பாளியாவார். நூலகத்தைக் குறித்த செயல்கள் அனைத்திற்கும் அரசாங்கத்திற்கு விளக்கம் தரும் பொறுப்பும் அவரைத்தான் சாரும். மாவட்டத்தைச் சேர்ந்த சிற்றூர்களிலும் பேரூர்களிலும் கிளை நூலகங்களை நிறுவுவதற்கும் அந்நூலகங்களின் நடைமுறைகளை நன்கு கண்காணிப்பதற்கும் நூலகத் துறைத் தலைவர் தலைவாய்ந்தவராவர். இந்த விபரங்களில் ஆலோசனைகளைத் தருவதற்கு மட்டுமே நூலகத் துறைக் குழு முன்வரும். நூலகத் துறைத் தலைவருக்கு உதவியாக ஒரு கணக்கியற்றுறை எழுத்தாளரும் கையச்சுவினைஞரும் (Typist) ஒரு எழுத்தாளரும், இரு பணியாளரும் (attendars), இரு வேலை யாட்களும் பணியாற்றுவர். நூலகங்கள் அமைந்திருக்கவேண்டிய இடத்தைப் பற்றிய சிறு குறிப்பை இனிக் காணலாம்.

படிப்பகமாகவும், நூற்றொகுதிகளை அடுக்கி வைப்பதற்கு வசதியாகவும் பயன்படுகின்ற ஒரு பெரிய அறை நூலகத்தில் அமைந்திருத்தல் வேண்டும். மூவாயிரம் சதுர அடி பரப்பளவுள்ளதாக அந்த அறை இருப்பது நல்லது. பதினாயிரம் நூற்களை வைப்பதற்கும் முப்பது பேர் அமர்ந்து அமைதியாகப் படிப்பதற்கும் ஏற்ற முறையில் அந்த அறை அமையப் பெறும். அலுவலக வேலைக்கான அறை ஒன்று, பெட்டிகள் முதலியன போட்டு வைக்க ஒரு அறை, நூலகத் துறைத் தலைவருக்கு ஒரு அறை, என மூன்று சிறு அறைகள் இருக்கவேண்டும். புத்தகம் வைக்கும் அலமாரிகள் ஏழடி உயரமும், ஆறரை அடி அகலமும், நூற்களை அடுக்கி வைக்கும் இடையீடுகளின் உயரம் ஒன்றறை அடியும் கொண்டதாயிருந்தால் ஓரலமாரியில் ஆயிரம் புத்தகங்கள் அடுக்கி வைக்கலாம். புத்தக அலமாரிகளுக்கு இடையில் நாலரை அடி அளவு இடை வெளி

இருக்க வேண்டும். ஓர் உறுப்பினர் வந்து அமர்ந்து படிக்க முப்பது சதுர அடி பரப்புள்ள இடம் அமைக்கவேண்டும். நூற்களை வைத்திருக்கும் எண்ணிக்கைக்கு ஏற்பப் புத்தக அலமாரிகள் வேண்டப்படும். உள்ளூர்ப்புற நூல் நிலையங்களில் அடிக்கடி தலைமை அலுவலகத்தால் புத்தகங்கள் மாற்றப்படுமாதலால் தலைமை அலுவலகத்தில் ஒழுங்காகப் புத்தகங்களை அலமாரிகளில் அடுக்கி வைத்தல் வேண்டும். அலமாரிகள் பெரியதாகவும் அதிகமாகவும் இருப்பதைக் காட்டிலும் உரமானதாகவும் தூய்மையானதாகவும் இருப்பதை நினைவிற்கொள்ள வேண்டும். சிற்றூர்களிலும் பேரூர்களிலும் விளங்கும் நூலகக் கிளைகளுக்கு ஓர் உற்பத்தித் தொழிற்சாலையாக மாவட்டத் தலைமை நூலக அலுவலகம் விளங்குகிறது. நூலகத்திற்குரிய பல முக்கிய குறிப்பேடுகளையும்கூட அஞ்சலட்டை அளவில் ஒழுங்காகத் தயாரித்து வைக்கலாம். ஏற்ற அளவில் அட்டைகளைத் தயாரித்து வைத்துக் கொண்டு திறம்படச் செயலாற்றலாம். தலைமை நூலகத்திலிருந்து புத்தகங்களைக் கிளை நூலகங்களுக்கு அனுப்புவதற்குரிய போக்குவரத்து வசதிகளை, வசதிக்கும் தேவைக்குமேற்ப எப்படி வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்.

**செயல் முறை :—**

புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து நூலகங்களில் வைப்பது, குறிப்பிடத்தக்க ஒரு செய்தியாகும். நல்ல புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து வைப்பது நாட்டுக்கு மட்டுமன்றி மக்களுக்கும் நலம் விளைவிப்பதாகும். எல்லாப் பொருள்களைப் பற்றிய நூற்களையும் ஓரளவு வாங்கி வைக்க முயல வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட நூற்களை எடுத்துச் செல்வதில் மக்கள் ஒரு ஒழுங்கினைக் கடைப்பிடிக்க வேண்டும், படிக்கவேண்டும் என்ற உணர்வும் பெறவேண்டும். விலையினை மட்டும் பொருளாக வைத்துப் புத்தகங்களை

வாங்குவது கூடாது. நல்ல புத்தகங்களை உரிய விலை கொடுத்து வாங்கவேண்டும். விலைகளைக் கணக்காகக் கொண்டு புத்தகங்களை வாங்குவது பொருளாதாரத்தின் பகுதியாதலால் இதற்கு உரிய அக்கறையைச் செலுத்தல் வேண்டும். மக்கள் மனங்கவரும் நூற்களைப் பற்றிய கருத்துக்களை அறிந்து அதற்கேற்றபடி நூற்களை வாங்கவும், எல்லாத் தலைப்புக்களைப் (Subjects) பற்றிய நூற்களைப் பெறவும் முற்படவேண்டும். இதனால் மக்கள் மனம் கவரும் நூற்களை மட்டுமே வாங்க வேண்டுமென்பதில்லை. எண்ணிக்கை குறைவென்றாலும் எல்லாப் பொருள்களைப் பற்றிய புத்தகங்கள் நூலகத்தில் உள்ளன என்ற மன நிறைவு மக்களுக்கு ஏற்படவேண்டும். நூலகத்தில் உயிருள்ள நூற்கள் உள்ளன என்று ஊரார் உரைக்க வேண்டும். புத்தகங்களை வாங்கிப் பதிவு செய்யவும், பிரிவு படுத்தி வைக்கவும், நூலகங்களில் உரிய அக்கறை செலுத்தப்பட வேண்டும். இந்த முறையில் கவனம் செலுத்தப்பட்டால்தான் நூலகத்தை மக்கள் நன்கு பயன் படுத்திக்கொள்ள முடியும். நூலக ஆட்சித் துறையில் பின்வரும் ஐந்து பகுதிகளும் குறிப்பிடத் தகுந்தவை களாகும்:

(1) நூற்களைத் தருவதும் திருப்பிப் பெறுவதும் பற்றிய குறிப்புக்கள் எழுதி வைத்தல், (Issues and returns).

(2) நூற்கள் வாங்கிச் செல்பவர் பெயர்ப் பட்டியலில் (issue register) உரியனவற்றைப் பதிவு செய்தல்.

(3) குறித்த நாளில் புத்தகம் திருப்பித்தரப்படா விட்டாலோ, அன்றி நூற்களைத் தொலைத்தாலோ, அதற்குரிய அபராதம் விதித்தல்.

(4) நூலகத்தின் செலவுக் கணக்கு விவரம் தயாரித்தல்.

(5) பிற செலவினங்கள் பற்றிக் குறிப்புக்கள் எழுதுதல்.

நூற்களைப் பிறருக்கு வழங்குவதில், சீட்டு முறையே பெரிய நூலகங்களில் கையாளப்படுகின்றது. நூலக உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் குறைந்தது இரண்டு 'சீட்டுகள்' (Borrower's tickets) கொடுக்கப் பெறும். இரண்டு சீட்டுகள் கொடுக்கப்பட்டால் இரண்டு புத்தகங்களை, ஒருவர் எடுத்துக்கொள்ளலாம். நூலகத்திற் சென்று இரண்டு நூற்களை ஒருவன் எடுத்துச் செல்ல விரும்பினுல், இவ்விரண்டு சீட்டுக்களையும், நூற்களை வழங்குபவரிடம் தருதல் வேண்டும். நூற்களை வழங்குபவர் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டு, பின் புத்தகத்தின் அட்டையின் உட்புறத்திலிருக்கும் அட்டைப் "பையில்" சொருகி வைக்கப்பட்டிருக்கும் புத்தகச் சீட்டை (Book Card) எடுத்து டிக்கெட்டுடன் இணைத்து வைத்து, திருப்பித் தரவேண்டிய தேதியையும் குறித்து வைத்து, ஒழுங்கான முறையில் அடுக்கி வைத்து விடுவார். புத்தகச் சீட்டானது, புத்தகத்தின் பெயர், அதன் ஆசிரியர், வகைப்படுத்திய எண், (classification number) வரிசை எண் (Accession number) இவைகளைக் குறிக்கும். உறுப்பினர் டிக்கெட்டில் உறுப்பினர்களைப் பற்றிய முழு விவரமும் குறிக்கப்பட்டிருக்கும். இவ்விரண்டின் உதவியால், எடுத்துச் செல்லப்பட்ட புத்தகத்தினையும், எடுத்துச் சென்றவர் பெயரையும் எவரும் எளிதில் அறிந்து கொள்ளலாம். புத்தகத்தைத் திருப்பித் தரும்பொழுது, டிக்கெட்டோடு இணைத்து வைக்கப்பட்டிருக்கும் புத்தகச் சீட்டினை எடுத்துப் பழையபடியும் புத்தகத்தில் வைத்து, பின் 'டிக்கெட்டு' அதற்குரியவரிடம் திருப்பித்தரப்படும்.

மற்ெருரு முறை, சிறு புத்தகத்தில் குறித்து வைத்துக் கொண்டு நூற்களை வழங்குதலாகும். இப்பட்டியலில் (Issue register) உறுப்பினர் பெயர், வயது, தகுதி, முகவரி முதலியன குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். புத்தகத்தைத் திருப்பித் தராதவர்களிடமிருந்தும், தரக் காலம் தாழ்த்து பவர்களிடமிருந்தும், அபராதத் தொகை பெறுவதை ஒரு சிலர் விரும்பாமலிருக்கலாம். எனினும் நூலக ஒழுங்கு முறைக்கு அது ஏற்றதாகும். புத்தகத்தினை எடுத்துச் செல்வோர், புத்தகத் தினைத் தொலைத்தால் அதற்குரிய விலையினைத் தந்துவிடவேண்டும். அன்றாடம் ஏற்படும் தபால் செலவு, போக்குவரத்துச் செலவு போன்றவைகளுக்கு ரசீதுகள் வைத்துக் கொள்ளவேண்டும். இவைகளெல்லாம் பின்னர் தணிக்கையாளரால் தணிக்கை செய்யப்படும்.

இரயில் மூலம் போக்குவரத்து நடைபெற்றால் செலவு சுருக்கமாக ஏற்படும். சொந்தமாகக் கார் இருந்தால், சிற்றூர்களுக்கெல்லாம் சிறந்த முறையில் புத்தகங்களை அனுப்பலாம். இதனால் அளவிறந்த வசதிகளும், நலன்களும் மாவட்ட நூலக ஆணைக் குழுவினருக்கு ஏற்படும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

நூலகங்கள் தாங்கள் வைத்திருக்கும் நூற்களைப் பிற நூலகங்களுக்கு அனுப்பிப் புத்தகப் பரிமாற்றம் செய்தல் (Exchange of Books & Periodicals) நூலகத் துறையில் சிறப்பான இடத்தைப் பெறும். நூலகங்கள் இங்ஙனம் புத்தகப் பரிமாற்றம் செய்வதற்கு முன்னால் தங்கள் நூற்களைச் சிறுசிறு தொகுப்பாகப் பிரித்து வைத்துக் கொள்ளும். ஒவ்வொரு தொகுப்பும் ஒவ்வொரு பெட்டியினுள் அடங்கிவிடும். இங்ஙனம் பெட்டிகளில் அடங்கும் நூற்றொகுதிக்கு ஆங்கிலத்தில், "Box Libraries" என்று கூறப்படும். கையடக்கமான பதிப்பு என்று குறிப்பிடுவது

போல இந்த நூல் தொகுதியினையும் பெட்டியினுள் அடங்கும் அடக்கமான நூலகம் என்று கூறலாம். இத்தகைய நூலகங்களுக்குத் தனித்தனியாகப் புத்தகப் பட்டியலும், பதிவு எண்ணும் தரப்படுகின்றன. 'அ' எண்ணுள்ள பெட்டி கிளை நூலகத்திற்கு அனுப்பப்பட்டால் அப்பெட்டி திரும்பிவந்த பிறகுதான் 'ஆ' எண்ணிட்ட நூலகம் மீண்டும் அனுப்பப்படும். இங்ஙனம் சுற்றி வரும் நூலகங்களால் நாட்டில் பெரும் பயன் விளையும். சொந்தமாக ஊர்தி வைத்துக்கொண்டு, இவைகளை அனுப்ப முற்படுவதைக் காட்டிலும், புகை வண்டிப் போக்கு வரத்து பெருநலம் பயப்பதாகும். சிற்றூர்களிலும் பேரூர்களிலும் கிளை நூலகங்கள் பரவிக் கிடப்பதால், முற் குறிப்பிட்ட முறை எளிதில் பெட்டி நூலகங்களை அனுப்ப வாய்ப்பளிக்கின்றது. அனுப்பப்படும் பெட்டியின் மீது அச்சிட்ட தாளை ஒட்டி, முகவரியினைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அனுப்பப்பட்ட நூற்கள் பயன்படுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்படுவதற்கு முன்னால் மீண்டும் நூற்களை அனுப்புதல் நன்றன்று. புத்தக எண்ணிக்கைக்கும், மக்கள் மனவளத்திற்கும் ஏற்பப் பெட்டி நூலகத்தினைப் பயன்படுத்துவதற்குரிய காலத்தைத் தலைமை நூலகம் ஆராய்ந்து குறிப்பிடுகின்றது. எடுத்துக்காட்டாக நூறு புத்தகங்கள் அடங்கிய பெட்டி அனுப்பப்படுகிறதென்றால் மாதத்திற்கு ஒரு முறை மாற்றிக் கொள்ளலாம். நாம் முன்னரே குறிப்பிட்டதுபோலத் தலைமை நூலகம்,கிளை நூலகங்களைப்பயன்படுத்தும் மக்கள் கருத்திற்கேற்ப, காலத்தைக் கூட்டவோ குறைக்கவோ செய்யலாம். புத்தகங்கள் திருப்பி அனுப்பப்பட்ட பிறகு அவைகளைத் தலைமை நூலக அலுவலகம் சரி பார்த்துப் பதிவு செய்கின்றது. புள்ளி விவரக்கணக்கிற்காக இவ்வாறு செய்யப்படுகின்றது புத்தகங்கள் காணாமற் போனாலும், பாழ்பட்டாலும், அதற்குரிய விளக்கங்கள் கராது போனாலும் அவைகளைப் பற்றியும், அந்த

நூலகத்துறை அதிகாரியைப் பற்றியும் உரிய அதிகாரி களுக்குத் தெரிவித்து விடவேண்டும்.

உள்ளூர் நூலகக் குழுவினரும், உள்ளூர் நூலக அதி காரிகளும், மாவட்ட நூலகத்துறை அதிகாரியும் (Dt. Librarian) தொடர்பு கொள்வது இன்றியமையாததாகும். அந்தத் தொடர்பால் தான் நூலகத்துறையில் நல்ல முடிவு களை நாம் காணமுடியும். மாவட்ட நூலகத்துறை அதிகாரி அந்தத் தொடர்பை விரிவு படுத்திக்கொள்ள, சிற்றூர் பேரூர்களில் விளங்கும் கிளை நூலகங்களுக்குச் சென்றும், உள்ளூர் நூலகக் குழுவின் கூட்டங்களில் கலந்து கொண் டும் வளர்த்துக்கொள்ள வேண்டும். மக்களிடையிலே நூல கத்துறை அதிகாரி நெருங்கிப் பழகுவதின்மூலம், மக்கட் குத் தேவையான நூல்களைப் பற்றியும், நூலகம் பயன்பட வேண்டிய முறைகளைப் பற்றியும், கேட்டறிந்து நூலகத் துறை வளர்ச்சிக்கு ஆவன செய்தல் முடியும். ஒவ்வொரு இடத்தைச் சேர்ந்த மக்களுக்கும் ஒவ்வொரு விதமான மன உணர்வு இருத்தல் உலக இயல்பு அதை அறிந்துகொண்டு மக்கள் மன உணர்விற்கேற்ப நூலகத்தை விரிவு படுத்த வேண்டும். சிற்றூர்களில் நூலகங்களை ஏற்படுத்துவதோ டமையாது எழுதப் படிக்க மக்கள் அறிந்துகொள்ள வேண் டிய அவசியத்தையும் பிரச்சாரம் செய்யவேண்டும். பேரூர் களில் வேண்டுமானால் இந்தப் பிரச்சாரம் தேவையற்றதா யிருக்கலாம். கல்வித் துறையில் இருண்டு கிடக்கும் இந்தி யாவில் நூற்றுக்குப் பத்து அல்லது பன்னிரண்டு பேர்தான் படித்தவர்கள். இங்கிலையில் அறிவுத்துறை வளர்ச்சிக்குச் சிற்றூர்களில் பிரச்சாரம் பரந்த அளவில் வேண்டப்படுகின் றது. அந்தப் பணியினால் கல்லாமை என்னும் பிணி போக் கப்படும்; அறியாமை என்னும் மூடுபனி விலக்கப்படும் பொழுது போக்கிற்காக மட்டுமன்றி அறிவு வளர்ச்சிக்கு அரிய வழி காட்டியாகவும் நூலகம் விளங்குகிறது என்று மக்கள் எண்ணி அறிவாலயத்தின்மூலம் அன்பு கொண்டு

ஒழுகப் பண்ணுவது மாவட்ட நூலக அதிகாரியின் செயலாகும்.

ஊர்க்கிளை நூலகங்களின் குழுக்கள் தங்கள் கருத்துக்களையும், முடிவுகளையும் அவ்வப்போது தலைமை நூலக அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். குறிப்பிட்ட காலங்களில் கிளை நூலகங்கள் தங்கள் கருத்துக்களை அறிக்கைகளாகத் தருதலும் சில இடங்களில் உண்டு. சில நேரங்களில் தலைமை நூலக அலுவலர்களேகூட கிளை நூலகங்களை அறிக்கை அனுப்புமாறு கேட்பதும் உண்டு. அந்த அறிக்கை, நூலகம் பயன்படும் முறைகளையும், ஆலோசனைகளையும், மக்கள் விரும்பும் நூல்களையும், அவர்கள் விரும்பும் கருத்துக்களையும், கல்வி வளர்ச்சிக்காக நூலகம் உதவி புரியக்கூடிய நிகழ்ச்சி இருந்தாலதனையும் குறிப்பிடல் வேண்டும். சுருங்கச் சொன்னால், ஒவ்வொரு குழுவும் தாங்கள் புரிகின்ற பணி தங்கள் பகுதிக்கு மட்டும்தானென்று எண்ணாமல் பொதுவான நூலக வளர்ச்சித் துறைக்கே தங்கள் பணி அழகிய அணியாகும் என்று எண்ணி ஓயாது உழைக்க வேண்டும்.

# 3. உலகில் பெரிய நூலகங்கள்

## 1. முதல் தேசிய நூலகம்! (ஐரோப்பாவில்)

பிரெஞ்சு நாட்டின் அரசாங்க நூலகமாக இருந்த "லாபிப்ளியோதெக்நேசனேல்" என்ற நூலகம் கி. பி. 1480ல், 11-ஆம் லூயி மன்னன் காலத்தில் தேசிய நூலகமாக அமைக்கப்பட்டது. இந்நூலகத்தின் பிற்கால வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த பெரியார்கள் அப்பெக்னன், மன்னன் நெப்போலியன் ஆவார்கள். 1741 வரை இந்நூலகத்தின் தலைவராயிருந்த அப்பெக்னன், எல்லா மக்களும் இந்நூலகத்தினைப் பயன்படுத்துதற்குரிய வாய்ப்பினை அரசாங்கம் வழங்கியதற்குக் காரணமாயிருந்தார். 1735ல் கொண்டுவரப்பட்ட சட்டத்தின் மூலம் பிரபுக்களுக்கும் அவர்களுடைய உறவினர்களுக்கும் பயன்பட்டு வந்த நூலகம் பொதுமக்கள் நூலகமாக மாறியது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

மன்னன் நெப்போலியன் இந்நூலக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினான். அரசாங்கம் இந்நூலகத்திற்கு வழங்கிய நன்கொடையினை அதிகப்படுத்தினான். புத்தகம் இரவல் வாங்குவோர் முன்பணம் கட்டவேண்டும் என்ற விதியினைக் கடுமையாகக் கடைப்பிடிக்கும்படிச் செய்தனன். மேலும் உயர்ந்த நூற்கள் அனைத்தும் தன்னுட்டுத் தேசிய நூலகத்தில் இருக்கவேண்டும் என்று விரும்பி அதற்கு ஆவன செய்தனன்.

1818ம் ஆண்டு இந்நூலகத்தில் எட்டு லட்சம் நூற்கள் இருந்தன. பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின் 'இந்நூலகம் மன்னனுக்குச் சொந்தம்' என்பது மாறி மக்கள் நூலகமாக

மாறியது. கி. பி. 1854ல் இப்பொழுதிருக்கும் நூலகக் கட்டிடம் கட்டத் திட்டம் தீட்டப் பெற்றது. 'நூலக நண்பர்கள்' என்ற பிரெஞ்சு நாட்டுக் கழகமும், இதன் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டது முதல் உலகப் போருக்குப்பின் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட காலத்து இச்கழகத்தார் தங்கள் இரத்தத்தினை மருத்துவக் கூடங்களுக்குக் கொடுத்து அதனாற் கிடைத்த பொருளினை இந்நூலக வளர்ச்சிக்குப் பயன் படுத்தினார்கள் என்ற வரலாறு எந்த நாட்டிலும் இதுவரை நடைபெறாத ஒரு சிறந்த நிகழ்ச்சியாகும். இது ஒன்றே பிரெஞ்சு நாட்டு மக்களின் பேருள்ளத்திற்கும் நூலக வளர்ச்சிக்காக வேண்டி அவர்களுக்கிருக்கும் ஆர்வத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும். பிரெஞ்சு நாட்டிற்றான், முதன் முதலில் பதிப்பகங்கள் தாங்கள் வெளியிடும் புத்தகங்களைப் பதிவு செய்யும் முறை கி. பி. 1627–ல் ஏற்பட்டது. இன்று பிரான்சு நாட்டின் தேசீய நூலகத்தில் அறுபது லட்சத்திற்கு மேற்பட்ட புத்தகங்களும், ஒன்றரை லட்சத்திற்கு மேற்பட்ட கையெழுத்துச் சுவடிகளும், நாலரை லட்சத்திற்கு மேற்பட்ட பதக்கங்களும் நாணயங்களும், ஐம்பது லட்சத்திற்கு மேற்பட்ட சித்திரங்களும் சிற்பங்களும், ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட செய்தி இதழ்களின் தொகுதிகளும், நான்கு லட்சம் நாட்டுப் படங்களும் உள்ளன. மேலும் இந்நூலகத் தலைவரின் மேற்பார்வையிற்றான் பிரெஞ்சு நாட்டு எல்லாப் பொதுமக்கள் நூலகங்களும் உள்ளன கல்வி அமைச்சரின் ஆணைக்கு உட்பட்டு நடக்கும் நூலகங்களுக்கு எல்லாம்கூட இவர்தான் தலைவர் ஆவார். (Director of Public Libraries). மேலும் பொதுமக்கள் நூலகங்கள் ஒன்றிற்கொன்று நூற்களைக் கடன் வாங்கிக்கொள்ளும் முறையும் இந்நாட்டில் நடைமுறையில் உள்ளது. ஆராய்ச்சியாளர்க்குரிய வசதிகள் அனைத்தும் தேசீய நூல

கத்தில் செய்து தரப்பட்டுள்ளன. பிறநாட்டு நூலகங்களி லிருந்து அவர்களுக்கு வேண்டிய நூற்கள் வரவழைத்துக் கொடுக்கப்படுகின்றன.

## 2. இலெனின் நூலகம்.

இலெனின் கிராடிலுள்ள (Leningrad) "கொசுதார்சு வென்னச பப்ளிக்னச பிப்ளியோதெகர்" என்ற நூலகம்தான் உருசிய நாட்டின் பழமையான நூலகமாகும். இந்நூலகம் கி. பி. 18-ம் நூற்றாண்டில் "இம்பீரியல் பொது நூலக"மாக மாறியது. காதெரின் அரசியாரால் செயின்ட் பீட்டர்சுபர்க்கில் இப்புது நூலகம் திறக்கப்பட்டது.

கி. பி. 1794-ல், உருசியர்கள் போலந்து நாட்டை வெற்றி கண்டபொழுது, "கவுண்ட் சுலுஸ்கி" என்ற போலந்து நாட்டுப் பெரியார் தம் நாட்டிற்குக் கொடுத்திருந்த நாலு லட்சம் நூற்களையும் ஏட்டுச் சுவடிகளையும் உருசியர்கள் செயின்ட் பீட்டர்சுபர்க்கிற்குக் கொண்டு சேர்க்க முடிந்தது. பல நூற்கள் வழியில் தொலைந்து போயின. கொண்டுவந்த நூற்கள்தான் உருசியர்கள் ஒரு பொது நூலகத்தினைப் பீட்டர்சு பர்க்கில் திறப்பதற்குப் பெரிதும் காரணமாக இருந்தன. மேலும் "டுப்ரோவிசுக்கி" என்ற பெரியார் சேகரித்து வைத்திருந்த புத்தகங்களும் இந்நூலகத்திற்காக விலை கொடுத்து வாங்கப்பட்டன. டுப்ரோவிசுக்கி என்பவர் பிரெஞ்சுப் புரட்சியின்போது பிரான்சில் இருந்த உருசியத் தூதுவர்களில் ஒருவர் ஆவார். பிரெஞ்சுப் புரட்சியின்போது "செர்மயின்" மடமும், 'பேசிடில்' சிறைச்சாலைக் கோட்டையும் நெருப்பிற்கு இரையாயின. அதுகாலைடுப்ரோ விசுக்கி அங்கிருந்தபல அருமையான நூற்களையும் ஏடுகளையும்கைப் பற்றித் தம் தாய்நாட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்தார்.

பின் தம் அரசாங்கத்திற்கு அவைகளை எல்லாம் விற்று விட்டார். இவ்வாறு இம்பீரியல் நூலகம் வளரலாயிற்று.

கி. பி. 19-வது நூற்றாண்டில் உருசியப் போரில் நெப்போலியன் வெற்றிகண்டபொழுது இந்நூலகத்திலிருந்து ஒன்றரை லட்சம் நூற்கள் பாரிசு நகரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. எனினும், சில ஆண்டுகளில் மீண்டும் இந்நூலகம் தலைசிறந்து விளங்குவதாயிற்று. கி. பி. 1849-ல் மாடசுட் கார்ப் என்பவர் நூலகத் தலைவராய்ப் பதவியேற்று இந்நூலக வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடு பட்டார். நூலகத்தினைப் பல பகுதிகளாகப் பிரித்தார். நூற்பட்டியலொன்று தயாரிக்கப்பட்டது. அரசாங்க நன்கொடையினை அதிகப்படுத்த ஆவன செய்தார். இலண்டன் நூலகத்தினைப் போன்று வட்ட வடிவமான படிப்பகத்தினைக் கட்டச் செய்தார். செய்தி இதழ்களின் வாயிலாக இந்நூலகத்தின் அருமை பெருமைகளை மக்கள் உணரும்படிச் செய்தார். உலகினையே நடுங்கச்செய்த உருசியப் புரட்சியின் காரணமாக இந்நூலக வளர்ச்சியிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அரச குடும்பத்தினரிடமிருந்தும், சமயக் கழகங்கள், மடங்களிலிருந்தும் பறிமுதல் செய்யப்பட்ட நூற்களும் இந்நூலகத்துடன் சேர்க்கப் பட்டன.

போலந்து நாட்டிற்கு விடுதலை கிடைத்தவுடன், அந்நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டபுத்தகங்கள் அனைத்தும் அந்நாட்டிற்கே கொடுக்கப்பட்டன. உருசியப் புரட்சிக்குப் பின், மாஸ்கோ நகர் சிறப்புப் பெற்றதால் பீட்டர்சுபர்க்கில் இருந்த தேசீய நூலகம் மாஸ்கோவிற்கு மாற்றப்பட்டது. இன்று இந்நூலகம் 'இலெனின் நூலகம்' என்று வழங்கப்படுகிறது. கி. பி. 1862-ல் 28,612 நூற்களே இந்நூலகத்திலிருந்தன. 1917-ல் பத்து லட்சம் புத்தகங்களாயின; 1930-ல் நாற்பத்தெட்டு லட்சங்களாயின. இன்று இந்நூல

கத்தில் ஒரு கோடியே நாற்பது லட்சம் புத்தகங்களும், இருபத்தைந்து லட்சம் கையெழுத்துச்சுவடிகளும், பத்து லட்சம் துண்டுப் பிரசுரங்களும் உள்ளன. பல மொழிகளிலும் எழுதப்பட்ட புத்தகங்கள் பல்லாயிரக் கணக்கில் இந்நூலகத்தில் இடம்பெற்றுள்ளன. ஏறத்தாழ நூற்றைம்பது மொழிகளில் புத்தகங்கள் இருக்கின்றன.

உலகில் பெரிய நூலகம் எதுஎன்பதில் அமெரிக்க நாட்டுக் காங்கிரசு நூலகத்துக்குப் போட்டியாக விளங்கும் இந்நூலகத்திற்கு நாடோறும் 1500-க்கு மேற்பட்ட மக்கள் வந்துசெல்லுகின்றனர். எண்ணிறந்த மக்கள் இங்கு பணியாற்றுகின்றனர். கி. பி. 1949–ஆம் ஆண்டு தரப்பட்டிருக்கும் கணக்கின்படி அவ்வாண்டு இந்நூலகத்தினின்று பதினைந்து லட்சம் புத்தகங்களை மக்கள் எடுத்துச் சென்று பயன்படுத்தியுள்ளனர்.

இந்நூலகக் கட்டிடம் ஒன்றரை பர்லாங்கு நீளமுள்ளது; பல மாடிகளைக் கொண்டது. இத்தகைய பெரிய நூலகத்தில் தமிழ் நூற்களும் இடம் பெற்றிருக்கின்றன என்று அறியும்போழ்து தமிழர்களாகிய நாம் பெருமிதம் கொள்ளவேண்டியவர்களாகின்றோம்!

## 3. காங்கிரசு நூலகம் (Library of Congress)

இந்நூலகம் கி. பி. 1800-ல் அமெரிக்கக் காங்கிரசு சட்டத்தின்படி, காங்கிரசு உறுப்பினர்களுக்காகவும்மக்கள் அவை உறுப்பினர்களுக்காகவும், மக்கள் அரசியலவைக் கட்டிடத்தில் திறக்கப்பட்டது. முதலாண்டிலேயே 5000 பவுன்கள் செலவழித்து, மக்கள் அவை உறுப்பினர், காங்கிரசு உறுப்பினர் இவர்களுக்குப் பயன்படக்கூடிய நூல்கள் வாங்கப்பட்டன. இரண்டாண்டுகளுக்குப் பின் சட்டசபையின் ஒப்புதலின் பேரில், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் நூலகத் தலைவர் ஒருவரை நியமித்தார். மூவாயிரத்

திற்கு மேற்பட்ட நூல்களைக்கொண்டிலங்கிய இந்நூலகம் கி. பி. 1814-ல் வளம் நிறைந்த வாசிங்டன் நகர் எதிரிகளால்எரியூட்டப்பட்டபொழுது அழிந்தது. எனினும் பலரதுமுயற்சியின் பயனால் அடுத்த முப்பதாண்டுகளில் அழிந்தொழிந்த காங்கிரசு நூலகம், மறுபடியும் தலையெடுத்து விளங்கியது. கி. 1851-ல் மறுபடியும் இந்நூலகம் இயற்கையின் சீற்றத்திற்கு இரையாகியது. இயற்கையாகவே ஏற்பட்ட நெருப்பின் காரணமாய் 35,000 புத்தகங்கள் அழிந்தன; 20,000 புத்தகங்கள் எஞ்சியவை.

கி. பி. 1887ல், மூன்றே முக்கால் ஏக்கர் நிலப்பரப்பில் 6,347,000 டாலர் செலவில் இந் நூலகத்திற்கென்று தனிக் கட்டிடமொன்று கட்டப்பட்டது. இதுவே உலகிலேயே மிகப் பெரிய நூலகக் கட்டிடமாகும் கி. பி. 1800ல் மக்கள் அவைக் கட்டிடத்தில், செபர்சன் என்ற அமெரிக்கக் குடியரசுத் தலைவரால் ஆரம்பிக்கப்பட்ட இந்நூலகம், பல இன்னல்களை எல்லாம் அடைந்து, இறுதியில் 40 லட்சம் புத்தகங்களோடு கி. பி. 1897ல் புவியினரால் புகழ்ந்து பேசப்படும் புதுக் கட்டிடத்திற்கு மாறியது. காங்கிரசு உறுப்பினர்களுக்கும், சட்டசபை உறுப்பினர்களுக்காகவுமே விளங்கிய இந்நூலகம் கி. பி. 1939ல் பொதுமக்களுக்குரிய நூலகமாக மாறியது, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய செய்தியாகும். மேலும் மக்கள் அவையினரால் கொண்டுவரப்பட்ட அமெரிக்கச்சட்டத்தினால் இந்நூலகம், அமெரிக்கப் பதிப்பகங்கள் அனைத்தும் தாங்கள் வெளியிடும் நூல்களனைத்தையும் பதிவு செய்யும் (Copy Right Office) அலுவலகமாகவும் மாறியது. நூலகத் துறைத் தலைவருக்கு உட்பட்ட பதிப்பக உரிமையினைப் பதிவு செய்யும் தலைமை அலுவலரை (Registrar) நியமிக்கவும் சட்டசபை அனுமதியளித்தது. இத் திட்டம் இந்நூலக வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகின்றது. பதிப்ப

கத்தரால் அனுப்பப்படும் புத்தகங்கள் அனைத்தும் இந் நூலகத்தில் இடம் பெறுகின்றன.

கி பி. 1940-41ல் அமெரிக்கக் காங்கிரசு 3½ மில்லியன் டாலர்களை இந்நூலக வளர்ச்சியின் பொருட்டு வழங்கி யமை, இந்நூலக வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்தது. 1941 ஆம் ஆண்டு தரப்பட்டிருக்கும் கணக்கின்படி, துண்டுப் பிரசுரங்கள் - புத்தகங்களின் தொகுதிகள் 65 லட்சமும் சிறப்புக் காட்சிகள் நாட்டுப் படங்களின் தொகுதிகள் 12½ லட்சமும் ஆகும். மேலும் 1,400,000 இசைத் துணுக்குகளும் இடம் பெற்றிருந்தன. புத்தக அலமாரிகளின் மொத்த நீளம் 414 மைல்களாகும். காண் போர் கருத்தைக் கவரும் வகையில் உயர்ந்து விளங்கும் காங்கிரசு நூலகத்தில், ஒரே நேரத்தில் 300 மக்கள் இருந்து படிப்பதற்குரிய வசதிகளுடன் கூடிய முப்பது படிப்பகங் களும், எல்லா வசதிகளும் நிரம்பிய 200 ஆய்வுக் கூடங் களும் இருப்பது வியக்கத்தகு செய்தியாகும்.

16 வயதிற்கு மேற்பட்ட எவரும் இந்நூலகத்திற்கு வருவதற்குரிய தகுதி உடையவர்கள் என்றும், ஒவ்வொரு வாரத்திலும் ஞாயிற்றுக் கிழமை சிறந்த நாளாகுமென்றும் அன்று 2000-க்கு மேற்பட்ட மக்கள் நூலகத்திற்கு வந்து செல்கின்றனர் என்றும் அமெரிக்கச் செய்தி இதழ் ஒன்று கூறுகின்றது. நூலகக் கூட்டுறவு முறைக்கு இந்நூலகம் இன்று சிறந்த எடுத்துக்காட்டாய் இலங்குகின்றது. அமெரிக்க நாட்டுப் பல பெரிய நூலகங்களின் கூட்டுற வினல் காங்கிரசு நூலகம் தயாரித்துள்ள பொது நூற் பட்டியின் மூலமாய் (union catalogue) எவரும் எந்தப் புத்தகத்தினையும் எங்கிருந்தாலும் பெற்றுக்கொள்ளலாம். எல்லா நூலகங்களுக்கும் இந்நூலகத்திலிருந்து புத்தகங் கள் கடனாக அனுப்பப்படுகின்றன. கையெழுத்துச் சுவடி களிலிருந்தும் சில அரிய நூல்களிலிருந்தும் ஒரு சி-

பகுதிகளை மாத்திரம் பெற விரும்புகின்றவர்கள் காங்கிரசு நூலகத்திற்கு எழுதினால் அங்கு அப் பகுதிகள் படமெடுக்கப்பட்டு சுருள் படமாக அனுப்பப்படுகின்றன. அதற்குரிய செலவுத் தொகையினை நாம் அனுப்பி விடுதல் வேண்டும். இந்நூலகத்தின் மற்றொரு சிறந்த செயல் கண்ணில்லா மக்களுக்குச் செய்யும் தொண்டாகும். அவர்களுக்கென்று ஊற்றெழுத்துக்களாலாய நூற்கள் ஆண்டுதோறும் வெளியிடப்படுகின்றன. இதற்காக அரசாங்கம் ஆண்டிற்கு 100,000 பவுன்கள் செலவிடுகின்றது. மேலும் பேசும் நூற்பதிவுகள் தயாரிப்பதற்கு 250,000 பவுன்கள் வருடந்தோறும் செலவழிப்பதற்கு நூலகச் சட்டம் இடந்தருகின்றது. இத்துடனில்லாது 5000 க்கு மேற்பட்ட நாடோடிப் பாடல்களை ஒலிப்பதிவு செய்து மக்களுக்கு மலிவான விலைக்குக் கொடுக்கின்றனர்.

ஒரு நூலகத் தலைவரும், சில பணியாட்களுமே வேலை செய்த காங்கிரசு நூலகத்தில் இன்று ஒன்பதிற்கு மேற்பட்ட நூலகத் தலைவர்களும், ஒரு நூலகத் துறைத் தலைவரும் 1500 பணியாட்களும் பணி புரிகின்றனர். தற்பொழுது இந்நூலகத்தின் துண்டுப் பிரசுரங்கள், நூற்களின் தொகுதிகள் 90 லட்சமும் கையெழுத்துச் சுவடிகளின் தொகுதிகள் 1 கோடியே 19 இலட்சத்து 70 ஆயிரமும் இசைத் துணுக்குகளின் தொகுதிகள் 19,81,000 மும் இசைத் தட்டுகள் 122, 134 ம், அசையும் படக் காட்சிப் படச் சுருள்கள் 11,955 ம், சித்திரங்களின் தொகுதிகள் 575,083-ம், ஒளி நிழற் படங்களின் தொகுதிகள் 936,412-ம் ஆகும்.

அமெரிக்க நாட்டு அரசியல் பத்திரங்கள், அரசியல் உரிமை வெளியீடு, அரசியல் செயல் வகைகள், அரசியலறிஞர்களது கையெழுத்துச் சுவடிகள் இவை அனைத்தும் இந்நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதால் "காங்கிரசு

நூலகத்தினை" அமெரிக்க நாட்டுக் கருவூலம் என்று கூறினும் மிகையாகாது.

## 4. இலண்டன் பொருட்காட்சிச் சாலை நூலகம்!

இலண்டன் மாநகரிலுள்ள பொருட்காட்சிச் சாலை நூலகம், உலகில், பெரிய நூலகங்களில் ஒன்றாகக் கருதப் படுகின்றது. தாவர விஞ்ஞானியும், மருத்துவரும் ஆகிய சர். ஹேம்ஸ் லோன், நாட்டிற்கு நன்கொடையாகக் கொடுத்த நாணயங்கள், சித்திரங்கள், பதக்கங்கள் முதலி யன இப்பொருட்காட்சிச் சாலை சிறந்து விளங்குதற்குரிய காரணமாக அமைந்தன. முதலில் "மாண்டேகு இல்லம்" என்ற கட்டிடத்தில் இருந்த இப் பொருட்காட்சிச் சாலை கி. பி. 1847 ல் இதற்கென்று கட்டப்பட்ட புதுக் கட்டிடத் திற்கு மாறியது. இப் பொருட்காட்சிச் சாலையில் துணை அதிகாரியாகப் பணியாற்றிய அந்தோணியோ பானிசி என்பவரது முயற்சியால் கி. பி. 1854 ல் வட்ட வடிவமான படிப்பகமும் எஃகு அலமாரிகளும் கொண்ட புதுக் கட்டிட மொன்று கட்டப்பட்டது. இக் கட்டிடத்திற்றான் இன் றைய நூலகம் விளங்குகின்றது. ஐம்பது லட்சத்திற்கு மேற்பட்ட நூல்களும், அறுபதினாயிரத்திற்கு மேற்பட்ட கையெழுத்துச் சுவடிகளும், ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட அட்டவணைகளும் படங்களும், இன்று இந்நூலகத்தில் இருக்கின்றன. இந்நூலகத்திலுள்ள புத்தக அலமாரி களின் மொத்த நீளம் ஐம்பத்தைந்து மைல்களாகும். இந் நூலகத்தில் ஏறத்தாழ ஒன்றேகால் லட்சம் கீழை நாட்டுப் புத்தகங்களும், பதினாயிரத்திற்கு மேற்பட்ட கீழை நாட்டுக் கையெழுத்துச் சுவடிகளும் உள்ளன.

## 5. பெல்வடீர் நூலகம்!

கல்கத்தா நகரில் கவின் பெற இலங்கும் இந்திய நூல கந்தான் இன்று இந்தியப் பெரு நூலகமாகும். மேலும்

இந்நூலகம் ஆசியப் பெரு நூலகங்களில் ஒன்ருகவும் எண்ணப்படுகின்றது. இந்திய நாட்டுக் கவர்னர் செனரல்களில் ஒருவரான கர்சன் பெரு மகனுரால் கி. பி. 1903 ம் ஆண்டு சனவரி மாதம் முப்பதாவது நாள் கல்கத்தா நகரில் தொடங்கப்பட்ட இம்பீரியல் நூலகமே, தற்பொழுது நமது நாட்டின் மிகப்பெரிய தேசீய நூலகமாக விளங்குகின்றது.

கி. பி. 1835 ல் கல்கத்தாவில் வாழ்ந்த அறிஞர்களிற் சிலர் ஒன்றுகூடி நூலகம் ஒன்றினைத் திறப்பதற்குத் திட்டம் தீட்டியதோடமையாது, டாக்டர் கிராண்ட் என்ற பெரியார் இல்லத்தில் கி. பி. 1836 ல் ஒரு பொது நூலகத்தினைத் திறந்தனர். இந்நூலகத்தினைத் தோற்றுவித்தவர் இளவரசர் துவாரகநாத் தாகூர் ஆவர். கி. பி. 1891 ல் கர்சன் பிரபு கல்கத்தா மாநிலச் செயலகத்தார் நூலகங்களையெல்லாம் ஒன்று சேர்த்து இம்பீரியல் நூலகத்தை ஏற்படுத்தவே கல்கத்தா பொது நூலகம் இந்நூலகத்தோடு இணைக்கப்பட்டது. கர்சன் பெருமகனுரால் கொண்டு வரப்பட்ட சட்டத்தின்படி எல்லா அரசாங்க நூலகங்களும் இந்திய அரசாங்கத்தின் கீழ் வந்தன. மேலும் இம்பீரியல் நூலகமானது பொதுமக்கள் நூலகமாக மாறியது. மாக்ஃபர்லேன் என்பவர் முதல் நூலகத் தலைவராக நியமிக்கப்பட்டார். அரசாங்க ஆதரவிலும் வைசிராயின் பாதுகாவலிலும் இந்நூலகம் வளர்ந்ததால் இந்திய நாட்டில் வெளியிடப்பட்ட அத்தனை அரசாங்க வெளியீடுகளும் இந்நூலகத்தில் இடம் பெற்றன. அச்சகப் பதிவுச் சட்டத்தினுல் (Press act) வங்காளத்தில் வெளியான இலக்கியங்களெல்லாம் இந்நூலகத்திற்கு அனுப்பப்பட்டதால் இந்நூலகம் விரைவிற் சிறந்ததொரு நூலகமாக விளங்கலாயிற்று.

கி. பி. 1949 க்கு முன் இந்நூலகம் ஒரு நிலையான கட்டிடத்தில் இருந்ததில்லை. கி. பி. 1902 லிருந்து மெட்கா

மண்டபத்தில் விளங்கிய இந்நூலகம் கி. பி. 1923 ல் கல்கத்தா மாநிலச் செயலகத்தார் கட்டடத்தில் இருந்த அயல்நாட்டு இராணுவத்தினர் இருந்த பகுதிக்கு மாற்றப்பட்டது. இரண்டாம் உலகப் போர் நடக்கும்போது கி. பி. 1942 ல் இந்நூலகம் சுபா குசும் கட்டடத்திற்கு மாறியது. ஆனால் கி. பி. 1948 ல் மறுபடியும் பழைய கட்டடத்திற்கே வந்தது. 29000 சதுர அடி பரப்புள்ள இக் கட்டடத்தில் விளங்கிய நூலகம் நாடோறும் வளர்ந்து பெரிதாகவே இடம் காணாமையால் கி. பி. 1949 ல் இன்று இந்நூலகம் இருக்கும் 'பெல்வடீர்' கட்டடத்திற்கு (Belvedere Mansion) மாற்றப்படவே, அன்று தொட்டு மக்கள் இம்பீரியல் நூலகத்தினை பெல் வடீர் நூலகமென்று வழங்கலாயினர். இன்றைய நூலகக் கட்டடம் அமைதியும் அழகும் ஒருங்கே அமைந்த இடத்தில் பூத்துக் குலுங்கும் பூங்காவின் மத்தியில் எழில் பெற விளங்குகின்றது. கல்கத்தாவிலிருந்து ஆண்ட வைசிராய்கள் அனைவரும் இக் கட்டடத்தில்தான் தங்கி இருந்தனரென்றும், நம் நாட்டின் முதல் கவர்னர் செனரலான வாரன் ஹேஸ்டிங்சு இங்கு சில காலம் வாழ்ந்தாரென்றும், கி. பி. 1780 ல் மேசர் பாலியால் இக் கட்டடம் வாங்கப் பட்டதென்றும், பின் கி. பி. 1854 ல் கிழக்கிந்தியக் கம்பெனியார் 60,000 ரூபாய்க்கு இதனை வாங்கினரென்றும், 1912 வரை வங்காள கவர்னர்கள் மாதமொன்றிற்கு ரூ 500 கொடுத்து இங்கு வாழ்ந்து வந்தனரென்றும், சில காலம் சிறப்பு மிக்க சித்திர-சிற்ப மண்டபமாய் இக் கட்டடம் விளங்கியதென்றும் வரலாறு கூறுகின்றது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இக் கட்டடம் 'சூரட்' நதியின் வாராவதியை நோக்கி அமைந்துள்ளது. நெடிய சன்னல்கள் பல இருப்பதால் இயற்கை வெளிச்சமும் காற்றும் இக் கட்டடத்தில் அதிகம். சர் ஆண்ட்ரூக் ரேசர் கட்டிய நடன மன்றம் இன்று நூலகத்தின் முக்கிய

பகுதியாய் விளங்குகின்றது. இம் மன்றத்தின் இரு மருங்கிலும் சுவரில், பல துறையிலும் ஆராய்ச்சி செய்வோருக்கு வசதியாக அலமாரிகள் பதித்துத் தேவையான நூல்களைத் தனியே வைத்துள்ளனர். நடக்கும் பொழுது ஒலி ஏற்படாமலிருப்பதற்காகத் தரையில் கம்பளம் விரித்துள்ளனர். மேசை மேல் பரவினாற்போல் மின் விளக்குகள் அமைத்துள்ளனர். நடன மன்றத்துக்குக் கீழே உள்ள அறையில், புத்தகங்கள், உருளும் அடுக்குப் பெட்டிகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அடுக்குப் பெட்டிகள் தண்டவாளத்தின் மீதோ அல்லது இவைகளுக்கென்று அமைத்த, பள்ளங்களிலோ உருளைகள் பதிய ஓடுகின்றன. 50′ × 40′ அளவுள்ள ஒவ்வொரு அறையிலும் உலோகத்தாலான 22 வரிசை தட்டுகளிருக்கும். ஒவ்வொரு தட்டிலும் 5000 க்கு மேற்பட்ட நூல்களிருக்கும்.

இந்தியா குடியரசான பின் கி. பி. 1948 முதல் இப்பீரியல் நூலகம், நம் நாட்டின் தேசிய நூலகமாய் விளங்குகின்றது. இரண்டு லட்சம் ரூபாய் செலவில் பெல்வெடீர் கட்டிடமானது, சிறந்ததொரு நூலகக் கட்டிடமாய் மாற்றி அமைக்கப்பட்டது. 1945–46 ஆம் ஆண்டு அரசாங்கம் இந்நூலகச் செலவிற்கு ரூ 1,38,000 ஒதுக்கி யிருந்தது. 1951-52 ல் ரூ 3,78,110 இந்நூலகச் செலவிற்கு அரசினரால் தரப்பட்டது. இந்திய மாகாணங்கள் அனைத்திலும் வெளியாகும் நூல்களனைத்தையும் வாங்கும் பொருட்டு ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகை செலவிடப்பட்டது.

இந்நூலகத்திற்கு நன்கொடையாகப் பொருளும் நூல்களும் வழங்கியவர்கள் பலராவர். புகார் (Buhar) சமீன்தார் தன்னிடமிருந்த உருது - பார்சி மொழிகளில் எழுதப்பட்ட நூல்கள் பலவற்றையும், ஏட்டுச் சுவடிகள் எண்ணிறந்தனவையும், இந்நூலகத்திற்கு நன்கொடையாகக்

கொடுத்துதவியது குறிப்பிடத்தக்கதாகும். சர் ஆசுடோசு முக்கர்சியினது குடும்பத்தினர் தங்களிடமிருந்த 80,000 நூற்களையும் இலவசமாகக் கொடுத்துதவினர். பெர்காம் பூர் டாக்டர் ராம்தாசு சென் என்பவர் சேகரித்து வைத்திருந்த 3500, வங்காள வடமொழி நூல்கள் இதுபோன்று இந்நூலகத்திற்கு அளிக்கப்பட்டன. ஹைதராபாத்திலிருந்து பிரிட்டிசு பிரதிநிதியின் அலுவலகத்திலிருந்த 4000 நூல்கள் இந்நூலகத்திற்குத் தரப்பட்டுள்ளன. மேலும் விலைக்கு வாங்கப்பட்ட கையெழுத்துச் சுவடிகளும், சீன வெளியீடுகளும், இந்நூலக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின.

இன்று இந்நூலகத்தில் 1,50,000 நூல்களும் 2000 கையெழுத்துச் சுவடிகளும் உள்ளன. 500 க்கு மேற்பட்ட, வார—மாத—நாளிதழ்கள் வரவழைக்கப்படுகின்றன. மத்திய, மாகாண, அரசாங்க வெளியீடுகள் யாவும் இந்நூலகத்தில் இடம் பெறுகின்றன. இந்நூலகம் காலை 7 மணியிலிருந்து இரவு பத்துமணி வரை மக்களுக்காகத் திறந்திருக்கும். ஆண்டு தோறும், 75,000 க்கு மேற்பட்ட மக்கள், இந்நூலகத்திற்கு வந்து செல்கின்றனர் என்று இந்நூலக அறிக்கை ஒன்று கூறுகின்றது.

## நூலகத்தார்க்கு

[குறிப்பு: இன்று நந்தமிழ் நாட்டில் இல்லங்கள் தோறும், சிற்றூர்கள் தோறும், பள்ளிகள் தோறும் நூலகங்கள் விளங்குகின்றன. இத்தகைய நூலகங்களை உருவாக்குகின்றவர்க்கு உதவியாக இருத்தற்பொருட்டு இப்பகுதியில் சில குறிப்புக்களைத் தருகின்றேன். இக் குறிப்புக்கள், சிறு நூலகங்களை நடத்துவோர்க்குப் பெரிதும் பயன்படுமென எண்ணுகின்றேன்.]

1 நூற்களைப் பதிவு செய்தல்:

புத்தம் புதிய நூற்கள் விற்பனையாளரிடமிருந்து வந்தவுடன், முதலில் நாம் கேட்ட புத்தகங்கள் தானே அவைகள் என்பதைச் சரி பார்த்தல் வேண்டும். மேலும் நாம் கூறிய நிபந்தனைகளின்படி அப்புத்தகங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிதல் வேண்டும். அடுத்து விலைச் சீட்டில் போட்டிருக்கும் விலையும், புத்தகத்தில் போட்டிருக்கும் விலையும் சரிதானா என்பதை ஒத்திட்டுப் பார்த்தல் வேண்டும். இறுதியாக, புத்தகங்கள் பழுதுபடாமலிருக்கின்றனவா, என்பதைக் கவனித்தல் வேண்டும். மேற்கூறியவைகள் யாவும் சரியாக இருந்தால், புத்தகங்களை, ஒவ்வொன்றாய், பின்வரும் தலைப்புக்கள் அச்சிடப்பட்ட நூலடங்களில், (accession register) பதிவு செய்தல் வேண்டும்.

1. பதிவெண் (Accession number or serial number)
2. பதிவு செய்யப்படும் நாள் (Date of Accessioning)
3. புத்தகத்தின் ஆசிரியர்
4. புத்தகத்தின் தலைப்பு (Title)
5. புத்தகப் பதிப்பகமும், பதிப்பித்த ஆண்டும்.
6. நூல் விற்பனையாளர் (Supplier)
7. புத்தகத்தின் விலை
8. விலைச் சீட்டின் எண் முதலியன (Invoice No. etc)
9. புத்தகத்தின் வகைப்படுத்திய எண் (Call No.)
10. நூலக அலுவலரின் குறிப்புக்கள் (Remarks)

நூலடங்கள், நூலக ஆட்சி முறைக் கணக்கு ஏடுகளில் (Library administrative records) தலைமை வாய்ந்ததும், இன்றியமையாததுமாகும். நூலகத்திற்கு வரும் ஒவ்வொரு

நூலினுடைய வரலாறு முழுமையும் எடுத்துரைக்கும் ஏடு இது ஒன்றுதான். நூற்களைப் பதிவு செய்து முடிந்ததும், அடையாள முத்திரை (Library seal) யினை, நூலினது தலைப்புப் பக்கத்திலும், இறுதிப் பக்கத்திலும், படங்களும், அட்டவணைகளும் அச்சிடப்பட்டிருக்கும் பக்கங்களிலும், இடுதல் வேண்டும். முத்திரையில், நூலகத்தின் பெயரும், ஊரும், அதனது மையத்தில், பதிவெண், தெய்தி என்ற இரண்டு வார்த்தைகளும் (ஒன்றின் கீழ் ஒன்ருய்) பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். பதிவெண்ணும், தெய்தியும் அவைகளுக்கு நேராக முத்திரையின் மையப் பகுதியில், முத்திரையிட்டபின், நாம் எழுதுதல் வேண்டும். தலைப்புப் பக்கத்தில் (Title page) மாத்திரம் இதனை எழுதினுல் போதும். பின்னர், நூற்களைப் பொருள் வாரியாக (Subject) வகைப்படுத்தி (classification) அதற்குரிய எண்களைக் கொடுத்தல் வேண்டும். அவ்வெண்கள் நூற்களின் தலைப்புப் பக்கத்தின் பின்புறத்தில் நடுமையத்தில் பென்சிலால் எழுதப்பட வேண்டும். மேலும், வட்ட வடிவமான, சீட்டினை (round lable) ஒவ்வொரு புத்தகத்தின், முதுகின் (Spine) கீழ்ப் பகுதியில் ஒட்டி, அச்சீட்டில் புத்தகத்தின் வகைப்படுத்திய எண்ணை எழுதுதல் வேண்டும். பின்னர் நூற்களை அதற்குரிய இடங்களில் அடுக்கிவைத்தல் வேண்டும். ஆங்கில நூற்களைத் தனி இடத்திலும், தமிழ் நூற்களைத் தனி இடத்திலும், பொருள் வாரியாக அலமாரிகளில் அடுக்கி வைத்தல் வேண்டும். திறந்த அலமாரிகளே, சிறந்ததென, இன்று, நூலக அறிஞர்கள் கருதுகின்றனர். நூற்களை, வகைப்படுத்திய எண்களின் முறைப்படி, அடுக்கவேண்டும்.

**நூற்களை வகைப்படுத்துதல்:**

நூற்களைப் பொருள் வாரியாகப் பிரித்து, அதன் பின்னர் அதற்குரிய எண்களை வழங்குதலே நூற்களை

வகைப்படுத்துதல் ஆகும். இதனை ஆங்கிலத்தில் "Classification" என்பர். நூற்களை வகைப்படுத்தும் முறைகள் எத்தனையோ உள்ளன. எனினும் "டுயிடெசிமல்" முறையும், டாக்டர் ரங்கனுதனது "கோலன்" முறையுமே, தலை சிறந்தவெனக் கருதப்படுகின்றன. "கோலன் முறையினைக்" கண்டு பிடித்த பெரியார், தமிழராகும். அவரது முறையினைக் கொள்ளுதலே தமிழர்களாகிய நமக்குச் சாலப் பொருந்தும். இனி அவரது முறையினைச் சுருக்கிக் கீழே தருகின்றேன்.

| | | | |
|---|---|---|---|
| 1 | Bibliography | O | English Literature |
| 2 | Library Science | O-: 1 | English poetry |
| A | Science (General) | O-: 2 | ,, Drama |
| B | Mathematics | O-: 3 | ,, Fiction |
| C | Physics | O-: 4 | ,, Essays |
| D | Engineering | P | Linguistics |
| E | Chemistry | Q | Religion |
| F | Technology | R | Philosophy |
| G | Biology | S | Psychology |
| H | Geology | T | Education |
| I | Botany | U | Geography |
| J | Agriculture | V | History |
| K | Zoology | W | Political Science |
| L | Medicine | X | Economics |
| M | Useful arts | Y | Social Science |
| Δ | Spiritual experience & mysticism | Z | Law |
| N | Fine arts | | |

தமிழ் நாட்டுச் சிறு நூலகங்களில், ஆங்கிலப் புத்தகங்கள் பெருவாரியாக இடம் பெறுததால், 'மேலே கொடுக்கப்பட்ட குறியீடுகளே போதும். பெரிய நூலகங்களுக்குத்

தான் எண்ணிறந்த நூற்கள் வருமாதலால், 'கோலன் முறை' முழுமையும் பெரிய நூலகங்களுக்குத்தான் பெரிதும் பயன்படும். ஒரு பெரும் பிரிவுக்குரிய உட் பிரிவுகளுக்குரிய குறியீடுகளெல்லாம், சிறு நூலகத்தார்க்கு, அவசியமில்லை என்ற அளவில், அவைகளைப்பற்றி விளக்கம் கூறுது விடுக்கின்றேன்.

**வகைப் படுத்தும் முறை:**

உதாரணத்திற்கு வரலாற்றுப் பகுதியினை எடுத்துக் கொள்வோம். இப் பகுதியினைச் சேர்ந்த எந்த நூலுக்கும் 'V' என்ற எழுத்தினை வழங்குதல் வேண்டும். இனி இப் பகுதியில் எத்தனையோ நூற்கள் வாங்கப்படலாம். அவைகளுக்குள் வேற்றுமை தெரிதல் வேண்டும். அதற்குப்பின் வரும் முறையினை மேற்கொள்ளலாம்.

| | |
|---|---|
| முதலில் வாங்கும் வரலாற்றுப் புத்தகத்திற்குரிய எண் | $\frac{V}{1}$ |
| இரண்டாவது வாங்கும் ,, | $\frac{V}{2}$ |

இவ்வாறே ஒவ்வொரு புத்தகத்திற்கும் கொடுத்துச் செல்லுதல் வேண்டும். கீழே கொடுக்கப்பட்டிருக்கும் புத்தக எண், வரலாற்றுப் பகுதியில் அது எத்தனுவது புத்தகம் என்பதைக் கூறும். ஏதாவது ஒரு புத்தகம் இரண்டு பிரிவுகளாக (Part) இருந்தால் பின்வரும் முறையினைக் கொள்ளலாம். $\frac{V}{1}$ என்பதை எடுத்துக் கொள்வோம். முதல் பகுதிக்கு $\frac{V}{1}$ என்றும், இதனது இரண்டாவது பகுதிக்கு $\frac{V}{1\text{-}1}$ என்றும், மூன்ருவது பகுதிக்கு $\frac{V}{1\text{-}2}$ என்றும் கொடுத்தல் வேண்டும். இவ்வாறே தொடர்ந்து கொடுக்க

லாம். ஒரு புத்தகத்தின் மற்றொருபடி இருந்தால், அதற்கு முதல் கூறியதுபோல் தனி எண்ணை கொடுத்தல் வேண்டும்.

**Common Sub-divisions :**

| | |
|---|---|
| *a* | Bibliography |
| *f* | Map atlases |
| *k* | Cyclopaedias, dictionaries, concordances |
| *m* | Periodicals |
| *n* | Year books, directories, calendars, almanacs |
| *q* | Bills, acts, codes |
| *r* | Government, departmental reports and similar reports of corporate bodies |
| *s* | Statistics |
| *t* | Commissions, Committees |
| *u* | Travel |
| *v* | History |
| *w* | Biography, letters |
| *x* | Collected works, selections |

மேலே தரப்பட்டிருக்கும் எழுத்துக்களை எந்தப் பிரிவுடனும் சேர்த்து எழுதிக்கொள்ளலாம் உதாரணமாக, நாட்டுப் படத்தை எடுத்துக்கொள்ளலாம். நாட்டுப் படத்திற்குரிய எழுத்து 'f' ஆகும். தரை நூல் சம்பந்தப் பட்ட நாட்டுப் படமென்றால் 'Uf' என்று எழுத வேண்டும். 'U' என்பது தரை நூலைக் (geography) குறிக்கும். வரலாற்றுப் படமென்றால் "vf" என்று எழுத வேண்டும் 'v' என்பது வரலாற்றிற்குரியது. சஞ்சிகைக் குரியது 'm' ஆகும். விஞ்ஞான சஞ்சிகை என்றால் 'Am' என்று எழுத வேண்டும். இதுபோன்று முன்னே கூறப் பட்டிருக்கும் வகைப் படுத்தும் குறியீடுகளோடு, இங்கு கூறப்பட்டிருக்கும் பொதுக் குறியீடுகளை, ஒவ்வொன்றிற் கும் ஏற்பச் சேர்த்துக் கொள்ளலாம்.

# தமிழ் நூற்களை வகைப்படுத்தும் முறை

கோலன் முறையினை அடிப்படையாகக் கொண்டு
விரிவு செய்யப்பட்டது. தியாகராசர் கல்லூரி
நூலகத்தில் நடைமுறையிலுள்ளது.

**031:A** இலக்கணம்
031:AI இலக்கணம் இலக்கியம்
031:AII ,, பிற உரைநடை
இலக்கண நூல்கள்

**031:B** சங்க இலக்கியம்

**031:BI** பத்துப்பாட்டு
031:BI1 திருமுருகாற்றுப்படை
031:BI2 பொருநராற்றுப்படை
031:BI3 சிறுபாணாற்றுப்படை
031:B14 பெரும்பாணாற்றுப்படை
031:BI5 முல்லைப்பாட்டு
031:BI6 மதுரைக்காஞ்சி
031:BI7 நெடுநல்வாடை
031:BI8 குறிஞ்சிப்பாட்டு
031:BI9 பட்டினப்பாலை
031:BI10 மலைபடுகடாம்

**031:BII** எட்டுத்தொகை
031:BII1 நற்றிணை
031:BII2 குறுந்தொகை
031:BII3 ஐங்குறுநூறு
031:BII4 பதிற்றுப்பத்து
031:BII5 பரிபாடல்
031:BII6 கலித்தொகை
031:BII7 அகநாநூறு
031:BII8 புறநாநூறு

**031:BIII** பதினெண்கீழ்க்கணக்கு
031:BIII1 நாலடியார்
031:BIII2 நான்மணிக்கடிகை
031:BIII3 நாற்பது
031:BIII3a கார்நாற்பது
031:BIII3b களவழிநாற்பது
031:BIII3c இனியது நாற்பது
031:BII13d இன்னாநாற்பது
031:BIII4 நாலைந்திணை
031:BIII4a ஐந்திணை ஐம்பது
031:BIII4b ஐந்திணை எழுபது
031:BIII4c திணைமொழி ஐம்பது
031:BIII4d திணைமாலை நூற்றைம்
031:BIII5 திருக்குறள் [பது
031:BIII6 திரிகடுகம்
031:BIII7 ஆசாரக்கோவை
031:BIII8 பழமொழி
031:BIII9 சிறுபஞ்சமூலம்
031:BIII10 முதுமொழிக்காஞ்சி
031:BIII11 ஏலாதி
031:BIII12 கைந்நிலை

**031:C** காப்பியம்

**031:CI** பெருங்காப்பியம்
031:CI1 சீவகசிந்தாமணி
031:CI2 சிலப்பதிகாரம்
031:CI3 மணிமேகலை
031:CI4 வளையாபதி
031:CI5 குண்டலகேசி

031:CII சிறு காப்பியம்
031:CII1 சூளாமணி
031:CII2 உதயண காவியம்
031:CII3 யசோதர காவியம்
1:CII4 நாககுமார காவியம்
1:CII5 நீலகேசி

1:CIII பிற காப்பிய நூல்கள்
அமிர்தபதி
இரகுவமிசம்
சுவர்க்க நீக்கம்
தகடூர் யாத்திரை
நளவெண்பா
நைடதம்
பாரிகாதை
பெருங்கதை முதலி,

**301:D** இதிகாசம்
031:DI இராமாயணம்
031:DI1 வால்மீகி இராமாயணம்
031:DI2 கம்பராமாயணம்
031:DI3 பிற நூல்கள்
031:DII பாரதம்
031:DII1 வியாச பாரதம்
031:DII2 வில்லிபுத்தூரார் பாரதம்

031:DII3 பெருந்தேவனார் பாரதம்
031:DII4 பிற நூல்கள்

031:E புராணம்
031:EI புராணம் பொது
031:EII தலபுராணம்
031:EIII பிற புராண நூல்கள்
031:EIIIa மான்மீய நூல்கள்
031:EIIIb மகத்துவம், லீலை முதலிய பிற நூல்கள்

031:F சமய இலக்கியம்
031:FI திருமுறை
031:FI1 திருமுறைத்திரட்டு
அகத்தியர் தேவாரத் திரட்டு
031:FI2 சம்பந்தர் தேவாரம்
031:FI3 அப்பர் தேவாரம்
031:FI4 சுந்தரர் தேவாரம்
031:FI5 திருவாசகம், திருக்கோவை
031:FI6 திருவிசைப்பா, திருப் பல்லாண்டு
031:FI7 திருமந்திரம்
031:FI8 பதினோராந்திருமுறை
031:FI9 பிற நூல்கள்
031:FII நாலாயிரப்பிரபந்தம்
031;FII1 ஷை முதலாயிரம்
திருப்பல்லாண்டு
திருமொழி
திருப்பாவை
நாச்சியார் திருமொழி
பெருமாள் திருமொழி
திருச்சந்த விருத்தம்
திருமாலை
திருப்பள்ளி எழுச்சி
அமல நாதிப்பிரான்
கண்ணினுண் சிறுத்தம்பு
031:FII2 இரண்டாயிரம்: பெரிய திருமொழி
திருக்குறுந் தாண்டகம்
திருநெடுந் தாண்டகம்
031:FII3 மூவாயிரம்: இயற்பா
முதல் திருவந்தாதி
இரண்டாந் திருவந்தாதி
மூன்றாம் திருவந்தாதி
நான்முகன் திருவந்தாதி
திருவிருத்தம்
திருவாசிரியம்
பெரிய திருவந்தாதி
திருவெழு குற்றிருக்கை
சிறிய திருமடல்
பெரிய திருமடல்
031:FII4 நாலாயிரம்: திருவாய் மொழி
திருவாய் மொழி
இராமாநுஜ நூற்றந் தாதி
031:FIII பிற நூல்கள்

031:G. சிற்றிலக்கியம்
031:GI பிரபந்தத் திரட்டு
031:G2 அந்தாதி
031:G2a அந்தாதி
031:G2b பதிற்றந்தாதி
031:G2c பதிற்றுப்பத்தந்தாதி
031;G2d பூசை அந்தாதி
031:G2e யமகவந்தாதி
031:G2f வெண்பா வந்தாதி
031:G3 உலா
031:G3a உலா
031:G3b ஞான உலா
031:G4 கலம்பகம்
031:G5 காஞ்சி
031:G6 கோவை
031:G6a கோவை
031:G6b ஒருதுறைக் கோவை
031:G6c செய்யுட் கோவை
031:G6d ஞானக் கோவை
031:G6e மும்மணிக் கோவை
031:G6f வருக்கக் கோவை
031:G7a சதகம்
031:G7b சாதகம்
031:G8 சிந்து
031:G9 செய்யுள்
031:G10 தூது
031:G11 பத்து
331:G12 பரணி
031:C13 பள்ளு
031:G14 பாட்டு
031:G15 பிள்ளைத்தமிழ்
031:G16 மாலை
031:G16a மாலை
031:G16b புகழ்மாலை
031:G16c மணிமாலை
031:G16d இரட்டைமணிமாலை
031:GI6e மும்மணிமாலை
031:G16f நான்மணிமாலை
031:G16g நவமணிமாலை
031:G16h இணைமணிமாலை
031:G16i பாமாலை
031:G16j விண்ணப்பமாலை
…6k வெண்பாமாலை

| | |
|---|---|
| 031:G17 | வாழ்த்து |
| 031:G18 | விருத்தம் |
| 031:G18a | விருத்தம் |
| 031:G18b | சந்தவிருத்தம் |
| 031:G19 | வெண்பா |
| 031:G19a | வெண்பா |
| 031:G19b | கலிவெண்பா |
| 031:G19c | சிலேடைவெண்பா |
| 031:G19d | நீதிவெண்பா |
| 031:G19e | முதுநெறிவெண்பா |
| 031:G19f | முதுமொழிவெண்பா |
| 031:G20 | பிற பிரபந்த நூல்கள் |
| 031:G20a | அம்மானை |
| 031:G20b | ஊசல் |
| 031:G20c | ஆற்றுப்படை |
| 031:G20d | மஞ்சரி |
| 031:G20e | குறவஞ்சி |
| 031:G20f | பதிகம் |
| 031:G21 | தனிபாடற்றிரட்டு |
| 031:G22 | பிற நூல்கள் |
| **031:H** | நீதிநூல் & கவிதை |
| 031:HI | நீதி நூல் |
| 031:HII | கவிதை |
| **031:I** | திறனாய்வும் இலக்கிய வரலாறும் |
| 031:I1 | திறனாய்வு |
| 031:I2 | இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரை |
| 031:I3 | இலக்கிய வரலாறு |
| 031:I4 | மொழி வரலாறு |
| **031;J** | உரைநடை இலக்கியம் |
| 031:JI | இலக்கியம், காப்பியம், புராண உரை நடை |
| 031:JIa | இலக்கிய வசனம் |
| 031:JIb | காப்பிய வசனம் |
| 031:JIc | புராண வசனம் |
| 031:JII | கட்டுரைகள் |
| 031:JIIa | இலக்கியக் கட்டுரைத் தொகுதி |
| 031:JIIb | பிற கட்டுரைகள் |
| **031:K** | நாடகம், செய்யுள் உரை நடை |
| **031:L** | நவீனம், கதை, ஹாஸ்யக் கட்டுரைகள் |
| 031:L1 | நவீனம் |
| 031:L2 | கதை, சிறு கதைகள் |
| 031:L3 | ஹாஸ்யக் கட்டுரைகள் |
| **031:M** | வாழ்க்கை வரலாறு |
| 031:MI | பொது வாழ்க்கை வரலாறு |
| 031:M2 | வாழ்க்கை வரலாற்றுத் தொகுதி |
| 031:M3 | புலவர் வாழ்க்கை வரலாற்று நூல்கள் |
| **031:N** | வரலாறு அறிவியல் |
| 031:N1 | வரலாறு |
| 031:NIa | வரலாற்று நூல்கள் |
| 031:NIb | கல்வெட்டு சாசனங்கள் |
| 031:NIc | சிற்பக்கலை, கோவிற்றிருப்பணி |
| 031:NII | அறிவியல் |
| **031:O** | தத்துவம் |
| 031:O1 | தத்துவம், பொது, தருக்கம், நியாயம் |
| 031:O2 | வேதாந்த சாஸ்திரம் |
| 031:O2:1 | வேதாந்த சாஸ்திரம் இலக்கியம் |
| 031:O2:2 | ,, பிற நூல்கள் |
| 031:O3 | ஐக்கிய வாதசைவ சாஸ்திரம் |
| 031:O4 | சரியை, கிரியை, யோகம், ஞானம் |
| 031:O5 | சைவசித்தாந்த சாஸ்திரம் |
| 031:O5:1 | திருவுந்தியார் |
| 031:O5:2 | திருக்களிற்றுப்படி |
| 031:O5:3 | சிவஞானபோதம் |
| 031:O5:4 | சிவஞானசித்தியார் |
| 031:O5:5 | இருபா இருபஃது |
| 031:O5:6 | உண்மை விளக்கம் |
| 031:O5:7 | சிவப்பிரகாசம் |
| 031;O5:8 | திருவருட்பயன் |
| 031:O5:9 | வினாவெண்பா |
| 031:O5:10 | போற்றிப் பஃறொடை |
| 031:O5: 1 | கொடிக்கவி |
| 031:O5:12 | நெஞ்சுவிடு தூது |
| 031:O5:13 | உண்மைநெறி விளக்கம் |
| 031:O5:14 | சங்கற்ப நிராகரணம் |
| 031:O6 | பண்டார சாத்திரம்-14 |
| 031:O7 | சித்தாந்தம்-பிற நூல்கள் |
| 031:O8 | பிற சாத்திர நூல்கள் |
| **031:P** | பிற நூல்கள் |
| 031:P1 | அரசியல் |
| 031:P2 | பொருளாதாரம் |

| | |
|---|---|
| 031:P3 | பயிற்றொழில் |
| 031:P4 | குடிசைத் தொழில் |
| 031:P5 | மருத்துவம் |
| 031:P6 | பிரயாண நூல்கள் |
| 031:P7 | சங்கீத நூல்கள் |
| 031:P8 | சோதிட நூல்கள் |
| 031:P9 | கல்வி |
| 031:P10 | உடற்பயிற்சி |
| 031:P11 | சமய நூல்கள் |
| 031:P12 | பிற நூல்கள் |
| **031:Q** | **உடனுதவும் நூற்கள்** |
| 31:Q1 | லெக்சிகன, கலைக் களஞ்சியம், அபிதான சிந்தாமணி முதலியன |
| 031:QIa | அகராதி |
| 031:QIb | நிகண்டு |
| 031:QII | பிற நூல்கள் |
| 031:QIII | சஞ்சிகைகள் |

## உதாரணம்

| | |
|---|---|
| அரசியல்: | 031:P1 |
| முதலில் வாங்கும் நூல்: | 031:P1 / 1 |
| 2வது நூல்: | 031:P1 / 2 |

இது போன்று, முன் கூறியது போன்று, புத்தக எண்கள் கொடுக்கப்பட வேண்டும்.

031 என்பது தமிழ் இலக்கியத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள "கோலன் குறியீடு" 'O' இலக்கியமாகும். 31 என்பது மொழியினைக் குறிக்கும் எண்ணாகும். 3 என்பது திராவிட மொழியினத்தைக் குறிக்கும். '31' என்பது அவ்வினத்தின் தொன்மை வாய்ந்த மொழியாகிய தமிழைக் குறிக்கும்.

# "விஞ்ஞானமும் நாமும்"

## என்ற முதலாவது பண்புப் புத்தகத்திற்கு 'ஹிந்து'ப் பத்திரிகையின் மதிப்புரை.

'பென்குவின்' வரிசையைப் போலத் தமிழிலே 'பண்புப் புத்தகம்' என்னும் வரிசையில் கலை, விஞ்ஞானம் இலக்கியம் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைத் தமிழ் நாட்டுப் பாமர மக்களின் நலனுக்காக உதவும் வகையில் புத்தகங்களை வெளியிடுவது இந்தப் பதிப்பகத்தார்களின் நோக்கம்.

அந்த வரிசையிலே இந்த நூல் முதலாவதாக வெளி வந்திருக்கிறது இதில் விஞ்ஞான கண்டுபிடிப்புகளும், அவை மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்குப் புரியும் சேவைகளும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இதில், 'சோடா தண்ணீரி'லிருந்து 'ஒளியின் வேகம்' முதலிய பலதரப்பட்ட கட்டுரைகள் 12 அடங்கி இருக்கின்றன. டி. டி. ட்டி., பிளாஸ்டிக், தாவர நெய், பெட்ரோலியம், கண்ணாடி, வைரங்கள், கட்டிடங்களின் ஒலி அமைப்பு முதலிய கட்டுரைகள் அவற்றின் விஞ்ஞான விஷயத் தன்மையை நோக்கும்போது மிகவும் தெளிவாக எழுதப்பட்டுள்ளன என்று கூறவேண்டும். விஞ்ஞானக் கல்வி அறியாதவர்களும் சுலபமாகப் புரிந்து கொள்ளும் படியாகப் பேச்சு வழக்கு நடையிலேயே கட்டுரைகள் யாவும் எழுதப்பட்டுள்ளன.

புத்தகத்தின் தோற்றம், அமைப்பு, அச்சு அனைத்தும் கவர்ச்சிகரமாக அமைந்துள்ளன. சில விஞ்ஞானக் கட்டுரைகளுக்குத் தகுந்த புகைப்படங்கள், அவைகளை விளக்கும் சித்திரங்கள் இந்த நூலில் சேர்க்கப்பட்டு இருந்தால் இந்த நூலின் உபயோகம் இன்னும் அதிகரித்திருக்கும். அதனால், விலை சற்று உயர்த்துவதாக இருந்தாலும் பாதகமில்லை.

இதைப் போன்ற விஞ்ஞான அறிவை, எளிய முறையிலே எடுத்துரைக்கும் புத்தகங்கள் முதியோர் கல்வித் திட்ட ஏற்பாட்டிற்கு மிகவும் பயன் தரத்தக்கது.

# இந் நூல்

விஞ்ஞான அறிவும் கல்வியில் வளமும் பெருகுவதற்கு நூல் நிலையங்கள் மிக இன்றியமையாதன. தொழில், விஞ்ஞானம் இவற்றில் வளம் பெற்றுள்ள மேலைநாடுகளில் நூல் நிலையங்களைக் கண்ணேபோல் போற்றி வளர்த்து வருகிறுர்கள். நம் நாட்டிலும் அறிவுச் செல்வம் தழைக்க முயற்சிகள் பல நடைபெற்று வருகின்ற இத்தருணத்தில் இந் நூல் பெரிதும் பயன் தரத் தக்கதாக இருக்கும். இதில் நூல் நிலையங்கள் ஏற்பட்ட வரலாறு, வெளிநாடுகளில் நூல் நிலையங்கள் வளர்ச்சி பெறும் முறை இவை பற்றி விளக்குவதுடன் நமது நாட்டிற்கு ஏற்ற முறைகளையும் விளக்கமாக எடுத்துச் சொல்கிறது.


## பண்புப் புத்தகங்கள்

மதுரைப் பண்புப் புத்தகாலயத்தார் இவ் வரிசையில், இலக்[illegible]
கலை, விஞ்ஞானம், சட்டம், சரித்திரம், ஆராய்ச்சி முதலிய பல துறைக[illegible]
நூல்கள் வெளியிடுவார்கள். எல்லோரும் வாங்கிப் படிப்பதற் கேற்ப [illegible]
வான விலையும், நூல் நிலையங்களுக் கேற்ற உயர்வான அமைப்பும் உ[illegible]
யிருக்கும். இதன் சாதாரண அளவுப் பதிப்பின் விலை ரூ. 1–4–0. இரு[illegible]
குப் பதிப்பின் விலை ரூ. 2–8–0. பண்புப் புத்தகங்களின் விற்பனை உ[illegible]
ஸ்டார் பிரசுரத்தைச் சேர்ந்தது. பண்புப் புத்தகாலயம் எவ்விதக் க[illegible]
போக்குவரத்தும் வைத்துக் கொள்ளமாட்டார்கள். வேண்டுவோர் ஸ்[illegible]
பிரசுராலயத்தாருக்கே எழுதவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறு[illegible]